# தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா?



தமிழண்ணல்

அவர்கள் மொழிக்குச் செல்வாக்கு ஏற்பட்டபோது, தாமும் அம்மொழியைக்கற்றுக்கொண்டு, தொழிலில் போட்டியிட்டு வென்றவர்கள்.

சிவாச்சாரியர்கள் தங்களைப் பிராமணர் என்று கூறிக்கொண்டாலும், அவர்களை ஸ்மார்த்த பிராமணர்கள் தங்களவர் என ஏற்பதில்லை. இவர்கள் ஒருங்கிருந்து உண்பதில்லை; மண உறவுகளும் இல்லை. சிவ பிராமணர்களை, ஆகமங்கள் மிகவுயர்த்திப் பேசுகின்றன. சிவதீட்சை இவர்களுக்குரியது; ஸ்மார்த்தர்களுக்கு சிவ தீட்சை பெறும் உரிமை இல்லை.

**The Sivacharya also are grievously to blame in this regard. They aped the Vedic or Smartha brahmin in all matters and tried to 'climb' in the ladder of caste, by calling themselves brahmins, although the smartha brahmins refused to rocognize their brahminhood; they do not interdine with the Sivacharyas nor do the two inter-marry even to this day. But the Agamas emphatically declare that the sivacharya is far superior to the (mere) brahmin since he is the Siva-brahmin. Siva diksha is the exclusive privilege of the Saivas including the Sivacharya. Generally the smartha brahmin is not qualified for Siva diksha (ix).**

சிவாச்சாரியார்கள் தாம் தமிழர்களே என்பதை உணர்ந்து, தமிழ்த் தெய்வத் திருமுறைகளைக் கற்றுத் தமிழில் வழிபாடுசெய்து, மக்களிடையே ஒரு மதிக்கத் தக்க பெருநிலையை அடைய வேண்டுமென்று, மு.அருணாசலனார் பேரன்புடன்வேண்டுகிறார். அல்லாமல் ஸ்மார்த்தர்களைப் போலத் தமிழைக் கைவிடுவது தற்கொலைக்கு ஒப்பாகும். நம் பழங்கால அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் மற்றும் நாயன்மார்களைப் போல அவர்கள் உயரவேண்டுமென வாழ்த்துகிறார்.

'திருஞான சம்பந்தர் தொடங்கிய போராட்டம் சமணர், பௌத்தர்களுடன் மட்டுமன்று, என்பதையும் குறிப்பாக உணர இது இடந்தருகிறது. அவர்களுடன் இவர் நடத்திய போராட்டம் வெளிப்படையானது. சிவ பரம்பொருளை ஏற்றுக்கொள்ளாத வைதிகர்களுடன் செய்த போராட்டம் மறைமுகமானது' *(17)*.

பிற்பட்ட கால வேதங்களிலேதான் 'ருத்ரசிவன்' என்ற பெயர் காணப்படுகிறது. 'பிற்காலத்து வந்த ஆரியர் சிவனையும் தமது தெய்வங்களோடு சேர்த்துக் கொண்டாரென்பதிற் சந்தேகமில்லை' *(ந.சி.க.பக்.15)*.

## இருவகை வேதியர்
## இருவகை வேதம்

''இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் வேதம் பரவிநின்று செல்வாக்குப் பெற்றிருந்தது உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் அப்பகுதியில் வாழ்ந்த அனைவரும் வேதங்களை ஒப்புக் கொண்டார்கள் என்றும் கூறுவதற்கில்லை. வேதங்கள் நான்கு தொகுப்பினுள் அடங்கும் என்றாலும், அனைவரும் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார்கள் என்றும் உறுதியாகக் கூற முடியவில்லை. வேத வழிப்பட்ட ஆரியர்களுள் 350க்கும் மேற்பட்ட பிரிவுகள் இருந்தன என்றும் இப்பிரிவினர் ஒருவர் ஏற்பதை மற்றவர்கள் ஏற்காமல் இருந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது'' *(அ.ச.ஞா.பக். 46)*.

வேதங்களுக்குள் நுழைந்து உண்மை காண்பது, காலஆய்வு செய்வது யாவும் கடினமென்பர். அவை காலந்தோறும் பலரால் எழுதப்பட்டுச் சேர்க்கப்

பட்டனவாகவும் இடைச் செருகல்களாகவும் பகுத்தறிய முடியாமல் இருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆயினும் சிவனை, திருமாலை (அதாவது ஒரே ஒரு பரம்பொருளை) ஏற்காத வேதியர் ஒருவகை; இவ் வழிபாடுகளை உருவ வழிபாட்டுடன் ஏற்று, திராவிடரின் சடங்குகளிலும் கலப்புண்டவர் ஒருவகை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. பின்னே குறிப்பிட்டவர்கள் முதலில் 'ருத்ரசிவன்' எனவும் பிறகு சிவன் எனவும் படிப்படியாக ஏற்றனர் என்று தெரிகிறது. சிவன் வேத காலத்துக்கும் முற்பட்ட காலம் முதல் மக்களால் வழிபடப்பட்டவன். வேத குருமார்கள் வேறுவழியின்றியே மக்கள் நம்பிக்கைக்குத் திரும்பி, சிவனை ஏற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. என்னதான் வேதங்கள் பரவினாலும், வடஇந்தியா உட்பட மக்கள் அனைவரும் தங்களுக்குரிய சிவன், திருமால் வழிபாடுகளைக் கைவிட்டிலர். கொற்றவை வழிபாடும் (சக்தி வழிபாடு) காலூன்றி இருந்தது.

'வேதத் தெய்வக் கதைகளின் போக்கு' எனும் நூலில், ஆர்.என்.தாண்டேகர் எழுதிய கருத்துக்களின் அடிப்படையிலேயே அ.ச.ஞா. அவர்களும் தம் ஆய்வை எழுதியுள்ளார்.

'ஒரு காலகட்டத்தில் வேத வழக்கங்களும் வாழ்க்கை முறைகளும் முற்றிலும் அழிந்து மறைந்து விடுமோ என அஞ்சப்பட்ட நிலையில் அவர்களைச் சுற்றி இருந்த வேதமல்லாத சமய வழக்கங்கள், கொள்கைகள் என்பவற்றைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு, தம் வேத வழக்கங்களை நிலைநிறுத்த முயன்ற முயற்சியின் பயன்தான் இது. விக்கிரகத்தையும் பூஜையையும் கனவிலும்

எல்லாமே வடமொழி மயமாக்கப்பட்டன. இப்போது அவற்றை மீட்டுருவாக்கம் செய்ய நாம் பிறந்துள்ளோம்.

நாம் சமற்கிருத மொழிக்குப் பகைவர்கள் அல்லர். அம் மொழியை வைத்து நம்மை அழுத்தாமல் நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளவே இவ்வளவும் எழுதப்பெற்றது. இது நம் தற்காப்பு முயற்சியே. நாம் பார்ப்பனர்களுக்குப் பகைவர்கள் அல்லர். அவர்கள்தான், கடந்த கால வரலாற்று உண்மைகளை அறிந்து, மனம் மாறித் திருந்தவேண்டும்.

அவர்கள் செந்தமிழுக்குத்துணையாகும் அந்தணர்கள் ஆக வேண்டும். பரிதிமாற்கலைஞர்கள் ஆகவேண்டும். பாரதிதாசன் போற்றிய மாகவிஞர் பாரதி ஆகவேண்டும். தமிழ்த்தாத்தா உ.வே.சா. ஆகவேண்டும். பேரறிஞர் பி.டி.சீனிவாசர் ஆகவேண்டும். அதற்கு மாறாகத் தடம்மாறித் தடுமாறக் கூடாது.

ஆயிரம் பக்கங்களுக்கு மேல் விரித்தெழுதக் கூடிய ஒரு பெரும் வரலாற்றுச் செய்திகள் இவை. பல மடலங்களாகப் பலரால் எழுதப்பட வேண்டியவை.

நம் திருக்கோயில்களிலுள்ள இறைவன் இறைவியரது தூய தமிழ்ப் பெயர்களைத் தேடித் தொகுத்து, அவை ஒவ்வொரு திருக்கோயிலிலும் விளங்கச்செய்ய வேண்டும்.

தமிழரது ஆகம உள்பொருள்கள் நம்முடையன வாதலால் அவற்றைத் தமிழில் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும்.

நம் கோயிற்கலையியலை, நாமே நம் திரு முறைகள், மெய்யியல் நூல்கள், வாய்மொழி மரபுகள் யாவற்றையும் கொண்டு, நூல்களாக வகுக்க வேண்டும்.

# தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா?

தமிழண்ணல்

**தமிழ்த்தவ வெளியீடு**
'ஏரகம்' 4/585, சதாசிவ நகர்
முதன்மைச்சாலை,
மதுரை-625 020.

முதற்பதிப்பு : சிலை (மார்கழி, தி.வ. ஆண்டு 2033)
திசம்பர் 2002

பதிப்புரிமை : ஆசிரியர்க்கு

**தமிழண்ணலின் பவளவிழா வெளியீடு**

**விலை : ரூ.25.00**

நூலைப்பற்றி


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா? |
| ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | திசம்பர், 2002 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18 x 12.5 செ.மீ |
| மொத்தப் பக்கங்கள் | : | 104 |
| நூலின் விலை | : | ரூ. 25 .00 |
| அச்சிட்டோர் | : | ஹேமமாலா சிண்டிகேட் |
| ஒளி அச்சுக்கோவை | : | ஐ கேட்சர், மதுரை |

# தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா?

தமிழ் போல் சிறந்த இனிய மொழி உலகில் இல்லை; தமிழரைப் போல் மானம் இழந்து, தன்னலம் தேடும் தாழ்வு மனப்பான்மையரும் உலகில் இல்லை. இதைப் போன்ற முரண்பாடு உலகிற் காண்பது அரிது.

இன்றைய தமிழினத்தவர் பலர் பட்டம் பதவி பணம் சுக வாழ்வுக்காக, தன்மானத்தை விலை பேசி விற்றுவிடுகின்றனர்; மாற்றவரின் அரசியல் அலைகளில் மொத்துண்டு, மோதி உதைக்கப்பட்டும், புன்னகையோடு அவற்றை வரவேற்கின்றனர்; மண்டியிடுகின்றனர்.

மற்றும் சிலரோ நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டு, பதவி பணம் புகழ் யாவற்றையும் துச்சமென உதறிவிட்டுத் தமிழையும் தமிழினத்தையும் காக்கப் புறப்பட்டுள்ளனர். இச்சூழல் எழுஞாயிறுபோல் எழுச்சிதருகிறது.

தமிழகத் திருமடங்களோ தமிழைக் காக்க வேண்டியவை; தமிழர்சமயத்தின்வழி தமிழ்ப்பண்பாட்டுத் தூய தமிழ்த்திருநெறியைப் பரப்பவேண்டியவை. ஆனால் இன்று தெய்வத் திருமுறைகளை இவைகள் போற்றாது போயின; அயன்மைக் கூடாரமாய் அலங்காரப் பவனி வருகின்றன.

இந்நிலையிலும், கோயம்புத்தூர் பேரூர்த் திருமடமும் குன்றக்குடி திருவண்ணாமலைத்திருமடமும் தமிழுலகெங்கும் சுடர்விட்டுத் தமிழ்ஒளி பரப்புவது மனநிறைவு தருகிறது. காரைக்குடி அருகேயுள்ள கோவிலூர்த் திருமடத்தில் 'சிவ ஆகமங்கள்' தமிழில் போதிக்கப்பட்டு வந்துள்ளன.

தமிழகத் தமிழ்மக்களோ, நன்கு மூளைச்சலவை செய்யப்பட்டு, 'எங்களைப் போல் மூடர்கள் உலகில் இல்லை; முட்டாள்களின்வரிசையில் முதலிடம் எங்களுக்கே' என அறியாமை இருளில் மூழ்கிக்கிடக்கின்றனர். ஆட்டுவார் அனைவருக்கும் ஏற்ப ஆடுகின்ற பொம்மைகளாக உழல்கின்றனர். இந்தக் கவலைதரும் மாந்தரிடையே உணர்வற்ற தமிழரிடையே - சூடு சுரணையின்றி இலவச வேட்டி, சேலை, அன்னதானங்களுக்கு அலைந்து, தன் முயற்சியும் தன்மானமும் அறவே அற்றுப்போன தமிழரிடையே வாழ்வது 'வினைப் பயனே' அன்றி வேறில்லை. எனினும் யாழ்ப்பாணத்துத் தமிழ் ஈழ மக்களின்துயர்துடைக்கப்பட்டு, கீழ்வானத்தே விடிவெள்ளி தோன்றுவது கண்டு மனம் எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆறுதலடைகின்றது.

எங்கும் தமிழ்வழிக் 'கடவுள் மங்கலங்கள்' நடைபெறுகின்றன. சிவாச்சாரியார்கள், குருக்கள்மார், பட்டர்கள் சிலரேனும் தாங்கள் உண்மைத் தமிழரே எனவுணர்ந்து, இறைவன்முன் 'விண்ணப்பம்' முதல் (சங்கற்பம்), தமிழில் சொல்லி தமிழில் அருச்சனை செய்து, நம் என்பும் உருகி இன்பமுறச் செய்கின்றனர்; இனிய தமிழால்நம்மைஇறைவனுடன்ஒன்றியுணர வைக்கின்றனர். உயிரானது பெயருக்கேற்ப உய்தியுற வழிகாட்டுகின்றனர். இவர்களே தூய தமிழ் அந்தணர்கள்.

இன்றைய தமிழ் மறுமலர்ச்சிக்குக் கோவை வழிகாட்டுகிறது. பழனிசாது சண்முக அடிகளார், சிவநந்தி அடிகளார், திருநெல்வேலிச் சிவநெறிச் செல்வர்கள்; பொன்னம்பலம் ஏறித் திருமுறை பாடியதற்காகத் தடியர்களால் அடிபட்ட ஆறுமுகப் பண்டாரம் எனத்தூய அன்பர் குழாம் தொடர்கிறது.

தமிழகக் கருவூர், தமிழ் மறுமலர்ச்சிக்குக் கருவுருவாக்கும் கருவூராகிவிட்டது. முத்துவும் இராசேசும் வரலாறு படைத்துவிட்டனர். வழக்கறிஞர் குமரனும் அவரது குழுவினரும் பெரும் புகழ் பெறுகின்றனர். தமிழில் (குடமுழுக்கு) கடவுள் மங்கலம் செய்ய, நாடெங்கும் எழுச்சி பிறந்துளது.

முகத்தில் களையின்றி, பிறர் தொழத் தக்க தோற்றமும் இன்றி, சான்றோர் எனத்தக்க வாக்குமின்றி, பல்வேறு துறைகளில் இழுப்புண்டு, தம்மைத் தாமே தம் சொற்களாலும்செயல்களாலும்தாழ்வுபடுத்திக் கொள்பவர்கள் மிகப் பலர் உள்ளனர். இவர்கள் எங்ஙனம் அந்தணர்கள் ஆவார்களோ யாமறியோம்!

பிறப்பினால் அந்தணர்கள் என்ற காலம் மலையேறிவிட்டது. சேக்கிழார் போலும் பெருமக்கள் 'திருக்குலத்தார்' எனப்போற்றும் மக்களிடையே, இன்று அந்தணர்கள் பலர் உருவாகி வருகிறார்கள். அம்பேத்கர் போலும் அவர்களே வணங்கத்தக்க அந்தணர்கள் ஆவர்.

கோவை நகரத்தார் சங்கத்தில், 29-11-2002 அன்று, தமிழ் முறையில் கணபதி வழிபாடு, திருமகள் வழிபாடு (ஹோமம்) மிகச் சிறப்பாக நடைபெற்றுளது. பேரூர்த் திருமடம் நடத்திக் காட்டியுளது. தவத்திரு மருதாசல

அடிகளார் நடத்திக் காட்டிய இதனைக் கண்டும் கேட்டும், அங்கு கூடியிருந்த அனைவரும் போற்றிப் புகழ்கின்றனர். கவிஞர்கா.சு.மணியன்உட்படப்பலரும் பாராட்டியுள்ளனர். தமிழுக்கு எதிரான கூட்டத்தை 'வளர' விட்டதில் நகரத்தார்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அவர்களே இன்று தமிழில் கேட்பதால் விளங்குகிறது; இனிதாயிருக்கிறது; மகிழ்ச்சி தருகிறது எனக் கூறித் திரும்பத் தொடங்கிவிட்டார்கள். இதை நகரத்தார் அனைவரும் போற்றிப் பின்பற்றவேண்டும். காற்றுத் திசைமாறி அடிக்கும்; நல்லகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

தமிழகப் பெருவிழா என, தமிழ்நாடு தனி மாநிலமான நவம்பர் முதல்நாளைப் பல இலட்சம் செலவழித்து ஏழு ஆண்டுகள் நடத்திய, தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் **நா. அருணாசலம்** எட்டாம் ஆண்டில், மாவட்டந்தோறும் 'தமிழகப் பெருவிழா' எடுக்க வேண்டினார். ஆயிரக் கணக்கானோர், நூற்றுக்கணக்கான இடங்களில், தமிழ் தமிழினம் தமிழ்ப் பண்பாடு காக்க உறுதிமொழி எடுத்ததைக் காணக் காணத் தமிழர்தம் உள்ளங்கள் எழுச்சி பெற்றன. இதை ஏனைய தமிழமைப்புக்கள் பலவும் பின்பற்றின. புதுச்சேரி முதல் நாமக்கல் வரை எழுச்சி எதிரொலித்தது.

**திருமாவளவன்** ஆயிரக் கணக்கானவர்கட்குத் தமிழ்ப் பெயரிடும் இயக்கத்தைத் தோற்றுவித்திருப்பது, தமிழின எழுச்சிக்கு வழிவகுக்கும் ஓர் ஆக்கவழிச் செயற்பாடாகும். ஒரு திருமாவளவனால், ஆயிரம் திருமாவளவர்கள் தோன்றப் போகிறார்கள். ஓர்

அகல்விளக்கு ஆயிரம் அகல்விளக்குகளை ஒளி ஏற்றுவதற்கு ஒப்பாகும் இது.

கீழ்வானம் வெளுக்கின்றது; விடிவெள்ளி தோன்றுகின்றது; சூழ்ச்சிவலை விரிக்கும் மாய இருள், தமிழை மறுக்கும் நச்சுக்கிருமிகள் இருந்த இடம் தெரியாமல் அழியப் போகின்றன!

## ‘ஆகமம்’ என்பது ‘அணுகுண்டு’ போல்வதா?

ஒருவன் உன்மேல் பச்சைக் குதிரை ஏறுவேன் என்று கூறுகிறான்; மற்றவனோ குனிய மாட்டேன் என்று நிமிர்ந்து நிற்கின்றான்.

குனிபவனெல்லாம் ‘நல்லவனாம்’; குனிய மறுப்பவன் தீவிரவாதியாம்.

தமிழையும் தமிழின உணர்வையும் அழித்துவிடச் சூழ்ச்சி வலை விரிக்கிறார்கள்; நச்சுக் கிருமிகளைப் பரப்புகிறார்கள். இதனை இனங்கண்டு எடுத்துக்காட்டி, எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவது தீவிரவாதமாம்.

எங்கள் கோயிலில் - எங்கள் நன்கொடையால், உழைப்பால், பத்திமையால் உருவான கோயிலில், எங்கள் தாய் மொழியால் வழிபட உரிமை தருக எனக் கேட்பது குற்றமா? இதற்குச் சான்று காட்டவேண்டுமா? அகல்வானின் கீழுள்ள எதுவும் இதை மறுத்தல் இயலாதே.

அணுகுண்டுகள் போலும் கொடிய ஆயுதங்களை, மிக மறைமுகமாக உருவாக்கி, யாருக்கும் தெரியாமல் பதுக்குகிறார்கள். பகை நாட்டுடன் போர்க்குரல் எழும்பும்

போதெல்லாம், ''எங்களிடம் அணு ஆயுதங்கள்; தாவிப் பாயும் ஏவுகணைகள் உள்ளன'', என எச்சரிக்கை விடுக்கிறார்கள். அவை உண்மையா? என்ன வகையின? எங்குள்ளன? இவை யாருக்கும் தெரியாது. இதுபோலத்தான் 'ஆகமம் ஆகமம்' என்று தமிழ்வழிபாட்டை மறுப்பவர்கள், ஒருவகை 'மூடு மந்திரம்' போடுகிறார்கள்.

'ஆகமங்கள்' என்பன என்று தோன்றின? எத்தனை வகையின? (திருமூலர் எண்ணிறந்தன என்பார்.) எங்கு தோன்றின? யாருக்கு உரியன? வடநாட்டில் ஆகமங்கள் பற்றிய பேச்சு உண்டா? - இவை போல்வன பல இன்றைய திருமட அதிபதிகளுக்கோ, சிவாச்சாரியார்களுக்கோ தெரிந்திருக்க இடமில்லை. சமற்கிருதமே பலருக்கு முழுமையாய்த் தெரியாது. சில 'பத்ததிகள்', சில 'கிரியா சூத்திரங்கள்'; ஆகமங்களில் இல்லாத 'நமஹ' எனப் போற்றும் நாமாவளிச் சுலோகங்கள் என இவற்றை மட்டும் மனப்பாடம் செய்துகொண்டு, தங்கள் பிழைப்பு வாய்ப்புக்காகத் தமிழ்மொழி 'ஆகமத்திற்கு' விரோதம் என்று கதை விடுகிறார்கள்.

ஆகமவழி என்பது மரபுவழி - அது சமற்கிருத வழி என்று புலம்பித் தீர்க்கிறார்கள்.

யாம் படித்த ஆங்கில நூல்களின் வழி, 'ஆகமம்' என்பது, தமிழை மறுப்பதன்று; வெறுப்பதன்று; தடுப்பதன்று என்பதைப் பல்வேறு அறிஞர்களின் சான்றுரைகளின் வழி இச்சிறு நூலில் எடுத்து மொழிகின்றோம். ஆகம உள்பொருள்கள் தமிழருடையன; தமிழ் நாட்டில் மட்டுமே காணப்படுவன. அவை வடமொழியில் எழுதப் பெற்றிருப்பது, சமற்கிருத

மேலாண்மையால், இடைக்காலத்தில் நேர்ந்த 'விபத்து'. இவற்றை இந்நூல் நிலை பெறுத்துகிறது. மறுக்க முயல்வார், இந்நூலை முழுவதும் முதலிற் படித்துவிடுவது நல்லது.

பீடாதிபதிகள், மடாதிபதிகள், நரம்பு நிபுணர்கள், வழி தவறிய தமிழறிஞர்கள், வடமொழி மூலம் பிழைப்புத் தேடுபவர்கள், பிராமண சங்கத்தவர்கள், தமிழறிஞர்களைக் காலணா அரையணா எனக் கேலி பேசும் சோமாறிகள், ஆங்கிலத்தில் இதழ் நடத்துவதாலேயேதாங்கள்வெள்ளைக்காரர் பரம்பரையினர் என எண்ணும் 'அலி'ப் பிறப்புக்கள்; தமிழில் இதழ் நடத்திப் பணமும் பேரும் புகழும் பெற்றும் அந்தத் தமிழையே நாளும் சிதைத்து, நன்றி கெட்டுப்போன ஊடகக்காரர்கள் அனைவரும் தாய்மொழி வழிபாட்டை மறுக்கிறார்கள் அல்லது புறக்கணிக்கிறார்கள். தாய்மொழி மூலம் வழிபட இத்துணை ஆதாரமா தேவை? பிள்ளைக்குத் தாய்ப்பால் தரவேண்டுமென்பதற்குச் சான்றாதாரம் காட்ட வேண்டுமா? சேய்கள் தம் தாயை 'அம்மா' என்றழைப்பது தீட்டா? தமிழில் கல்வி, இசை, வழிபாடு என்பன தமிழனின் பிறப்புரிமைகள். உலகம் ஒப்பும் உண்மை இது. இவற்றை மறுப்பது பரந்த மனமாம்; இவற்றுக்குப் போராடுவது குறுகிய மனமாம்!

மேலே குறிப்பிட்டவர்களில் எவரையாவது பார்த்து, 'உன் தாய் ஒரு பேய், அவள் காலடிபட்டால் தீட்டாகும்' என எவனாவது சொன்னால், அவர்கள் 'ஆமாம்' என்று ஒப்புக் கொள்வார்களா? தாங்கள் தங்கள் தந்தை யாரென்று அறியாதவர்கள் என்று ஒப்புக்கொள்வார்களா?

மேலே குறிப்பிட்ட, தாய்த்தமிழை மறுக்கின்ற அனைவருக்கும் சொல்கின்றோம். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் இயற்கைக்கு முரண்பட்டவை. தன்னலம் சார்ந்தவை. பிழைப்பு ஒன்றே கருதியவை.

தமிழில் செய்தால் 'ஆகமத்'திற்கு விரோதமாகும் என்பது பச்சைப்பொய். ஆகமம் அருச்சனை பற்றியோ, அருச்சிக்கும்மொழிபற்றியோஎதனையும் குறிப்பிடவில்லை என்று, சமற்கிருத மொழியைப் பழுதறக் கற்றவர்கள் கூறியுள்ளனர். இந்த நூலைத் தொடர்ந்து படியுங்கள்; உண்மை விளங்கும்.

மேலும் வேதாந்தமும் ஆகமமும் ஒன்றுக்கொன்று நேர் முரண்பட்டவை. வேதாந்திகள் - ஏகான்மவாதிகள் - அத்துவைதிகள். திருக்கோயில்வழிபாடற்றவர்கள். அவர்கள் தங்கள்கொள்கை - சாத்திரம் - வேதவிதிகள் எல்லாவற்றையும் தலைமுழுகிவிட்டு, இன்றுதிருக்கோயில்களுக்குள் நுழைவது வெட்கக்கேடு - அவமானம் - பணமும் புகழும் பெற வேறு வழிதெரியாமல், திருக்கோயில்களில் நுழைவது தவறு.

'காலம்மாறிவிட்டது; நாங்களும்மாறிக் கொண்டோம். எங்கள் வேத வேள்விகள் செல்வாக்கிழந்து போயின. இந்த நாட்டு மக்கள் பக்தி மார்க்கத்தில் அழுந்திப் போனவர்கள். எனவே நாங்கள் எங்கள் வேதவழியைக் கைவிட்டாலன்றி, எங்களுக்குப் பிழைப்பு இல்லை. அதனால் மக்கள் வழிக்கு நாங்கள் மாற நேர்ந்தது' என்று இவர்கள் சொன்னால்கூட விட்டுவிடலாம்.

நுழையக்கூடாத இடத்தில் நுழைந்தது மல்லாமல், நமது தாய்மொழியை - தமிழை நுழையவிட மறுப்பது

எவ்வளவு கொடுமை? தமிழில் கடவுள் மங்கலம் செய்ததால், தீட்டுப்பட்டு விட்டதாம். அதை நீக்கப் 'புனருத்தாரணம்'செய்கிறார்களாம். 'தீட்டுப்பட்டது' என்று தமிழில் சொன்னாயே? 'தீட்டு' என்று தமிழில் சொன்னாயே? அச்சொல்கூடத் தமிழ் என்பதை அறிந்தும் வேற்றுமொழியில் சொல்லாமல், அம்மொழியிலேயே சொன்னாயே? அவ்வாறு சொன்னதால் - 'தீட்டு' என்பதும் தமிழ்ச்சொல்லேயாதலால், அதை உச்சரித்த உனது 'நா' தீட்டுப்பட்டுவிட்டதே? அந்த நாவை - தீட்டுப்பட்ட நாவை அறுத்தெறிய வேண்டாமா? நடுவு நிலைமையோடு சிந்தித்துச் சொல்லுங்கள். ஆறுகோடித் தமிழர்களின் தாயை - ஐந்துபேர் 'தீட்டு' எனச் சொல்லியும், பொறுமை காக்கும் தமிழர்களை, மேலும் மேலும் புண்படுத்தலாமா?

எதற்கெடுத்தாலும், 'எங்களிடம் அணுகுண்டு இருக்கிறது' என்பதுபோல, எங்களிடம் 'ஆகமம்' இருக்கிறது என்று அச்சுறுத்தும் ஆணவக்காரர்களை அன்புடன் அழைக்கின்றேன். ஆகமங்களைக் கற்ற பேரறிஞர்களின்கருத்துக்களை அடுக்கடுக்காகத் தருகிறோம். இதையும் படித்துவிட்டு, 'ஆகமத்தைக்' காட்டி, எங்களை அச்சுறுத்துவதை இனியேனும் கைவிட்டு, அறவழிக்குத் திரும்புங்கள்.

தன்னை அடித்துக்கொல்ல வருபவன்மீது பூனையும் புலிபோலப் பாயும். பூனையைப் புலியாக்கிவிட்டு, ஐயோ 'புலிபுலி' என்று கதறுவதால் என்ன பயன்?

## தமிழுக்கு எதிராக நச்சுக் கிருமிகளைப் பரப்புவதா?

தமிழுக்கு எதிராகவே சிந்திப்பதும் செயற்படுவதும் பார்ப்பனியத்தின் நோக்கும் போக்குமாக இருக்கிறது. பார்ப்பனியம் என்பது பார்ப்பனர்களிடம் மட்டுமன்று; நோய் தொற்றுவதுபோல், அது இன்று பார்ப்பனர் அல்லாதவர்களிடமும் மிகுதியாகப் பரவிக் கிடக்கிறது.

பார்ப்பனியம் தமிழிசையை வெறுக்கிறது. துக்கடாவாகப் பாடிக் கேவலப்படுத்துகிறது. 'இசைப் பேரறிஞர்' பட்டமும் பெற்றுக்கொண்டு, தமிழிசையைத் தாழ்த்தப்பட்ட இடத்தில் வைத்து வேடிக்கை பார்க்கிறது. மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தமிழ்நாட்டில் தாய்மொழியாம்தமிழே பாடமொழியும் பயிற்றுமொழியும் ஆதல் வேண்டுமெனத் தமிழ்ச் சான்றோர் பேரவை மூலம் 102 பேர் சாகும்வரை பட்டினிப்போரில் ஈடுபட்டோம். அன்றைய தமிழ் அரசு, அதற்கு என ஒரு குழு அமைத்தது. அவ்வாறு அடிப்படைக் கல்வி தாய்மொழியாகவே இருக்கவேண்டுமெனக் குழு பரிந்துரைத்ததை, அரசு ஆணையாகப் பிறப்பித்தது. அதைச்சென்னை உயர்நீதிமன்றம் தோற்கடித்தது. இந்திய மாநிலம் அனைத்துக்கும் மாறாக இங்கு மட்டுமே உள்ள தாய்மொழி எதிர்ப்புச் சூழலுக்கு, இத்தீர்ப்பு ஆக்கமும் ஊக்கமும் தந்தது. உடனே ஒரு பார்ப்பன ஆங்கில ஏடு எங்களை 'Tamil Storm Troopers' எனக் குதிரைப்படைக்கு ஒப்பிட்டு ஆசிரியவுரை எழுதியது. மேலும் அன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர், இக்குதிரைப் படைப்புயல்வீரர்களாம்தமிழறிஞர்களின் ஆலோசனைகளைக்

கேளாது, உடனேவழக்கைத் திரும்பப்பெற வேண்டுமெனத் தனது அரிய யோசனையையும் தெரிவித்தது.

மகாராட்டிரத்தில்மராத்தியும்குசராத்தில் குசராத்தியும் வங்காளத்தில் வங்காள மொழியும் பள்ளியிறுதி வகுப்பு முடியத் தாய்மொழியே பெருவழக்காகப் பயிற்று மொழியாகவுளது. அங்கு ஆங்கிலம் ஒருமொழிப் பாடமாகக் கூட இல்லாத நிலைமையும் உள. இந் நிலையில்ஒருமொழிப்பாடமாகமட்டுமாவது ஆங்கிலத்தைக் கற்பித்தால் என்ன? ஒரேயடியாக அதைப் புறக்கணித்து விட்டோமே என்று மகாராட்டிர அமைச்சரவை விவாதித்தது. உடனே இந்நாளேடும் வார இதழும், வடநாட்டவர் ஆங்கிலத்திற்கு மாறிவிட்டதாகச் செய்தி வெளியிட்டன. Maharashtra back to English என்பது தலைப்பு. என்ன எழுதவேண்டும்? அங்கு ஆங்கிலத்தை அறவே புறக்கணித்தநிலை, தாய்மொழியே உயர்கல்வி வரைபயிற்றுமொழியாகவுள்ளநிலைஆகிய அனைத்தையும் குறிப்பிட்டு, ஒருமொழிப் பாடமாகக் கொண்டுவர எண்ணுவதை, விளக்கமாக வெளியிட்டிருக்க வேண்டும். எத்தனைசூழ்ச்சித்திறன்? எத்தனைமுரண்பாடு? 'படித்தவன் சூதும் வாதும் செய்தால் ஐயோன்னு போவான்' என்று பாரதியாரின் குடுகுடுப்பைக் காரன் முழங்குகிறான். தெய்வம் நின்றுகொல்லும் அல்லவா?

ஓர், 'ஆர்.எஸ்.எஸ்' நண்பர், மதுரையில் பேசிவழித் தொடர்பு கொண்டு, 'நாங்களும் தாய்மொழி வழிக்கு ஆதரவானவர்களே; நேரில் வரலாமா?' எனக் கேட்டார். இசைவு தெரிவித்தேன். தம் நண்பருடன் வந்த அவர், தாய்மொழிக் கல்வி அவசியமே எனப் பேசிக்கொண்டே வந்தவர், இடையே ''உயர்நீதிமன்றத்தில் தாய்மொழி

வழிக் கல்வி தோற்றதும் நல்லதாகி விட்டது; நம் கலைஞர் அரசு காப்பாற்றப்பட்டது'' என்றார். அவரது சிறுபுத்திச் சீர்கேடு எனக்குப் புலப்பட்டது. நானும் பேச்சினிடையே, 'தாய்மொழிவழிக் கல்வி' என்பதில் உறுதியாக இருக்கவேண்டும். அவ்வாறன்றி இரட்டை வேடம் போடுபவர்களை எனக்குப் பிடிக்காது; அப்படி வேடம் போடுபவர்களைக் கண்டால், காலில் போட்டிருப்பதைக் கழற்றிச் சோட்டால் அடிக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றும்', என்றேன். பேச்சோடு பேச்சாகக் கூறிய இதனைக் கேட்டதும், அவர் தம் நண்பருடன் எழுந்து போய்விட்டார். என்னை மூளைச் சலவை செய்யமுடியாது என்று நினைத்திருப்பார்.

இப்போது தமிழ்வழிக் கல்வி வழக்கு உச்சநீதி மன்றத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதேபோன்று ஆங்கிலவழிக் கல்வியினர் தொடுத்த வழக்கைக் கருநாடக அரசு தொடர்ந்து போராடி வென்றது. அதனையே எடுத்துக்காட்டி, உச்சநீதி மன்றம் கன்னட மொழிக்குத் தந்த அதே தீர்ப்பை எங்களுக்கும் வழங்குங்கள் என்று வழக்காடிக் கேட்டிருக்கலாம். முன்னைய அரசும் இன்றைய அரசும் தாய்மொழி பற்றிய வழக்கை உடைப்பில் போடுவதில் மிக ஒற்றுமையாகிவிட்டன. 'வழக்காட மாட்டோம்; நீங்கள் என்ன தீர்ப்புச் சொன்னாலும் ஏற்றுக் கொள்கிறோம்' எனக் கைகழுவி விட்டதாகச் சிலர் கூறுகின்றனர். எது உண்மையோ? வழக்குப் பற்றி எவ்விவரமும் தெரியவில்லை.

இங்ஙனம்தமிழுக்குஎதிராகச்செயற்படும் 'சிறுபுத்திச் சீர்கேடுகள்' ஆயிரம் ஆயிரம் நடந்தவண்ணம் உள்ளன. ஒன்றல்ல, இரண்டல்ல; ஒருநாளல்ல, இருநாளல்ல!

தாயே! தமிழே! என் அன்னையே? அருமைமிகு பெருமையே! உனக்கு இத்தனை பகைவர்களா? இத்தனை எதிரிகளா? இத்தனை சூழ்ச்சி வலைஞர்களா?

நீ யாருக்கும் எந்த மொழிக்கும் தீங்கிழைத்த தில்லையே? அருமை அன்னையே! உன்னையே பயன்படுத்தி, உன்னையே சீரழிக்கிறார்களே! உன்னைப் பயன்படுத்தி இதழ் நடத்தி, திரைப்படமெடுத்து, உன்னையே கொல்லாமல் கொல்கிறார்களே!

தாயே! உயிரே! தமிழே! பொறுத்தது போதுமம்மா; இவர்களை இனிப் புதைகுழிக்கு அனுப்பிவிடு! என்று வணங்கி, வேண்டத் தோன்றுகிறது.

எத்துணைக் கொடுமைகள்? எத்தனை பாவங்கள்?

சுவாமி விவேகானந்தர் 'வருணாசிரம தருமத்தால், சிறுசிறு உட்பிவுகளாகித் தங்கள் நெருங்கிய உறவுக்குள் திருமணம் செய்துகொள்வதால், உடல்நலம் கெடுவதை விவரிக்கும் இடம் ஒன்றுண்டு. இந்து மதத்தைவிட்டுப் பலர் வெளியேறுகின்றனர் என்றால், அதற்கு இந்துமதந் தான்காரணம். மனிதனைஇழிபிறப்பாளனாக்கி, அவனவன் அவனவனது தொழில் இழிந்ததேயாயினும் அதனையே செய்யவேண்டுமென்றும் உயர்பிறப்பாளர் போல் படித்து முன்னேறிப்பிறஉயர்குலத்தவர்தொழில்களைமேற்கொள்வது பாவமென்றும் வேதங்கள், மனுதரும சாத்திரம், கீதை எல்லாமே பகர்கின்றன. இந்த இழிவு தொலைக்கப்பட்டு, அவனைத் தனக்கு நிகராக முன்னேறக் கைகொடுத்து, உதவினால் அவன் ஏன் வேற்று மதத்திற்குப் போகப் போகிறான்?

கேரளத்தில் காலடியில் உள்ள ஸ்ரீசங்கராச்சாரியார் சமற்கிருதப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கே.என். பணிக்கர், அண்மையில் சென்னை வந்தபோது பேசியதை, இந்து நாளேடு (9-11-2002) வெளியிட்டுள்ளது. ''மத மாற்றத்திற்குக் காரணம், அடிமைப்படுத்தப்பட்ட, பலவீனப்படுத்தப் பட்ட மக்கள், அம்மதமாற்றத்தை ஒரு கருவியாக ஏற்று, தங்களை மேன்மைப்படுத்திக்கொள்ள எடுக்கும் முயற்சியேயாகும். இந்துயிசத்தின் உள்ளேயுள்ள 'மக்களை அழுத்தி மிதிக்கும் 'தன்மையே பலரை மதம் மாறத் தூண்டுகிறது. இந்துயிசத்தைப்போல், மக்களை அடிமைப்படுத்தும் சமயம் உலகில் வேறு எங்குமே இல்லை. (There is no religion nowhere in the world as oppressive as Hinduism.) இவவாறு ஒரு சமற்கிருதப் பேரறிஞர் - துணை வேந்தராகுமளவு அம்மொழியைப் பயின்றவர் கூறுகிறார்.

ஆகமங்கள் தமிழருடையன; தென்னாட்டில் மட்டுமேகாணப்படுவன; இடைக்காலத்தே தமிழாகமங்கள் அழிக்கப்பட்டு, வடமொழி மயமாக்கப்பட்டன. ஆகமங்களுக்கும் வேதத்திற்கும் தொடர்பு கிடையாது. இவை முற்றிலும் வேறுபட்டவை. ஆகமவழிக் கோயில்கள் தமிழர்கள் மட்டுமே கட்டியவை; தமிழகத்தில் மட்டுமே காணப்படுபவை.

ஆங்கில வல்லாண்மையால், சங்க இலக்கிய ஆய்வேடுகள் பல தொடக்கத்தில் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பெற்றன. இதனால் சங்க இலக்கியம் ஆங்கிலத்திற் குரியது; ஆங்கிலேயருடைமை என்றாகிவிடாது. களப்பிரர், பல்லவர் காலத்தில் வடமொழி ஆட்சிமொழியானது.

அந்த (3-7) ஐந்து நூற்றாண்டுகளில்தான், தமிழருடைமை எல்லாம் சமற்கிருத மயமாயின.

இவை அனைத்தும் இந்நூலில் தொடர்ந்து விளக்கப் பட உள்ளன. முதலில் ஒரே ஒரு சான்று காண்போம்.

தமிழகத் திருக்கோயில்களில் உள்ள இறைவன், இறைவிபெயரெல்லாம்வடமொழிமயமாக்கப்பட்டுள்ளன. தேவாரம், திருமுறைகளில் வரும் தமிழ்ப்பெயர்களுடன் ஒப்பிட்டால் உண்மை விளங்கும்.

மதுரைச் சொக்கரும் சொக்கியும் சுந்தரேசரும் மீனாட்சியும்ஆயினர்அண்ணாமலையார் அருணாசலேஸ்வரர் ஆனார். மிகப் பெரிய கோயிலெடுத்து, இராசராசன், மிக மகிழ்ந்து ‘பெருவுடையார்’ எனப் பெயரிட்டான். அதைப் ‘பிருகதீஸ்வரர்’ எனமாற்றித்தொலைத்தார்கள். பொய்யிலி அப்பரை சத்திய வாகீசர் என மாற்றுவார்கள். தாமரைக் கண்ணனைப் புண்டரீகாட்சன் ஆக்குவார்கள். மெய்யன் (திருமெய்யம் மெய்யன்), சத்தியமூர்த்தி ஆக்கப்படுவார். மருதீசர் - அர்ஜுனவனேஸ்வரராவார். வாடாமலர் மங்கை - அஸோககுஸுமாம்பாள் ஆவாள். தாயுமானவரை, மாத்ருபூதமாக்கிவிடுவர். இவ்வாறு ஆயிரம் பெயர்கள். தமிழை மறைத்து, கோயில்கள்தோறும் வடமொழியிலேயே எழுதப்பெற்றிருக்கும். தமிழ்த் திருமடங்களின் ஆட்சிக்குட் பட்ட கோயில்களிலும் சமற்கிருதப் பெயர்களையே, கொட்டை எழுத்துக்களில் எழுதித் தமிழ்ப்பெயர்களை மொட்டை அடித்துவிடுவர்.

ஒப்பிலாள், பூங்குழலி, மட்டுவார் குழலி, கிளி மொழியாள், சொக்கி - இவ்வாறு அழகான ஆயிரக் கணக்கான தூய தமிழ்ப்பெயர்கள் உள.

இவ்வாறு பெயர்களை (ஊர்ப்பெயர், மக்கட் பெயர், கடவுட்பெயர்) சமற்கிருதமாக்கியதொன்றே தமிழ் ஆகமங்களும் சமற்கிருதமொழியில் பெயர்த்து எழுதப் பட்டுத் தமிழாகமங்கள் மறைக்கப்பட்டன; அழிக்கப் பட்டன என நிறுவுவதற்குப் போதிய சான்றாகும். மனமாரச் சிந்தித்தால் உண்மை தோன்றாமல் போகாது.

இவ்வாறு 'பிராமணீயத்தால்' ஏற்பட்ட கேடுகள் பல. அருந்தொண்டாற்றிய அந்தணர்கள்பற்றி எழுதுகிறவர்கள் அந்தணர்களாற்றிய 'அருங்கேடுகளையும்' விளக்கமாக - ஒருகலைக்களஞ்சியமளவு, 'நன்றிகொன்றமை, நயவஞ்சகம், சூழ்ச்சித்திறன், கயமைச் செயல்கள், காட்டிக் கொடுத்தல்' போன்ற உட்தலைப்புக்களில் எழுதிவெளியிட வேண்டும். யாரேனும் சிலர் இதில் ஈடுபடுவர் என நம்புகிறோம்.

சுவாமி விவேகானந்தர் இவ்வாறு பல நூற்றாண்டுகளாக நடந்துவரும் கேடுகள் பலவும், நீக்கப் பட வேண்டும் என விழைகின்றார். சகோதரத்துவத்தை வளர்க்காத இவை திருப்பப்பட்டுத் திருத்தப்பட்டுப் புதிய மறுமலர்ச்சி ஏற்படவேண்டும்; வரலாற்றுப் போக்கையே மாற்ற வேண்டும் என்று கூறுகிறார். இதற்குப் பல்வேறு தீர்வுகள் சிந்திக்கப்படுகின்றன. கம்யூனிச வழி, சமதரும வழி, தருமகருத்தாவழி முதலியன பற்றி விவேகானந்தர் எண்ணிப் பார்த்து, 'தருமகருத்தாவழியை'யே ஏற்று, நாட்டைத் திருத்துமாறு, பிராமணர்களை நோக்கி வேண்டுகிறார்:

''இம் முறைகளை (வருணாசிரமம் போன்றவை) பல காலமாகப் பிராமணனே போற்றி வளர்த்தனன். இப்போது அவன் மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளைத்

தர முன் வரவேண்டும். அவ்வாறு அவன் தராததாலேயே, முகமதியப் படையெடுப்புச் சாத்தியமாயிற்று. தொடக்கத்திலிருந்தேஇவ்அறிவுக்கருவூலத்தை மக்களுக்குத் திறந்துவிடாததாலேயே, ஆயிரம் ஆண்டுகளாக இந்தியாவிற்குள் நுழைய முயன்ற ஒவ்வொருவனுடைய காலடியிலும் கிடந்து நாம் உழல வேண்டியதாயிற்று. இதனால் நாம் தாழ்வடைந்தோம். நம் பொதுவான முன்னோர்கள்சேர்த்துவைத்த, வியக்கத்தக்க கருவூலங்களை நம் மக்களுக்குத் தராமல் கூண்டுகளுக்குள் முடக்கி மறைத்துவைத்தோம். நம் முதற்பணி, இவ்வாறு மறைத்துவைக்கப்பட்ட கருவூலக் கதவுகளை உடைத் தெறிவதேயாகும். அவற்றை வெளியே கொண்டு வாருங்கள்; அவற்றை ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள். இதைச் செய்பவர்களுள் பிராமணனே முதலாளாக முன்வரவேண்டும். வங்காளத்தில் ஒரு பழைய மூட நம்பிக்கை உண்டு. நல்ல பாம்பு கடித்தால், அவ்வாறு கடித்த நஞ்சினை அப்பாம்பே உறிஞ்சி எடுத்தால், கடிபட்டவன் பிழைப்பான் என்பதே அது. எனவே, பிராமணன் தன்னால் உண்டான நஞ்சினை, தானே உறிஞ்சி எடுக்கவேண்டும்.''

இனி அவ் ஆங்கிலப் பகுதியை அவ்வாறே பார்ப்போம்:

**He advocates: So this accumulated culture of ages of which the Brahmana has been the trustee, he must now give to the people at large and it was because he did not give to the people, that the Mohemmadan invasion was possible. It was because he did not open this treasury to the people from the beginning, that for a thousand years we have been trodden under the heels of everyone who chose to come to India; it was through that we have become**

**degraded and the first task must be to break open the cells that hide the wonderful treasures which our common ancestors accumulated; bring them out, and give them to everybody; and the Brahmana must be the first to do it. There is an old superstition in Bengal that if the cobra that bites, sucks out his own poison from the patient, the man must survive. Well then, the Brahmana must suck out his own poison. (Swami Vivekananda, 'Caste, Culture and Socialism', p.66)**

இன்று கடிவாயிலிருந்து, நஞ்சை உறிஞ்சி எடுத்துக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, அப் 'பாம்பு' மேன்மேலும் தமிழர்களையும் தமிழையும் கடித்து நஞ்சினைக் கக்கிய வண்ணம் உளது.

இம் முறைகேடுகளில் ஒன்றுதான், ஆகமங்கள் என்று ஒன்றைச் சொல்லித் தமிழனைத் தமிழில் வழிபட மறுப்பது; தமிழில் வழிபட்டால் தீட்டென்பது. தமிழைப் பயிற்றுமொழியாக்கும் அறப்போரைக்கிண்டல் செய்வதும் தமிழிசையைத் தமிழகத்திலேயே இருந்துண்டு வாழ்ந்தும் மறுப்பதும் உலகத் தமிழினம் ஒன்றுபடுவதைச் சூழ்ச்சி செய்து தடுப்பதும், இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்த் தேசியமும் ஒன்று - பழைமையானது - நிகரற்றது - இந்தியப் பண்பாட்டிற்குப் பெரும்பங்களித்தது என்பதை எதிர்ப்பதும் ஆகிய இவை போல்வன பலவும் சுவாமி விவேகானந்தர் கருத்துப்படி, பல்வேறு வகையினரின் நச்சுக்கடிகளாகும். அதில் பிராமணர்கள் முதலிடம் பெறுவதை இனியேனும் கைவிடவேண்டும் என்பதே நம் வேண்டுகோளாகும்.

## குடமுழுக்கு அன்று; கடவுள் மங்கலம்

குடமுழுக்கு - கும்ப அபிசேகம் என்பது, தமிழை அறியாமையால், சமற்கிருதமயமாக்கியவர்களின் மொழி பெயர்ப்பு. நீராட்டு, நீர்த்தெளி என்றே இவை தமிழில் வழங்கின. இச்சொல் ஒன்றே, தமிழரின் நெறியையும் சொல்லையும்வடமொழிமயமாக்கிக்கொண்டு, இன்றுவரை ஏமாற்றுவித்தை செய்து வருபவர்களின் குட்டை வெளிப் படுத்திவிடும்.

கோயில் கட்டி முடிந்ததும் 'நன்னாள் நல்லோரை (நன் முழுத்தம்) பார்த்துப் பல்லியங்கள் முழங்க தமிழ் மந்திரங்கள் ஒலிக்க, கோயில் வளாகத்துள் எங்கணும் நீர்தெளித்தும், மேற்கட்டின் (விமானத்தின்) மீது ஊற்றியும் தூயவாக்கிக் கொண்டாடுதல் தமிழர் வழக்கம் இந் நன்னீர் தெளித்த பின்னரே, கோயில் இறைவன் குடிகொள ஏற்ற தூய்மை அடைந்ததாகக் கருதப்படும்... பிற்பாடு கோயிலின் உச்சிக் கலசத்தில் நீரூற்றுதல் எனக் கொண்டு, வடவர் கும்பாபிசேகம் என ஆக்க, தமிழர் கும்பம்+அபிஷேகம்=குடமுழுக்குஎனத்தமிழாக்குகின்றனர். இதற்கு உரிய பழஞ்சொல் வேறு.

கி.பி.9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய மன்னர்கள் காலத்தில், மாறன்காரி என்ற அமைச்சன், மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலையில் நரசிங்கப் பெருமாளுக்குக் குடைவரைக் கோயில் ஒன்றைத் தோற்றுவித்தான்: கோயில் முற்றுப்பெற்று, நீர்த்தெளி நடக்குமுன்பே அவன் இயற்கையெய்த, அவன்தம்பி மாறன் எயினன், அப்பணியைநிறைவேற்றி நீர்தெளித்தான். இதனைஆனைமலைக்கல்வெட்டொன்றால் அறிகிறோம்.

''... மாறன்காரி இக்கற்றளி செய்து நீர்த்தெளி யாதேக... பின்றை அவனுக்கு அனுசன்... மாறன்எயினன் முகமண்டபம் செய்து நீர் தெளித்தான்'' - இது கல்வெட்டுப் பகுதி*.

நீராட்டித் தூய்மை செய்வது தமிழர் வழக்கமென்பதைச் சிலப்பதிகாரத்தாலும் அறியலாம். கண்ணகிக்குக் 'கடவுள் மங்கலம்' செய்ததாகவே இளங்கோவடிகள் கூறுகிறார்.

தமிழகக் கோயிற்கலை வரலாறு, அதன் தோற்றமும் வளர்ச்சியும் பல ஆயிரம் ஆண்டுகள் தொன்மையுடையன. இவ்வரலாறும் வளர்ச்சியும் வடநாட்டிற் காணாதன. வடவர் அறியாதன. வேதங்களிலோ, உபநிடதங்களிலோ உருவ வழிபாட்டுக் கோயிற்கலை பற்றிச் சிறுகுறிப்பும் கிடையாது.

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் கூறுவர். முதலில் இலக்கணம் தோன்றாது. தமிழகத்தில் கணியன்மார், ஆசான்மார், அறிவன்மார், தமிழகத் தூய துறவிகளாம் அந்தணர் எனப் பற்பல சான்றோர்கள் இருந்தனர். மரத் தச்சர் முதல், கல்தச்சர் வரை சிற்பிகள் பலர் இங்கேயே இருந்தனர். இங்குள்ள சிற்பக்கலைபோல் வடநாட்டிலும் பிறநாட்டிலும் காண்பதரிது.

நடுகல் வழிபாடே உருவ வழிபாட்டிற்குத் தோற்றுவாய். பிறகு ஊர்நடுவே மன்றம் அல்லது

---

* க. குழந்தைவேலன், *தமிழிய வாழ்வில் கல்லும் சொல்லும்*, சென்னை, 2000. பக்.40

அம்பலம் என்பதில், 'தறி' ஒன்றை நட்டு வணங்கினர். இதனைக் 'கந்து' என்றும் அம்பலத்தைப் பொதியில் என்றும் வழங்கியதும் உண்டு. இப்பொதியிலை மெழுகி, நந்தா விளக்கேற்றி மலர்சூட்டி மகளிர் வழிபட்டதைப் பட்டினப்பாலை கூறுகிறது (246-249).

சங்கப் பாடல்களில், தொடக்க காலத்தில் தமிழர் கோயிலமைத்துவழிபட்டுவந்தமுறைகள்கூறப்பட்டுள்ளன. கருந்தாட் கந்து, மாத்தாள் கந்து என இறையுருவம் கூறப்படுகிறது. (அகம். 307, 287). 'கடவுட் படிமத்தின் அடிப்பகுதி பருத்தும் நுனிப்பகுதி சிறுத்தும்' இருந்ததை இது காட்டுகிறது என்பார் பேரறிஞர் அ.ச.ஞா.*

மரத்தினால் கட்டப்பெற்ற கோயில் பற்றிய குறிப்பும் அகநானூற்றில் வருகிறது. மேலும் நாட்பலி, ஒழுகுபலி என்று வருவனவற்றால், நாட்பூசை வழிபாடு நடந்தமைஅறியப்படும். (அகம்.167). நந்தாவிளக்கிடுதலும் மலரிட்டு வழிபடுதலும் நடைமுறையில் இருந்துள்ளன. அகம் 307இல் 'கடவுள்போகிய கருந்தாட் கந்தத்து' என வருவதனாலும் அப்பர் பெருமான் 'கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே' என்று பாடுவதாலும் (6-61), இதுவே, சிவலிங்க வடிவாயிற்றோ என எண்ணம் ஏற்படுகிறது. கரிகாற்பெருவளத்தான் உறையூரில் 'கோயிலொடு குடிநிரீஇயினான்' எனப் பட்டினப்பாலை பகர்கிறது. மதுரையில் சிவனுக்கு ஏழுநாள் விழா நடந்த முறையை மதுரைக்காஞ்சி கூறுகிறது. கோச்செங்கணான் எழுபது மாடக்கோயில் கட்டியதை ஆழ்வார்கள் போற்றுகின்றனர். செங்கற்கோயில், கொகுடிக் கோயில்,

---

* பெரியபுராணம் - ஓர் ஆய்வு, சென்னை, 1999, பக்.65.

குடைவரைக் கோயில் முதலாக இன்றைய கோயில் அமைப்பு வரை வளர்ந்த வரலாறு தமிழர் கண்டது. இது பற்றிய தொழிற்கலைஞரும் கைவினைஞரும் தமிழ் நாட்டவர். பார்ப்பனர்களுக்கு இதில் தொடர்பில்லை. வடநாட்டவர்க்கோ இதுபற்றிய வரலாறெதுவுமே இல்லை.

பின்னர் இவை பற்றிய செய்திகள் 'ஆகமம்' என ஏன் வடமொழியில் எழுதிவைக்கப்பட்டன? ஆகம உள் பொருள்கள்தென்னாட்டில்மட்டுமேகாணப்பட்டும் இவை வடமொழி மயமானது ஏன்? ஆகமங்கள் 'அருச்சனை வழிபாடு' பற்றியோ, இந்த மொழியில்தான் அருச்சிக்க வேண்டுமெனவோ எங்கேனும் குறிப்பிட்டுள்ளனவா?

வேதவழிப் பார்ப்பனர்களாம் வைதிகர்களுக்கும் திருக்கோயிலுடன் இம்மியளவேனும் தொடர்புண்டா? வைதிகமும் ஆகமமும் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை அல்லவா? வைதிகர்கள் ஆகாமியரைப் பகைவர்போல் மதித்த காலம் உண்டல்லவா? இன்றைய வைதிகப் 'பிராமணாள்' திருக்கோயிலில் கொடிமரம் தாண்டி நுழைவதுதானே தீட்டு? தமிழ் நுழைவது எங்ஙனம் தீட்டாகும்?

வேதமும்வைதிகமும்நேர் எதிரானவையாயிருந்தும் நாயன்மார்களும் சேக்கிழாரும் நான்மறைகளையும் அந்தணரையும்வடமொழியையும்போற்றிப் பாடியுள்ளனரே? அவை முரண்பாடல்லவா? ஏன் அவ்வாறு பாடினர்? இதற்குரிய விடையை அறிந்தால், வீணே கதைப்பவர்கள் புலம்பி அழநேரும். தொடர்ந்து படியுங்கள்.

சிவாச்சாரியார்கள், பட்டர்கள், குருக்கள்மார் - தனிஇனம் அல்லவா? சிவதீக்கை பெற்று, சிவபூசை

செய்யும் இவர்கள், ஏனைய பிராமணர்களினின்றும் வேறுபட்டவர்கள் அல்லவா? இப்பூசை பெறாத 'பிராமணாள்', சோம்பாயி எனப்பட்டு, மடைப்பள்ளியில் நுழைந்து, சிவ பூசைக்கு வேண்டிய பொங்கல் (பிரசாதம்) முதலியன செய்யமட்டுமே அனுமதிக்கப் பட்டவர்களல்லவா? சிவபூசைபெற்ற சிவாச்சாரியார்கள் தமிழர்களே என்று அறிஞர் பலர் கூறியுள்ளமை பொய்யாகுமா? ஏனைய பார்ப்பனரும் தமிழரோடு தமிழராகிப் போனவர்களே என்றும் பெண்களைக் கொண்டும் கொடுத்தும் தமிழ்வாழ்வு வாழ்ந்தவர்களே என்றும் வருமானம், பிழைப்பு வாய்ப்புக் கருதி வடமொழிச் சுலோகங்கள் சிலவற்றை மனப்பாடம் செய்து, தமிழரின் சடங்குகளில் எல்லாம் புகுந்து, தாமே நடத்தி, அரிசி, பருப்பு, தானியம், உடைகள், பிற பொன்னும் பொருளும் எல்லாம் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாகவே தங்கள் 'பிராமணுத்துவத்தை' விடாது போற்றிக் காத்து வருகின்றனர் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனரே - அவை யாவும் பொய்யென்பதா? பிராமணர்கள் இன்று எவ்வளவோ உயர்ந்த நிலைகளில் உள்ளனரே? இன்னுமா அருச்சனைத் தட்டில் காசு போடுபவர் முகம் பார்த்து நிற்கவேண்டும்? இனியேனும் எங்களை இறைவனை நேரே தொழவிடுங்கள்! எங்கள் மொழியில் பாடிப்பரவத் துணை செய்யுங்கள்!

நல்லவர்போல் நடித்துத் தங்கள் பக்கம் காலம் சாயும்பொழுதெல்லாம், தமிழைச் சாய்க்கவே முயலுதல் முறையாகுமா? நீதியாகுமா? நியாயமா? நேர்மையா?

தமிழ் மண்ணில் வாழ்ந்து, தமிழ்மண் நீரைப்பருகி, தமிழக விளைவுகளைத் தின்று தமிழில் இதழ்நடத்தி,

தமிழில் கதையெழுதித் தமிழால் எல்லாவகையாலும் வாழும் இவர்கள், அதே தமிழைக் கொலைசெய்தும், கொலை செய்வார்க்குத் துணைசெய்தும், தமிழை 'நீச பாஷை' என்று கூறியும், தமிழில் பாடினால் தீட்டுப்படும் என்றும் சொல்லும் அத்தனை செய்கைகளும் உலகில் வேறு எந்த நாட்டிலும் காணப்படாத 'அநியாயம்' அல்லவா? நன்றிகொல்லும் பாவம் சும்மா விடுமா? காவிரிக் கரையில் உண்டு பருத்து வாழ்ந்தும் கன்னித் தமிழில் பாடியதற்குத் தீட்டுப்பட்டதாகத் 'தண்டபாணி தேசிகர்' காலத்தில், மேடையைக் கழுவிச் சுத்தம் செய்தீர்களே, இதுதான் வேதவழியா?

தமிழகத்தில் வாழ்வேன்; தமிழில் பேசுவேன்; தமிழைப் பயன்படுத்தி, இதழும் ஊடகமும் நடத்தி வருமானமும் தேடுவேன். ஆயினும் அதே தமிழைச் சிதைப்பேன்; தமிழனைச் சூத்திரனென்றும் தமிழைச் சூத்திரமொழி என்றும் தீண்டாமைக்கு வித்திடுவேன்; 'தினக்கொலை' நாளிதழ் நடத்தி, நாளும் மக்களிடமும் காணாத அளவு பிறமொழிச் சொற்களைக் கலந்து, கலப்படமொழியாக்கி வதைப்பேன் என்று நாள்தோறும் தாங்களும் தீங்குசெய்து, அறியாத் தமிழர்களையும் தீங்குசெய வழிகாட்டி வாழ்கிறீர்களே? இதுவா அந்தணர் செய்யும் அருந்தொண்டு? அருங்கேடுகளல்லவா இவை?

உண்மையான அந்தணர்களாக இருந்தால் என்ன செய்யவேண்டும்?

மழலையர் முதல் அடிப்படைக் கல்விக்குத் தமிழாம்தாய்மொழியேவேண்டுமெனக்கூறி நீங்களல்லவா வழிகாட்டவேண்டும்?

முற்காலக் கபிலரும் இக்காலப் பாரதியும் போன்ற, மனம் வாக்குக் காயம் பொய்க்காத அந்தணர்களாக இருந்தால், நீங்கள் அல்லவா தமிழிசையைப் பரப்ப வேண்டும்? நீங்களல்லவா தமிழ் வழிபாட்டை, தமிழ்வழிச் சடங்குகளை முன்னின்று நடத்தவேண்டும்?

அந்தணர்க்குரிய சான்றாண்மை, நடுவுநிலைமை, நன்றியறிதல், பண்புடைமை, பற்றுடைமை எதுவுமின்றி, 'நாங்கள் அந்தணர்கள்; வழிகாட்டப் பிறந்தவர்கள்' என்றால், யார் ஏற்பார்கள்? 'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்' என்பது வள்ளுவம்.

ஒன்றுநீங்கள்அந்தணராக-உண்மையில் - அந்தண்மை உடையவர்களாக மாறுங்கள்; அல்லது எங்கள் திருக் கோயில்களை விட்டு வெளியேறுங்கள்!

ஒன்று நீங்கள் முழுமைத் தமிழராகத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களைப்போல, பரிதிமாற் கலைஞரைப் போல, பி.டி.சீனிவாசய்யங்காரைப் போல மாறுங்கள்; அல்லது தனிஇனமாகப் பிரிந்து வாழுங்கள்.

தமிழகப்பொதுமக்கள்இன்று இருளில் உள்ளார்கள். அவர்கள் வெளிச்சத்திற்கு வந்தால், எதிர்ப்பு இயக்கம் ஒன்று மீண்டும் இங்கு தோன்றா தென்பது என்ன நிச்சயம்?

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரை, வட நாட்டுப் 'பிராமணர்கள்' இரண்டாம்தரமாக மதித்து, உரிய பதவி தந்து போற்றாது புறக்கணித்தது உலகறிந்த உண்மையாயிற்றே! அவர் 'சுதந்தராக் கட்சி' தொடங்கியதன் பின்னணிகள் யாவை?

மேலே கூறிய பல வினாக்களுக்கு அறிஞர்கள், நடுநிலைச்சான்றோர்கள் கூறியுள்ள விடைகளைத் தேடிப் படியுங்கள். உண்மையுணர்ந்து, நடுவுநிலைமைக்கு வாருங்கள்!

## 'ஆகமம்' காட்டி அச்சுறுத்துபவர்களுக்குச் சான்றோர்கள் கூறியுள்ள விடைகள்

முதலில் எசு.கே. பாண்டியன், தமது 'The Hidden Heritage', என்ற 'மறைக்கப்பட்ட மரபுவழிக் கருவூலம்' பற்றிய நூலில், கூறியுள்ளவற்றைக் காண்போம். இந்த நூலின்சாரம் புதுமையானது. அவர் 'இந்துயிசம்' (Hinduism) என்பதும் பிராமினிசம் (Brahmanism) என்பதும் வேறு வேறு என்று கருதுகிறார். திருக்குறளை இந்திய இயல் சாரமென்றும் கீதையைப் பிராமணியச் சாரமென்றும் விளக்கி பின்சொன்னதால், 'இந்திய இயலே' சிதறுண்டு, ாழ்வுற்றுப்போனதாகத் தம் நூலில் நிறுவுகிறார். மேலும் ணமும் புத்தமும்கூட பிராமணியமாக்கப்பட்டு, இந்திய யலே பிராமணிய மயமாகிவிட்டதென்று கூறுகிறார்.

**His conclusion is that for the establishment of a secular and socialist society, desanskritization of all Indian religions is necessary ... ...**

அதாவது இந்திய நாடு உருப்படவேண்டுமானால், அனைத்துமே சமற்கிருதமயமாக்கப் பட்டதைமாற்றி, முழுவதுமாகச் சமற்கிருதமயமற்ற நாடாக ஆக்க வேண்டுமென்று இந்நூல் விரித்துரைக்கிறது. சமற்கிருத வழிப்பட்ட அனைத்தையும் கைவிட்டாலன்றி, இந்திய நாடு உருப்படாது என்பது இதன் கருத்து.

இந்நூலாசிரியர் பாண்டியன் இந்திய ஆட்சிப் பணியில், மிக உயர்ந்த பதவியில், ஆந்திரத்தில் தம் வாழ்நாளைக் கழித்தவர். இவர் 'இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு சமற்கிருத மயமாக்கியதன் பங்கு' என்பது பற்றிய ஆய்வேட்டிற்காக, 1977இல், கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தால் பட்டமேற்படிப்புப் பட்டயம் பெற்றவர்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய, பல்கலைக் கழக மானியக் குழுவின் துணைத் தலைவராக விளங்கிய, கே.சச்சிதானந்தமூர்த்தி, ''மனித சகோதரத்துவத்தை மதிக்காத மதம் எதுவாயினும் அது ஏற்புடையதன்று. சைவசித்தாந்தமும் திருக்குறளும் மிகவுயர்ந்த சமயத்தைப் போதிக்கின்றன. அன்பையும் பக்தியையும் போதிக்கும் இவற்றைவிட மேலான மானுடஅறம் பிறிதொன்றில்லை. இவற்றைத் தாமும் பின்பற்றி, மற்றவர்களிடமும் பரப்புகின்றவர்கள், மனித இனத்திற்கு மட்டற்ற பணி செய்தவராவார்கள்'', என்று அழுத்தமுறக் கூறுகிறார்.

**I believe the authentic essence of every great religion can support and be in harmony with only a society which is just, democratic and egalitarian. Anything which is irrational, authoritarian, intolerent, unjust and anti-equalitarian cannot be really religious. Whether it be the caste system, apartheid, inequality of the sexes, or senseless violent opposition to a different way of life, - whatever violates reason, justice and the good sense of civilized humanity - should go. The Saiva Siddhanta and the Kural teach a great and sublime religion of love and devotion and an ethic to which no other is superior. Those who simultaneously put into practice their teachings and disseminate them do an invaluable service to humanity.''**

அறிஞர் பாண்டியனின் நூல், இந்த அளவு நடுவு நிலையோடு கருத்துரை தரத் தூண்டியுளது. இன்றைய 'மதவாத' எழுச்சி, இந்திய நாட்டிற்கு நல்லதன்று என்பதை இம் மேற்கோளிலுள்ள ஒவ்வொரு சொல்லும் தெளிவுபடுத்தும். தமிழில் வழிபாடு கூடாது; கடவுள் மங்கலம் கூடாது என்றும் வருணாசிரம தருமம் மீண்டும் தழைக்க வேண்டுமென்றும் தமிழகத்தில் எழுந்துள்ள உட்பூசலும் யாருக்கும் நல்லதன்று.

பூசுதல்என்பதுதூய்மைப்படுத்துதல்; அலங்கரித்தல். அதிலிருந்து வந்ததே பூசனை, பூசை, பூசகர், பூசாரியர், பூசிப்பவர் என்பன அனைத்தும். இதைப் 'பூஜா' என்றனர்; மீண்டும் தமிழாக்க முயன்றபோது 'பூஜை' என்றுகூறுகின்றனர். ''இந்தோஐரோப்பிய மொழிகளிலோ ஸமஸ்கிருதத்திலோஇதற்குவேர்ச்சொல்காண மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வெற்றிபெறவில்லை. 'குண்டர்ட்', 'கிட்டல்' என்ற இரண்டு மொழிநூல்வல்லவர்களும் 'பூசு' என்று தமிழிலும் பூஜா என்று கன்னடத்திலும் உள்ள சொல்தான் பூஜை எனக் கூறுவர்'' *(அ.ச.ஞான சம்பந்தன், பெரியபுராணம் ஓர்ஆய்வு, சென்னை, 1999 பக்.52)*

இறைத்திருமேனியையாரும்தொட்டு வணங்கவும், அவரவர் தாய்மொழியில் பாடிப் பரவவும் உரிமை தரவேண்டும். எண்ணெய்க் காப்பிட்டு, கருவறையாம் திருவுண்ணாழியைத் தூய்மைசெய்து, அலங்கரிக்கும் பணிகளை மட்டும், இறைவழிபாட்டுப் பயிற்சி பெற்ற யார் வேண்டுமாயினும் செய்ய வழிகாண வேண்டும். காசி முதலாகப் பல இடங்களில் இம்முறை உளது. இறைவனைவழிபட 'இடைத்தரகர்' வேண்டாம். இதற்கான

புதிய வழிவகைகளைத் தாய்மொழி உணர்வுடைய சான்றோர்கள் கூடி, திட்டமிட்டுக் கையேடுகள்உருவாக்க வேண்டும். அவ்வழிமுறைகளின்படி பயிற்சிதந்து, பயிற்சி பெற்றவர்களை அப்பணியில் ஈடுபடுத்த வேண்டும். முறையான பயிற்சி பெற்ற யாரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட, அண்மையில் வந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பும் உதவும்.

மேன்மேலும் 'மதவாதம்' பேசி, சமற்கிருத மேலாண்மையை நிலைநிறுத்த முயல்வது, யாருக்கும் நல்லதன்று. 'பிராமணாள் கிளப்புக்கள்' இன்று எங்குமே காணப்படவில்லை. இதனால் அக்குலத்தவர் பிழைப்பு வாய்ப்போ, வேலைவாய்ப்போ இழந்துவிடவில்லை. அதைவிட ஒருபடி உயர்ந்துள்ளனர் என்பதே உண்மை.

திருக்கோயில்களில் அனைவருக்கும் இடம்தந்து, அவரவர் தாய்மொழிக்கும் வழிதந்து, அவர்கள் விட்டுக் கொடுப்பதால் அல்லது விலகிக்கொள்வதால் உறுதியாக அத்தகையவர்கள் மேன்மேலும் உயர்வரேயன்றித் தாழ்வடையார்.

## தமிழக வரலாற்றில் சமற்கிருதமயமாக்கல்

தமிழ்மொழி, இன வரலாற்றில் பல சமயப் படையெடுப்புக்கள் நிகழ்ந்துள்ளன. இவை பண்பாட்டுப் படையெடுப்பும் மொழிப் படையெடுப்புமாய் இருந்தமையால், தமிழ்மொழி பல ஏற்ற இறக்கங்களைக் காண நேர்ந்தது.

குமரிக் கண்டம் முதல், சிந்துவெளிவரை தமிழும் தமிழின் கிளைமொழிகளுமே பேசப்பட்ட காலம் உண்டு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலை இது.

'ஆரியர் வருகைக்கு முன் வட இந்தியாவில் வழங்கிய மொழி தமிழ் என்பதில் எனக்குச் சிறிதுகூடச் சந்தேகமில்லை... அநேக சமஸ்கிருத பதங்கள் தமிழ்ச் சொற்களாயிருத்தலை ஆராய்ச்சிக்காரர் ஒப்புக் கொள்கின்றனர். ஆரியர் வந்து வடஇந்தியாவிற் குடியேறுவதன்முன் அங்குவழங்கியமொழி தமிழென்பதை இது வலியுறுத்துகின்றது. வடஇந்தியாவில் இப்போது வழங்கும் மொழிகளை ஆராயுமிடத்து இம் முடிவே ஏற்படுகின்றது. வடஇந்தியாவில் ஆதியில், தமிழ் வழங்கினது என்று சொல்வதற்கு மாறான சந்தேகம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.'

பண்டார்க்கரின் Prof. M.D. Bandarkar இம் முடிவு, ந.சி.கந்தையாபிள்ளையின் 'தமிழர்சரித்திரம்' எனும் நூலில் விரிவாகத் தரப்பெற்றுளது (பக்.26, 27).

வரலாற்றறிஞர் பி.டி. சீனிவாசய்யங்காரும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார். வடஇந்திய மொழிகளின் வாக்கிய அமைப்பு, முழுமையாகத் தமிழ் அடிப்படை யுடையனவாக இருப்பதை அவர் சான்று காட்டுவார்.

"These facts can only prove that people speaking dialects allied to Tamil, once inhabited the whole of India ...".*

---

*P.T. Srinivasa Iyengar, History of the Tamils from the earliest times to 600 A.D., Madras, Reprint 1995 p.2. இனிவரும் மேற்கோள்களில் பிடிஎஸ் என்று மட்டும் குறித்துப் பக்க எண் தரப்படும்.

## தமிழர் உருவவழிபாடும்
## சிவ வழிபாட்டின் தொன்மையும்

தமிழின் தொன்மையையும் 'தமிழ் இந்தியா' எனுமாறு இந்த நாடு பழங்காலத்தில் விளங்கியதையும் எடுத்துக்காட்டியதன் நோக்கம், இத்தகைய தமிழர்கள் உருவ வழிபாட்டினராகத் திகழ்ந்ததை நினைவூட்டவே ஆகும்.

ஆரியர்களுக்கு உருவ வழிபாடு கிடையாது; அவர்கள் அக்கினியை வழிபட்டனர்.

தமிழர்கள் முழுமுதற் கடவுளாகிய சிவனை வழிபட்டனர். ஆரியர்கட்குச் சிவ வழிபாடு தெரியாது.

வேதாந்த வைதிகர்கள் சிவ வழிபாட்டிற்கு, நேர் முரண்பட்டவர்கள்.

வேதாந்திகளின் கடவுளர்கள் எல்லாம் மேலுலகில் உள்ளனர். அக்கினி வளர்த்து, இவ்வுலக மக்களுக்குப் பயன்படும் எல்லாப் பொருள்களையும், ஆகுதியாக அதில் போடுவார்கள். அதைத் தேவர்களுக்குக் கொண்டு சென்று கொடுத்து, அவர்களின் ஆசியைப் பெற்றுத் தருவது அக்கினி. இவ்வுலகில் சிற்றுயிர்கள் முதல், ஏழை எளிய மக்கள் வரை பசியால் வாடி, உடையின்றித் தவிக்கும்போது, இம்மானுடத்தைப் புறக்கணித்துவிட்டு, எங்கோவுள்ள எல்லாம்வல்ல - பசியையும் அடக்கவல்ல, தீர்க்கவல்ல - தேவர்களுக்கு அனுப்புவதாகச் சொல்லும் இவ்வேள்வி, ஹோமங்களில் தமிழ் மன்னர்களும் பித்துப் பிடித்து அலைந்தார்கள். வடஆரிய மன்னரை வென்று, கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்த சேரன் செங்குட்டுவனை,

மாடலமறையவன்உடனேவேள்விசெய்யத் தூண்டியதையும் அவ்வாறு செய்வதால் புண்ணியம் பெருகி மறுமை கிட்டுமென, ஒரு மா மன்னனையே மூளைச்சலவை செய்ததையும் சிலம்பில் படிக்கிறோம்.

இத்தகைய மரபுவழி வந்தவர்கள், தமிழர்களின் சிவ வழிபாட்டை ஏற்கவேண்டிய கட்டாயம், பிழைப்பு வாய்ப்புக்காகவும் வருமானத்திற்காகவும் ஏற்பட்டது. அதனால் சிறுகச் சிறுக மக்கள் வழிக்குத் திரும்பினர். தமிழர்தம் இறைவன் இறைவி பெயர்களையும் தமிழ்த் திருத்தலப் பெயர்களையும் வடமொழி மயமாக்கினர். தமிழரின் கோயிற்கலை, சிற்பக்கலை போன்றவற்றைத் தமிழில் எழுதியிருந்தவற்றையும் வாய்மொழியாய் இருந்தவற்றையும் வடமொழியில் எழுதி வைத்துக் கொண்டனர். தமிழாகமங்கள் அழிக்கப்பட்டன. அங்ஙனம் வடமொழியில் எழுதிக்கொண்டவற்றை, இறைவனே அருளியதாகக் கதை கட்டினர். மடமை மிகுந்த தமிழர்கள் எதையும் நம்பிவிடுவர் என்பது அவர்களுக்குத் தெரியும்.

## வடமொழி வல்லாண்மைக் காலம்

மூவேந்தர்களும் சிற்றரசர்களும் தமிழகத்தில் ஒருவரை ஒருவர் எதிர்ப்பதே வேலையாக இருந்தனர். 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று, உலகத்து இயற்கை' என்று புறநானூற்றுப் புலவன் பாடுமாறு நிலைமை முற்றிப் போயிருந்தது.

முன்னரே இங்கு ஆரியக் கலப்பு இருந்தது. வடமொழி கற்றவர் பலர் இருந்தனர். அவர்கள் எல்லோரும் தமிழின் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டுத் தமிழர்களாகவே

இருந்தனர். இந்த இடத்தில் தமிழகப் பார்ப்பனர்கள் அன்று இங்குவாழ்ந்த நெறிமுறை வரலாறு பற்றி அறிஞர்கள் கூறியுள்ளதை எடுத்துக்காட்டுவது பொருத்தமாகும்.

## பலவகைப் பார்ப்பனியம்

பார்ப்பனர்களைவிடப் 'பார்ப்பனியம்' என்ற, பகுத்தறிவுக்கும் உயரிய உலகியலுக்கும் நாகரிகத்திற்கும் பொருந்தாத கோட்பாடுகள், பார்ப்பனரல்லாதாரிடமே இன்று மேலோங்கிக் காணப்படுகின்றன.

சில உண்மைகளை இங்கு எழுதவேண்டியுளது. உண்மைகள் கசக்கும். எனினும் தமிழினம் ஒன்றுபட, கசப்பு மருந்தை உண்டுதான் ஆகவேண்டும்.

முதலில் எஸ்.கே.பாண்டியன் குறிப்பதைப் பார்ப்போம். ஆரியர்கள் சூரியனைக் காண முடியாத அத்துணைப் பனிசூழ் பகுதிகளிலிருந்து இந்தியாவிற்குள் நுழைந்தனர். அக் கடினமான வழிகளில் வந்த அவர்களில் பலர் தம் மனைவியரை அழைத்துவர முடியவில்லை. அதனால், திராவிட இனப் பெண்களையே மணக்க நேர்ந்தது. இவ்வாறு ஆரியரில் தாழ்வுற்ற இனமொன்றும் கிளைத்தது. அதனால்தான் பகவத்கீதை, பெண்களைப் பாவப்பிறவிகள்என்று குறிக்கிறது. அவர்களின் மகன்களை, 'உபநயனம்' செய்து, மீண்டும் பிராமணப் பிறவியாக்கும் 'இருபிறப்பாளர்' சடங்கு இதனால் ஏற்பட்டதேயாம். மீண்டும் ஆரிய மதவழிச் சடங்குகள் இடம்பெற இது வழிவகுத்தது.

**Sir George Grierson's Linguistic Survey Confirms Dr. Hoernle's famous theory that the Aryans driven forward by the change of Climate in Central Asia entered India through the high and difficult passes of Gilgit and Chitral and established themselves in the fertile plains between the Ganges and the Jamuna. They followed a route which made it impossible for their women to accompany them. They took to themselves wives from the daughters of the dusky Dravidian aborigines. Here by contact with a different and in their sentiment, inferior race, caste came into being. This is probably the background in which sloka 32 in chapter IX of Bhagawad Gita categorizes all women as of 'sinful birth' alongwith Vaisyas and Sudras. Since the womenfolk were drawn mainly from non-Aryan stock, their sons had to be born again through the ritual of Upanayana to attain equality with them (S.K. Pandian, The Hidden Heritage, p.5).**

இவ்வாறு தொடக்கத்திலேயே இவர்கள் இருவகைப் பட்டனர். எனினும் சமற்கிருதமும் அதன் சாரமான வேதமும் உபநிடதங்களும் பின்பு வந்த புராணங்களும் தமிழர்க்கு செல்வவளம், துன்பநீக்கம், பாவபரிகாரம், புண்ணியம், மறுமை, மோட்சம் எனப்பல ஆசைகாட்டித் தம்வயப்படுத்திக் கொண்டன. ஆயினும் சிவ, திருமால் வழிபாடும் உருவ வழிபாடுமே மக்களிடமிருந்ததால், அவர்கள் சிவ, மாலிய வழிக்குச் சிறுகச் சிறுக மாறி, வருமானம் தேடி வாழ வேண்டியதானது. இவ்வாறு தமிழரின் வழிக்கு மாறினும், தங்கள் ‘வடமொழி’ மயக்க மருந்தைத் தடவி, மக்களைத் தம் கைப்பாவைகள் ஆக்கிக்கொண்டனர்.

இவ்வாறு தங்கள் பிற்கால வேதங்களில் திராவிடக் கூறுகளுக்கு இடமளித்தாலும், மக்களிடம் புண்ணியம், துறக்கவுலகம் என ஏதேதோ ஆசைகாட்டி, தங்கள்

மொழிமூலமாகவே அனைத்தையும் நடத்தினர். மக்கள் மொழிக்கு மாறினால், அனைவரது போட்டியும் வந்துவிடு மென்பதால், தங்கள் பிழைப்புப் போய்விடுமென நன்கறிந்திருந்தனர். அதனால் இங்கிருந்த மக்கள்தம் கலைக்கருவூலங்களையும்அறிவியல்,வானியல், கணியவியல் என அனைத்தையும் தம்மொழியில் ஆக்கிக்கொண்டனர். ஆகமம் என ஆக்கிக்கொண்டதும் அவ்வரிசையில் வந்ததேயாகும்.

சுருக்கமாகச் சொன்னால் தங்கள் சாதுரியத்தால் 'வடமொழிப் பெயர்ப்படுத்தியவை' பல; வடமொழி வண்ணப்படுத்தியவைபல;வடமொழி மூலப்படுத்தியவை பல. இவ்வாறு ஆக்கிக் கொண்டதோடு, மாமன்னர்களது பேரவைகளில் இடம் பிடித்துக்கொண்டு, பிற மக்கள் அனைவரையும் அடிமைப்படுத்தவும் மூளைச்சலவை செய்து முட்டாள்களாக்கவும் அனைத்து முயற்சியும் செய்தனர்.

தமிழர்கள் பக்தியில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள். இப்பக்தியையே மூலதனமாக வைத்துத் தமிழரை அடிமைகொண்ட வரலாறு பரிதாபமானது. அதாவதுஅவரவர்கட்குஆசையுள்ளதில், விருப்பமுள்ளதில் எல்லாம், தங்களுடைய 'எல்லாவற்றையும்' விட்டுக் கொடுத்து, அவர்களைத் தம்வயப்படுத்தி, பிறகு தமது நஞ்சினைப் புகுத்துவர். இதைத்தான் சுவாமி விவேகானந்தர், முன்பு காட்டிய மேற்கோளில், நஞ்சைப் புகுத்தியவர்களே, அதனை வெளியிலெடுத்து, மக்களை அவரவர் விருப்பிற்கேற்பச்சமத்துவமாக வாழவேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால் இன்றளவும், எத்தனை கலப்புற்று முற்றினும்தமிழரோடுதமிழராகிப் போனாலும்,

தமிழரைவிடக் கருத்துப் பெருத்துப் போனாலும் தமது மொழியை மட்டும், அரைகுறையாகவேனும் விடாது, ஓர் ஆயுதம்போலப் பயன்படுத்தி, மக்களைச் சுரண்டி வாழ்கின்றனர். இவர்களில் சிலர் எங்கு, எப்பகுதியில் வாழ்ந்தாலும் - எதனால், எம்மொழியால் வாழ்ந்தாலும் அப் பகுதியையே சீர்கெடுப்பது - அம்மொழியையே சிதைப்பது - என்பது இவர்கள் குருதியில் வழிவழியாக ஊறிப்போய்விட்டது. இஃது ஓர் ஆட்கொல்லி நோய் போலவும், புற்றுநோய் போலவும் அவர்களையும் அழித்து, அவர்களோடு வாழும் நம்மையும் அழித்து நாடும் மொழியும் பாழ்படுமாறு சிறுகச்சிறுகப் பரவுவதாகிறது. இதனையே விவரிக்கும் எஸ்.கே.பாண்டியன் இந்தியநாடு முழுவதுமே, 'சமற்கிருதமயமல்லாத' (desanskritization) நாடாக மாறவேண்டுமெனத் தம் நூலில் அழுத்தம்பெறக் கூறுகிறார். இவை மிக ஆழமான விவாதத்திற்குரியன. எனினும் ஒவ்வோர் இந்தியனும் சிந்திக்க வேண்டியன.

''ஓரினத்தைச் சேர்ந்த அத்திரி, கண்ணுவர், விசுவாமித்திரர் என்னும் மூன்று வமிசத்தினரும் தமிழர் அல்லது பரதவராவர். பிராமணர் என்று கருதப் பட்டவரும் பலர் தமிழ்வகுப்பைச் சார்ந்தவர்,'' என ந.சி.கந்தையாபிள்ளை கூறுகிறார் (நூல். பக் 183)

வடஇந்தியப் பிராமணருக்கும் தென்னிந்தியப் பிராமணருக்கும்மாறுபாடுகள்பலவுண்டு. தமிழ் நாட்டிலோ, ஒவ்வொரு சாதியாரும், பிராமணரின் உயர்குல வழக்கைப் பின்பற்றித் தத்தம் சாதியே உயர்ந்ததெனச் சாதிக்கத் தொடங்கினர். 'பறையன்' எனப் பிறர் இழிவுபடுத்த நினைக்கும் குலத்தவர்கள், தம் குலத்தைப் பாராட்டி, 'பார்ப்பானுக்கு மூப்பன் பறையன், கேட்பாரின்றிக்

கீழ்ச்சாதி' யானோம்' என்னும் முதுமொழியை எடுத்துக் கூறுகின்றனர். இவ்வாறு கந்தையா பிள்ளை தமது தமிழர் சரித்திரத்தில் விவரிப்பன பல *(209, 210)*.

பார்ப்பனர் பற்றிய பி.டி. சீனிவாச அய்யங்கார் கருத்துக்கள் மிக நுட்பமானவை. வடநாடு காலப் போக்கில் ஆரியாவர்த்தம், புண்ணிய பூமி எனவும் தென்னாடு 'துரத்தப்பட்டவர்கள் வாழுமிடம்' எனவும் வடவர்களால் கருதப்பட்டது. அதாவது திராவிடப் பெண்களை மணந்தும் பிறவாறு தமிழர்தம் சடங்குகளை ஏற்றும், தமிழரோடு தமிழரானவர்களை, வடக்கேயிருந்தவர்கள் தெற்கே துரத்தி விட்டனராம். அதாவது வேள்வியில் கொலையை மறுத்த திராவிடர்களோடு ஒன்றுபட்டதாலும், தமிழரின் உருவ வழிபாடு, சிவவழிபாடு, திருமால்வழிபாடு போன்றவற்றை ஏற்றதாலும் அவர்கள் தெற்கே துரத்தப்பட்டனராம். இங்கு இவ்வாறு குடியேறியவர்களுடனும், தமிழ் மன்னர்களால் குடியேற்றப்பட்டவர்களுடனும் தமிழர்கள் ஒன்று கலந்தனர்.

இராட்சதர்கள் என்று அழைக்கப்பட்ட பலர் பிராமணர்களாயினர்; பிராமணர்கள் மன்னர்களால் மதிக்கப்பட்டு, மேனிலையில் இருக்கக்கண்ட, தமிழக ஆசான்மார், கணியர், அறிவர், முனிவர் (துறவியர்) யாவரும் பிராமணர்களாக மாறிக் கொண்டனர். சமற்கிருதம் கற்று மேன்மை தேடிக் கொண்டனர். இன்று ஆங்கிலம் கற்றவர்கள் தங்களைத் தனிவர்க்கமாகவும் உயர்வாகவும் கருதிக் கொண்ட நிலைபோன்றது இது.

**Moreover many Raksasas became great Brahmanas, expert students of the Veda and performers of austerities. They were called Brahmaraksasas. (p.51)**

ஆரியப்பெண்களைமணந்துகொண்ட திராவிடர்கள் போல, தெற்கே 'பிரமச்சாரிகளாக' வந்த பிராமணர்கள் இந்நாட்டுப் பெண்களை மணந்துகொண்டனர். இதுவே இன்றைய பிராமணியம்.

பிரஹ்ம ராட்சதர்கள் பற்றிப் பல கதைகள் வழங்கினும்இக்கலப்புற்றஇனமே அவ்வாறழைக்கப்பட்ட தென்றும் இங்குள்ள பார்ப்பனர்கள் இவ்வகையினரே என்றும் அறிஞர் பி.டி.எஸ். கூறுவனவற்றின் சாரமான பகுதிகள் நினைக்கத் தக்கன.

''தஸ்யூக்களோடு சேர்ந்து கலந்த பிராமணர்களும், இயல்பாகவே பிராமணர்களாக மாறிய இராட்சதர்களுமே 'பிரஹ்ம இராட்சதர்கள்' எனப்பட்டனர். இத்தகைய குடும்பங்களே தென்னிந்தியாவின் பிராமணஇனத் தோற்றுவாய்களாகும். இத்தனித்தன்மையுடைய இவர்கள், வேதகால வழக்கங்களை ஒருபுறம் அவ்வாறே காப்பாற்றிக் கொண்டு,ஆர்யாவர்த்தத்திலுள்ளோர்அறியாத தென்னிந்திய வழக்கங்களையும் மேற்கொண்டனர். இவை பி.டி.எஸ். கருத்துக்கள்.

இவ் இரட்டைநிலையே இன்றளவும் நீடிப்பதால் தான், இங்கு இது தீராத நோய்போலப் பரவி, பேய் பிசாசுபோலத்தமிழகத்தைப் பிடித்தாட்டுகிறது. தமிழ்மக்கள் எழுச்சிபெற வேப்பங்குழையடித்துச் சாமியாடினால், ஒருவேளை இப்பேய்கள் விலகி, நாமனைவரும் ஓரினப் பட்ட தமிழராவோம்.

அ.ச.ஞா. அவர்கள் தமது பெரியபுராண ஆய்வு நூலில், 'வேள்வி செய்யாத பார்ப்பனர்கள், சங்கறுத்து வளையல் செய்யும் தொழிலில் இருந்தமை பற்றிய

அகநானூற்றுப் பாடலை' (24) எடுத்துக்காட்டுகிறார். அவர் தமிழகத்திலே தமிழராகித் தமிழ்ப் பெண்களை மணந்து, இங்கு வாழ்ந்த சிவவேதியர் வேறு; வேத வேதியர் வேறு என்று தெளிவுபடுத்துகிறார். வடநாட்டு வேதியருக்கும் தென்னாட்டு வேதியருக்கும் எவ்விதத் தொடர்போ, மணவினைக் கொடுக்கல் வாங்கலோ, பழக்க வழக்க ஒற்றுமையோ எதுவுமில்லை என்று விளக்கியுள்ளார். இவ்வளவும்எழுதக் காரணம் இங்குள்ளவர்கள் வேற்றுமை பாராட்டலாகாது; தமிழுக்குத் தங்களை அயன்மைப் படுத்திக்கொள்ளலாகாது; வடநாட்டுப் பிராமண மேலாண்மையை எதிர்த்து, சுதந்திராக் கட்சி தொடங்கி, இந்தியையும் எதிர்த்த சக்கரவர்த்தி இராசகோபாலாச் சாரியாரின் மனநிலைக்கு மாறவேண்டும் என்பதற்காகவே யாம். தமிழுக்குக் குரல் கொடுத்த மாகவிஞ பாரதிபோல் மாறவேண்டும் என்பதற்காகவேயாம்.

கபிலர் ஒரு தமிழக அந்தணர். அவர் காலத்தே தமிழர்களே வேத வேள்வியில் நம்பிக்கை வைத்து, வடமொழிவழி நடைபெற்ற வேள்விகளுக்குப் பொன்னும் பொருளும் தந்து ஆதரவு தந்தனர். இதனால் தமிழக அந்தணர்களும் ஆசான்மார்களும் கணியர்களும் அறிவன் மாரும்தங்களுக்கும்வடமொழிதெரியுமென்றும், தாங்களும் அதில்ஈடுபாடுடையவர்களேஎன்றும்கூற வேண்டியதாயிற்று. ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவிக்கக் 'குறிஞ்சிப் பாட்டைப்' பாடிய கபிலர், தாம் ஒரு தமிழந்தணர் என்பதையே வெளிப்படுத்துகிறார்.

இந்நிலையில் நாம் அறியவேண்டியன: வேத வேதியரினின்றும் சிவ வேதியர் எவ்வெவ் வகையில் வேறுபட்டனர்? சிவ வேதியர் மற்றும் சேக்கிழார்

போல்வார் நான்மறையையும் வடமொழியையும் ஏன், எதற்காக, எவ்வாறு போற்றினர்? தமிழர்கள் சமண புத்த மதங்களை வெளிப்படையாகவும் வேதவழி வைதிகத்தை மறைமுகமாகவும் மறுத்த விதம் யாது? தமிழாகமங்கள் - ஆகமங்கள் பற்றிய விவரங்கள் யாவை? ஆகமங்கள் வடமொழியில் காணப்படுவது ஏன்? ஆகமங்கள் தமிழருடையனவே என்பதை அறிஞர்கள் எவ்வாறு நிறுவியுள்ளனர்? ஆகமங்கள் தமிழ் வழிபாட்டை, அருச்சனையை, கடவுள் மங்கலத்தை மறுக்கின்றனவா? இவற்றுக்கு விடை காணவேண்டும்.

## தமிழரின் கோயிற்கலையியலே 'ஆகமங்கள்'

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியவை தமிழரின் குறிஞ்சி, முல்லைநில வழிபாடுகளாகும். ஏனைய நெய்தல், மருதநிலவழிபாடுகள், நிலத்தெய்வ வழிபாடுகளாகவே இருந்து அத்துணைவளர்ச்சி பெற்றில.

சிலம்பில் வரும் இந்திரவிழாவிற்கும் இன்றைய பொங்கல் விழாவிற்கும் தொடர்புண்டு. பொங்கல் மருதநில விழா. இந்திரன் மருதநிலத் தெய்வம். அவன் 'வேந்தன்' எனவும் அழைக்கப்பட்டனன். இந்திரனுடன் தொடர்புடைய வச்சிரக் கோட்டம், ஐராவதம் எனப்பட்ட களிற்றரசு விளங்கிய கோட்டம், கற்பகதரு நிற்கும் தருநிலைக்கோட்டம் பற்றி இந்திரவிழவூரெடுத்த காதையில் காண்கின்றோம். அன்றே ஆரியர் கலப்பு நேர்ந்திருப்பினும், தமிழரின் கோயில்விழா ஒன்று எவ்வாறு நடந்ததென்பதை, தமிழர்கள் கொண்டாடிய விதத்தை அக்காதைமூலமும் 'மணிமேகலை' மூலமும் அறியலாம். தமிழரின் 'கல்லெடுத்தல்' எனும் தொல்

பழங்கால முறையே, கோயில் கட்டிக் கும்பிடும் வழிபாடாக வளர்ந்தது. சிலம்பு - வஞ்சிக் காண்டம் கோயிலெழுப்புதலைக் கடவுள் மங்கலம் செய்தல் என்று திரைக் காட்சிபோல் படம் பிடித்துக் காட்டுகிறது.

உலகிலேயே பத்திமைப் பாடல்களை மிகுதியாகக் கொண்ட முதல்மொழி, முதன்மைமொழி தமிழேயாம். பத்திமை இயக்கம் தமிழகத்திலிருந்தே, வடநாட்டிலும் சென்று பரவியதென்பதை ஆய்வாளர் நிறுவியுள்ளனர்.

இந்நிலையில் இந்திரவழிபாடு தனிச் சமயமாக மாறாது, சிறு சடங்களவில் நின்றுபோனது. நெய்தல்நில வழிபாடும் சிறுசடங்காகிப் போனது. இவை இரண்டும், மற்ற இரண்டில் கலந்துபோயின. சிவனியமும், மாலியமும் மட்டுமே தனிச்சமய நெறிகளாக வளர்ந்தன. பரிபாடல் இதை நிலைநிறுத்துகிறது. இவற்றிற்கான கோயில்கட்டும் கலை, கோயில் வடிவத் தோற்றமும் கோயில்வகை வளர்ச்சியும் கோயில் சார்ந்த சிற்பக் கலை, இசைக்கலை, நாட்டியக் கலை போல்வனவற்றின் வளர்ச்சியும் கூர்தலற முறையில் (Evolution) வளர்ந்த வரலாற்றை, நம் பத்திமை இலக்கியங்களில் துருவி ஆராய்ந்து இன்றும் காணலாம். குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி போல்வன கோயில்களில் வழிபாடு செய்த நெறியில் இசையும் பாட்டும் பெற்றிருந்த இடத்தை உணர்த்துவன. மாதவியின் பதினொரு வகை ஆடல்களும், வரிக்கூத்து வகைகளும் கோயில் சார்ந்த தமிழர்தம் தொன்ம (புராண) அடிப்படையுடையன. இவற்றுளேற்பட்டிருந்த வடமொழிக் கலப்பு, தண்ணீரில் மிதக்கும் சில எண்ணெய்த் துளிகள் போலத் தெளிவாகத் தெரிவன.

இக் கோயிற் கலை தொடர்பான வரலாறு, முன்பு குறிப்பிட்டதுபோல், மிகுபழங்காலத் தொன்மையுடையது. காலந் தோறும் பெற்ற வளர்ச்சிகள் பல வாய்மொழி மரபுடையன. தந்தைவழி மகன் அறிந்துகொண்டு, வழிவழி மரபாகவருவன. (திருவள்ளுவர் 'செய்தொழில் வேற்றுமை' - 972) எனச் சுட்டியது இதனையே. வருணா சிரம தருமமன்று இது.) மேலும் பல எழுத்துருவில் பாடி வைக்கப்பட்டன. தொல் பழங்காலம் (பண்பாட்டு மானுடவியற்காலம்), சங்ககாலம், களப்பிர பல்லவர்காலம் வரை வளர்ந்து, சோழர் காலத்தில் உச்சத்தைத் தொட்டது. பிற்காலப் பாண்டியர் காலத்தும் தெற்கே நிகரற்று நிலை பெற்றது, இக் கோயிற்கலை.

மகேந்திரப் போத்தரையன் காலத்தில் - அதற்குமுன் களப்பிரர் காலம் தொடங்கி, அவனுக்குப்பின் தமிழுக்கு உயிர் கொடுத்த நந்திவர்மப் பல்லவன் காலம்வரை - ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் தமிழ் புறந்தள்ளப்பட்டது, ஆட்சியில் இருந்தவர்களால். இன்றும் ஆட்சியில் இருக்கும்போது தமிழைப் புறக்கணிப்பவர்களே தமிழ்த் தலைவர்களாகவும் தமிழன்னைகளாகவும் விளங்குவதைப் பார்க்கலாம். இப் பல்லவர்கள் வடமொழிக் கல்லூரிகள் அமைத்து, சமற்கிருதக் கல்வியை வானுற வளர்த்தனர். தமிழ்ப் புலவர்கள் வீட்டுடன் அடங்கி ஒடுங்கிப் போயினர். வடநாட்டிலிருந்தும் புதிய பிராமணர்கள் குடியேற்றப் பட்டனர். தமிழ்நாட்டில் மகேந்திரனே வடமொழியில் நூல்கள் எழுதினான். வடமொழி வாணர்களே போற்றப் பட்டதையும், பொன்னும் பொருளும் தந்து கவுரவிக்கப் பட்டதையும் பார்த்து இங்கிருந்த பலரும் தாங்களும்

வடமொழி வாணரெனக் காட்டிக் கொண்டு மாறிக் கொண்டனர்.

தொல்காப்பியர்காலத்திலேயே வடமொழி கற்கும் பழக்கம் இருந்தது. ஆனால் தமிழ் ஊற்றம் மிக்கவர்கள், பிறமொழியும்கற்பதென்றஆர்வத்தில்கற்றபெருநோக்கம் அது. தமிழைப் புறக்கணித்தும் புறந்தள்ளியும் கீழ்மைப் படுத்தியும் வடமொழி 'மோகத்தில்' மூழ்கிய காலம் இந்த ஐந்து நூற்றாண்டுகளேயாம். இக்காலப் பகுதியில் எல்லாம் சமற்கிருத மயமாக்கப்பட்டன.

வடமொழிப் பெயர்ப்படுத்துவது
வடமொழிக் கலைச்சொற்படுத்துவது
வடமொழி வண்ணப் படுத்துவது
வடமொழி மூலப் படுத்துவது

எனப் பலவாறு, வருமானம் தரக்கூடியவற்றையும் வாழ்க்கைக்குள் அகப்படும் சடங்குகள், விழாக்கள் போன்றவற்றையும் சமற்கிருதமயமாக்கித் தமிழையே 'அழிக்க', 'ஒடுக்க', 'மறைக்க' முயன்ற காலம் அது. பிற்காலச் சோழப் பேரரசும் தென்னகப் பாண்டியர் எழுச்சியும் ஏற்பட்டிலவேல், இந்நூலை எழுதக்கூட வாய்ப்பு நேர்ந்திராது.

ஒரே ஒரு சான்றை மீண்டும் எண்ணிப் பாருங்கள். 'வேதாரண்யம்', விருத்தாசலம்', 'சிதம்பரம்', 'மாயூரம்' என்றிவ்வாறு, வழிபடத் தக்க ஊர்ப்பெயர்கள் சமற்கிருத மயமாக்கப்பட்டன. முன்னைப் பெயர்கள் தமிழே என்பதையோ, அவை பிற்பாடு மாற்றப்பட்டன என்பதையோ, யாரேனும் மறுக்கமுடியுமா? திருமுறைகளில்

வரும்பெயர்கள்யாவை?இன்றுகோயில்களில் எழுதியிருக்கும் பெயர்கள் யாவை?

பெருவுடையாரைப் பிருகதீஸ்வரர் ஆக்கி அண்ணா மலையாரை அருணாசலேஸ்வரர் ஆக்கினர் என்பதை, தமிழகத்திற்குள் இருந்துகொண்டே, ஒரு தீவு எனச் செயற்படும் வருணாசிரமப் பெரியவர் எவரேயாயினும் மறுக்க இயலுமா?

தமிழர்களின் சடங்குகளுக்குள் எல்லாம் நுழைந்து கொண்டு, வருமானம் தேடச்சமற்கிருதம் புகுத்தப்பட்டது. 'மந்திரம்' எனும் பெயரால் மண வீட்டிலும் நுழைந்து, பிண வீட்டிலும் நுழைந்து 'பூரிக்' காசு பெற்றதுமுதல், நாங்கள் செய்துவைக்கிறோம் எனத் தரகு வேலையை ஒரு தொழிலாகக் கொண்டு இடைப்புகுந்தனர் என்பதை ஆய்வுகள் மூலம் நிறுவியுள்ளனரே?

இதைப்போலத்தான்தமிழரின் 'கோயிற் கலையியல்' காலந்தோறும் - அதாவது கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் சிறிதுசிறிதாக வடமொழி மயமாக்கப் பட்டது. ஊர்ப் பெயரை, இறைவன் இறைவி பெயரை எல்லாம் மாற்றியவன்தான்இக்கோயிற்கலையியலையும் வடமொழி மயமாக்க முயன்றனன் என எளிதில் உணரலாமே?

ஒரு திருட்டில்அகப்பட்டவனைப் பிடிக்கப்போகப் பல கூட்டுத் திருடர்களும் மேலும் பல திருட்டுக்களும் 'அம்பலம்' ஆவதை உலகிற் காண்கிறோமே. இதனை இங்கு பார்ப்பனர்களை மட்டும் நினைத்து எழுதவில்லை. இவ்வாறு சமற்கிருதமயமாக்கியதால், தங்கள் குல வாழ்வு செழிக்கவும் - மற்ற அனைவரிடமுமிருந்து தம் தொழிலை மறைக்கவும் - அக்கலைக் கருவூலங்கள் பொதுச்

சொத்தாகிவிடாமல் தனியுரிமை - உடைமைகளாகவும் வாய்ப்பிருப்பதைக்கண்ட, பார்ப்பனரல்லாதார் பலரும்கூட இத் 'தீச்செயலில்' ஈடுபட்டனர். தாங்களும் பூணூல் போட்டுக்கொண்டனர். தாங்களும் பிராமணர்களே, அந்தணர்களே எனக் கூறிக்கொண்டனர்.

அதனால்தான் நடுவுநிலைமையுடைய ஆய்வுப் பேரறிஞர்கள் 'ஆகமம்' என்பது தமிழருடையது. அது வடமொழிப் படுத்தப்பட்டது. அதற்கு இடைக்காலச் சமற்கிருத வல்லாண்மையும் மோகமும், தன்னலமும் இன்றைய ஆங்கில மோகத்தைவிடக் கூடுதலாக இருந்ததே காரணம் என்று சான்றுகளுடன் கூறியுள்ளனர்.

ஆகமம் 'இறைவனால் அருளப்பட்டது' என்பதே ஆலமர் செல்வனாம் நமது தென்முகக் கடவுள் தந்தது; தமிழர்கண்டது என்பதைச்சொல்லாமற் சொல்வதேயாம்.

ஆனால் இறைவனது தமிழ்ப்பெயர்கள் மறைக்கப் பட்டதுபோல், தமிழ் ஆகமங்களும் மறைக்கப்பட்டன இதைப் பேரறிஞர் மு.அருணாசலம் அவர்கள் தமது 'சிவாகமங்கள்' (The Sivagamas) எனும் ஆங்கில நூலில் தெளிவாகக் குறிப்பிடக் காண்கிறோம். திருமூலர் வாக்கின்வழி அவர் தரும் விளக்கம் இது :

**He created me in the proper manner,
so that I might write on Him in the
Tamil language (81).**

**Tirumular also mentions nine Sanskrit agamas (Vide page 6, footnote). It is evident from these that he is writing now the Sivagama afresh in Tamil because the Tamil Agamas which has existed previously had all disappeared.**

**The position mentioned here by Tirumular has happened definitely because the originals in Tamil had disappeared, the Sanskrit agamas had taken their places, and so he is now giving the agama essence afresh in Tamil. The term agama in sanskrit may also mean that which has come into Sanskrit from Tamil. (p.12). The common noun agama simply means coming or acquisition. (p.13).**

தமிழில் இருந்த ஆகமங்கள் மறைந்தன. அதனால் புதிதாகத் திருமூலர் 'திருமந்திர'வழித் தமிழ் ஆகமம் படைத்தார். 'ஆகமம்' என்ற சொல்லிற்கே, 'தமிழிலிருந்து வடமொழிக்கு வந்தது' என்பதே பொருளாதல் கூடும் என்பது மு.அருணாசலனார்கருத்து. அதற்குஅவர் திருமந்திரப் பாடல்களையும், பெரியபுராணத்தில்திருமூலர்வரலாற்றைப் பாடிய தெய்வச் சேக்கிழார் வாக்கையும் மேற்கோள் காட்டுகிறார்.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றுஅவ் வியாமளம் ஆகும்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாள்தொறும்
சிந்தைசெய்து ஆகமம் செப்ப லுற்றேனே

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

இவை போன்ற திருமூலர் வாக்குகள், பழைய - மிகத் தொன்மையான - சிவ ஆகமங்கள் இருந்தன

என்பதையும், அவை வடமொழிப் படுத்தப்பட்டன என்பதையும் அவற்றைத் 'தமிழ்செய்யுமாறு இறைவன் தம்மைப் படைத்தனன்' என்பதையும் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

> 'சடையார் தாம் தந்த ஆகமப் பொருளை
> மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்
> வகுக்கக் கண்ணிய அத்திருவருள்' *(3591)*
>
> எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய
> பூசனைக்கு ஏற்பக் கொய்த மலரும் புனலும்
> முதலான கொண்டு அணைந்தார் *(784)*
>
> எண்ணில் ஆகமம் இயம்பிய
> இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது
> பூசனை' *(1133)*

இவ்வாறு வடமொழிப் படுத்தப்பட்டவற்றை மீண்டும் தமிழாக வகுப்பத் திருமூலர் தோன்றியதைச் சேக்கிழார் எடுத்தியம்புகிறார். 'எண்ணில் ஆகமம்' என்பதையும் மீட்டும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**'நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க, அர்ச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்றார் தூமறை பாடும் வாயார்'** என்ற சேக்கிழாரது வாக்கினையும் உடன்வைத்து எண்ணுக. வேதம் என்றும் மறைபாடும் வாயார் என்றும் வருவன பலவும், அன்றைய சூழலில் வடமொழிக்கு வாயளவில் கொடுத்த சிறப்பே (Lip Service) என்பார் மு. அருணாசலனார். அங்ஙனம் பாடினும் மூவர் முதலிகள் முதல் சேக்கிழார்வரை சமண புத்த மதங்களை வெளிப் படையாக எதிர்த்ததுபோல், வைதிகத்தை மறைமுகமாக

முற்றிலும் மறுத்தனர் என்பார் அ.ச.ஞான சம்பந்தனார். அவற்றையும் விரிவாக எடுத்துக் காண்போம்.

அனைத்தையும் ஒருசேர எண்ணிக்காணும் பொழுதே உண்மை புலனாகும். **'அருச்சனை தமிழில் பாடுக'** என்றாராம் இறைவன்.

தாம் தூமறை பாடும் வாயாராக இருப்பதால், அருச்சனையை வடமொழியிற் பாடுக என்று தருமபுர ஆதீன மாநாட்டுத் தீர்மானப்படி, சேக்கிழார் பாடி இருக்கவேண்டும். ஆனால்தாம்பாடுவது மறையேயானாலும், என்னை நீ தமிழிற்பாடு என்று ஒரு செந்தமிழ் அந்தணராம் சுந்தரரிடம் நமது சிவபெருமானே கூறினார் என்பதன் நுட்பத்தை உணரக் கூர்மையான அறிவும் தாயிடம் காட்டும் சேயன்பும் வேண்டும். சேக்கிழாரின் உள்நோக்கம் புலப்படவில்லையா? எல்லாவற்றையும் துறந்தாலும் தமிழை - திருமுறையை - தெய்வச் சேக்கிழாரைத் துறக்கலாமா? சிவனையல்லவா, சிவாச்சாரியார்களும் சேர்ந்து வெளியே தள்ளிவிட்டார்கள்?

வழிபாட்டு நெறிமுறைகளையும், மெய்யியலையும் திருமூலர் வகுத்துள்ளார். பிற சிற்பம், நாட்டியம், இசை போலும் கோயிற்கலைகள் பற்றிய தமிழிய ஆகமங்களை, அவைபற்றித் தேர்ச்சியுடையார் செய்திருப்பர். சிலம்பில் மாதவி 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினள்' என்றல்லவோ வருகிறது. அந்த நாட்டிய நூல் எங்கே?

ஆகமங்கள் என்பன கோயிற்கலை பற்றியன. அவை யாவும் தமிழில் இருந்தன. பின் வடமொழி மயமாக்கப்பட்டன. சான்றுக்கு ஒன்று; நாட்டியக் கலை

தமிழர்தம் கோயில்களைச் சார்ந்தே வளர்ந்தது. அதனை வடமொழியில் எழுதிவைத்து, தமிழ் மூலநூல்கள் அழிக்கப்பட்டுவிட்டதால், இவை யாவும் நம்மவை அல்ல என்று நாம் புறக்கணிக்கக் கூடாது. தமிழ் நூல்கள் எப்படியோ அழிக்கப்பட்டுவிட்டன. இன்று வடமொழியில் உள்ளவை தமிழில் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும். அப்பணியைச் சமற்கிருதம் கற்றவர்கள் செய்ய முன்வரவேண்டும். வடமொழியில் இருப்பதால் இவற்றையெல்லாம் 'நம்முடையன அல்ல' என்று, எண்ணி விடாதீர்கள் எனத் தமிழர்களை விழிப்பு ணர்த்துகிறார், மு.அருணாசலனார்.

அவர் கூறும் 'நாட்டியம்' பற்றிய கருத்தை முதலிற் காண்போம்.

> **In the present day when there is a large awakening in matters of dance (bharata Natya) and art, there is no other scriptural authority than the agamas to lay down the rules for temple dance and its parts such as mudras, musical instruments, and the like. We should remember, all classical dances have their origin in temple' dances and the sanction for all the dances is contained only in the agamas. The Bharata Sastra of Bharata Came much later in point of time than the agamas; Bharata first wrote his sastra in Tamil and later wrote it in Sanskrit which was the lingua franca among all the learned people of the whole of India. The very Concept of dance is Tamilian and the large number of mudras in the natya have been bodily lifted from the agamic Siva puja, where the spiritual significance continues to exist even to this day in the atmartha and parartha pujas.**

தமிழர்கள் இழந்தவற்றை மீட்கவேண்டிய மறுமலர்ச்சிக் காலம் இது. நாம் ஒரு சுதந்திரநாட்டில் வாழ்கிறோம். தமிழராகிய நாம் நம் உடைமைகள் யாவை என உணர்ந்து மீட்க வேண்டும். நாட்டிய நூலை பரதமுனிவர்தமிழில்தான்எழுதினார்என்பது அப்பழுக்கற்ற உண்மை. வட மொழியின்மீது தமிழின் தாக்கம் மிகுதி. முதலில் வடமொழிதான் தமிழ்ச் சொற்களைக் கடன் பெற்றது. காலம் மாறியபோது, இடைக்காலப் பேரரசுகள் பல வடமொழியை மிக உயர்த்தின. இந்தியக் கலை, சமயம் பற்றிய பொது மொழி போலச் சமற்கிருதத்தை ஆக்கினர். இன்று சுதந்திரம் பெற்ற பிறகு, அவரவர் தத்தம் உடைமைகளைக் காக்கும் முயற்சி தொடங்கியுளது. நாமும்பறிகொடுத்தவற்றைமீட்பதிலும்மீட்க முயலுவதிலும் தவறில்லை. வடமொழி மீது நமக்கு வெறுப்பில்லை. அம்மொழி எடுத்துக் கொண்டவற்றை, நாம் தமிழாக்குவதில் இனி முனைய வேண்டும்.

இவை நாம் குறிப்பிடுவன அல்ல. பரிதிமாற் கலைஞர் எனத் தம் பெயரைத் தமிழ்ப்பெயராக முதன் முதலில் மாற்றிக்கொண்டு வழிகாட்டிய வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார், தமது 'தமிழ்மொழியின் வரலாறு' எனும்நூலில் 'வடமொழிக் கலப்புப்' பற்றி எழுதியிருப்பதை இங்குக் காண்போம்:

**வடமொழி தமிழ்நாட்டில்வெகுநாள்காறும் இயங்கியும் அதற்குத் தமிழ்மொழியைத் தன் வழியிலே திருப்பிக் கொள்ளுதற்குற்ற ஆற்றலில்லாது போயிற்று.**

**வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை யுணர்ந்து, அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான்**

புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்மநூற் பயிற்சி மிக்குடை யாராயும் கலையுணர்ச்சி சான்றவராயும் இருந்தமை பற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர்; தமிழர்களிடத்தில் இல்லாதிருந்த அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நால்வகைச் சாதிமுறையை மெல்லமெல்ல நாட்டிவிட்டனர்.

'முற்படைப்பதனில் வேறாகிய முறைமை போல் நால்வகைச் சாதி இந்நாட்டில் நீர் நாட்டினீர்!' என்று ஆரியரை நோக்கி முழங்கும் 'கபிலரகவலை'யும் காண்க.

இன்னும் அவர் தம் புந்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர். தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும் வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர். (33)

மேலேகாட்டியமேற்கோளில்ஒவ்வொருசொல்லையும் ஒவ்வொருவரியையும், 'அருந்தொண்டாற்றிய' அந்தணர்களும் அவர்களுக்குத் துணைபோகும் ஆன்மிகப் பீடங்களும் திரும்பத் திரும்பப் படித்து, விளக்கம் பெறுவது நல்லது.

இவ்வாறு சாத்திரியார் மட்டும் கூறவில்லை. மேனாட்டு அறிஞர்களும் கூறியுள்ளனர்.

'பிராமணர்களின் வெறுப்பு தமிழ் பாஷை குன்றுதற்கும் தமிழ் நூல்கள் பலவற்றின் அழிவுக்கும் ஏதுவாயிருந்தது. தமிழ்நாட்டின் பலபகுதியை வாய்ப்படுத்திக் கொண்ட கடல் பல நூல்களையும்

கொண்டது. கி.பி. 10-ம் நூற்றாண்டில் பிராமணராலும் 14-ம் நூற்றாண்டில் மகமதியராலும் அநேகம் நூல்கள் அழிக்கப்பட்டன. 'அரசரின் பரிபாலனத்தின் கீழ்த் தோன்றிய நூல்கள் காணப்படவில்லை. அந்நூல்கள் 14-ம் நூற்றாண்டில் மகமதியரால் அழிக்கப்பட்டன', என்று வின்ஸ்லோ பாதிரியார் கூறியுள்ளார்.

'பிராமணர் தாம் அழிக்க முடியாத நூல்களைச் சிதைவுபடுத்தினர். வெள்ளத்தாலும் நெருப்பாலும் நேர்ந்த கொள்ளையில் இது மேலானது. தமிழ் நூல்களை எடுத்து சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துப் பலகேடுகள் செய்திருக்கின்றனர். பிழையான வழிகாட்டியிலும் வழிகாட்டியில்லாமலிருப்பது நன்று' என கோவர் (Gover) என்னும் ஆசிரியர் கூறுவர்.

இது யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையா பிள்ளை 1939இல் எழுதி வெளியிட்ட **தமிழர் சரித்திரம்** என்ற நூலிலிருந்து எழுத்துமாறாமல் எடுத்துக் காட்டப் பெற்றது (பக்.222-223).

'ஆகம விதிகள்' என்று ஏதோ அணுகுண்டை வைத்திருப்பவர்கள்போல், தமிழ் மொழியை திருக் கோயில்களுக்குள் நுழைய விடாமல், கத்துகிற, கதறுகிற போலிகள், இவை அனைத்தையும் நினைத்தாவது பார்க்க வேண்டும். மனச்சான்று என்று ஒன்று இல்லாமலா போய்விடும்?

தமிழ்நாட்டில் தமிழர்களின் சமய வாழ்வில், தமிழர்கள்கட்டியகோயிலில்,தமிழன்தமிழில் வழிபட்டால், கோயில் தீட்டாகிவிடுமென்று 'ஆகமம்' கூறுகிறதாம். இவர்களில் எத்தனை பேருக்குச் சமற்கிருதம் தெரியும்?

சில பத்ததிகள், சில நாமாவளிகள் தவிர வேறு எதுவுமே தெரியாத பேர்வழிகளே அதிகம். அதுவும் 'அட்சர சுத்தமாக' உச்சரிக்கத் தெரியாதவர்களால், அவ் வடமொழி படும்பாடு பெரிது. வருமானம் ஒன்றே கருதி, இவர்கள் ஆகமத்தை, ஒரு பயங்கர ஆயுதமாகப் பயன்படுத்த நினைப்பது தவறு. ஆகமம் பற்றிய விவரம் தெரியாமலும் விளக்கம் இன்றியும் இவர்கள் 'கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றுகிறார்கள்'.

வேறொன்றும் அடிக்கடி பேசப்படுகிறது. ஆங்கில வழிப்பள்ளி நடத்துகிறவர்கள் 'மக்கள் விரும்புகிறார்கள்' என்றுசொல்லித் தவறான வழிகாட்டிக் கொள்ளை அடிக்கிறார்கள். அஃதேபோல வடமொழியே மந்திர மொழியென்று, அனைத்தையும் அம் மொழி மயமாக்குகிறவர்களும் 'மக்கள் விரும்புகிறார்கள்' என்று சொல்லியே **'கொள்ளை கொள்ள'**, நினைக்கிறார்கள். வடமொழியை வருமானத்திற்காகப் பிடிவாதமாக பற்றி நிற்பதை வேறு எவ்வாறு சொல்வது?

உலகெங்கும், கல்வியாளர்கள் மக்களுக்கு நல்வழி காட்டுகிறார்கள். சான்றோர்களின்வழிகாட்டுதலை அரசுகள் மதிக்கின்றன. பெரியவர்களிடம்பண்புடைமைகாணப்படுகிறது.

தமிழகத்திலேதான் 'மக்கள் விருப்பம்' என்று பேசப்படுகிறது. மக்கள்கள்ளுக்கடையை விரும்புகிறார்கள்; மதுபானக் கடைகள் என்றால் மோகம் அதிகம். இவை போன்றவற்றை மக்கள் விருப்பமென விட்டுவிடலாமே. ஊழல் செய்வதில் ஒவ்வோர் இந்தியனுக்கும் உள்ள விருப்பம் கொஞ்சமா? 'ஊழல் நாடு' எம்நாடு என அறிவித்து விடலாமே? தடுக்க முயல்வது ஏன்?

திரைப்படத்தில் வரும் காட்சிகள், பாடல்கள் மக்களைப் பாழ்படுத்துகின்றன. மக்கள் மிக மோசமான காட்சியுள்ள படங்களையே விரும்புகிறார்கள். இவை போலத்தான் 'வடமொழியே மந்திரமென்றும்; அதுவே புண்ணியம் தருமென்றும்; அது எந்தப் பாவத்தையும் செய்துவிட்டுப் பரிகாரம் செய்து நல்வாழ்வு பெற உதவுமென்றும்; அதன் மூலமே செல்வம் குவிக்கலாம்; திருமணம் முடிக்கலாம்' என்றும் மக்களை மூளைச் சலவை செய்து வைத்துள்ளனர். அதை ஒரு தொழிலாக்கிக் கொண்டு, 'மக்கள் விருப்பம்' என்று கூறுவது மிகப் பெரிய தவறல்லவா?

மிக எளிய பொது அறிவுடையவன்கூட, தாய்மொழி வழி வழிபாட்டை மறுக்கமாட்டான். ஆனால் கோயில் வழிபாடு ஒரு கேடுகெட்ட தொழிலாகிப் போனது. அருச்சனைத் தட்டை ஏந்திக் காசு குவிப்பது, இன்னமும் தேவைதானா? பிராமணாள் கிளப்பு ஒழிந்ததுபோல், இந்த இடைத் தரகர் வேலையையும் விட்டு விலகுவதே நல்லது. கோயிற்கலைப் பயிற்சியும் வழிபாட்டுக்கு வழிகாட்டவல்ல பயிற்சியும் பெற்ற எவரும் அருச்சகராகி வாழட்டும். ஆகமம், ஆகமம் என்று அச்சுறுத்துவதைக் கைவிடுவதே இனி நல்லது.

ஆகமம் தமிழருடையது. ஆகம உள்பொருள் தமிழகத்திலே மட்டும் காணப்படுவது. ஆகமங்கள் வட நாட்டவரும் வெளிநாட்டவரும் அறியாத 'கிரந்தத்தில்' எழுதப்பட்டுள்ளது. தேவநாகரி எழுத்திலே மட்டும் படித்துப்பழக்கப்பட்ட மேலை நாட்டு வடமொழி ஆய்வாளர் ஒருவர்கூட 'ஆகமம்' பற்றிக் குறிப்பிட வில்லை.

வடநாட்டவர்களுக்கு 'ஆகமம்' தெரியாது; அவர்களுக்கு ஆகமத்துடன் எவ்விதத் தொடர்பும் இல்லை.

ஆகமங்கள் ஒருசில மட்டும் நாகரி எழுத்தில் வந்தபிறகு, சிலர் அதை ஓரளவு படித்துள்ளனர்.

ஆகம நூல்களின் கருத்துக்கள் வேதத்திற்கு முரண் பட்டவை. அவை ஸ்மார்த்த பிராமணர்களுக்கு முற்றிலும் எதிரானவை. ஏகான்மவாதிகள் திருக் கோயில்களையும் உருவவழிபாட்டையும் வெறுத்தவர்கள். தங்களுக்கு நேர் எதிரான ஒன்றைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டே, அவர்கள் நம்மை வெருட்டுகிறார்கள்; விரட்டுகிறார்கள். 'மடியில் வெடிகுண்டை வைத்துக் கொண்டு, எதிரியாக நினைத்து நம் மீது பாய்கிறார்கள்.

ஆகம நூல்களின் முழுவிவரம்; அவற்றுள் கிடைப்பவைபற்றியபுள்ளிவிவரம்; வெளியிடப்பட்டவை; இன்னும் ஏடுகளாகவே இருப்பவை, உப ஆகமங்கள், ஆகிய எந்த ஒரு விவரமும் தெரிய வேண்டுமானால் மு.அருணாசலம் அவர்களின் 'சிவாகமம்' பற்றிய ஆங்கில நூலைப் படியுங்கள்.

ஆகமங்கள் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டவை, ஆங்கில மொழிபெயர்ப்புக்கள், இதுவரை மூல நூலாக மட்டும் வெளிவந்தவை; உரை விளக்கத்துடன் வந்தவை என அனைத்து விவரமும் இதில் உள. அவ்வவற்றிற்கு உரிய ஆசிரியர் பெயர்களுடன், வெளியிடப்பட்டுக் கிடைக்குமிடங்கள் பற்றிய செய்திகள் உட்பட யாவும் அந்நூலில் உள. ஆகம ஆய்வாளராகவோ, படிக்கவோ விரும்புவார்க்கு, இதைவிடச் சிறந்த வழிகாட்டி நூல் கிடைப்பதரிது.

சில உப ஆகமங்கள் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டமை பற்றிய விவரமும் இதில் இருக்கிறது. இது எப்படி என்றால், தஞ்சைப் பெருவுடையாரை அவர்கள் பிருகதீஸ்வரர் ஆக்க, அதன்பின் அவரைப் பெருவுடையாரே எனத் தமிழாக்க முயல்வது போன்றதாகும். மயிலாடுதுறை மாயூரமாகி மீண்டும் மயிலாடுதுறையான வரலாறு போன்றது இது. தமிழில் இருந்ததைத் தமிழர்க்குரியதை, தமிழ் நாட்டில் மட்டும் காணப்படுவதை வடமொழியில் எழுதி வைத்துக் கொண்டு தமிழர்களை மருட்டுவதும் விரட்டுவதும் இனியேனும் தவிர்க்கப்படவேண்டும்.

**The Agamas had existed mostly in South India, in the Tamilnad ...**

**These agamas are not available in North India to the extent they are available in the South ...**

**Besides, all the agama manuscripts are available only in the grantha script, one which had been invented by the Tamil people for writing their Sanskrit scriptures, more than fifteen hundred years ago.**

**The grantha script was not in use in the North, and the devanagari script of the North was unknown in the south, till the beginning of the twentieth century.**

**The Smarthas who adopted the philosophy of Sankara somehow deemed the agamas to be alien to themselves just because Sankara did not deal with them.**

**Generally the smartha brahmin is not qualified for Siva diksha. Occasionally in the modern day the smartha brahmin comes forward to**

**cook the food offering for the Sivalinga enshrined in the Siva temple ...**

வேதப் பிராமணர்களுக்கும் நமது திருக் கோயில்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. சிவ தீக்கை பெற்று, சிவ பூசை செய்யும் சிவாச்சாரியார்கள் மட்டுமே திருக் கோயிலுடன் உறவுடையவர்கள். அவர்கள் பச்சைத் தமிழர்களே என்பதை திரு.வி.க., மறைமலையடிகள், அ.ச.ஞானசம்பந்தன், மு.அருணாசலம், ந.சி.கந்தையா பிள்ளை போலும் பேரறிஞர் பலர் நிறுவியுள்ளனர். ஆனால் வேத வைதிகர்களாம் பிராமணர்கள், தாங்கள் ஒரு காலத்தில் வெறுத்த, தங்களுக்குத் தொடர்பில்லாத, தமது சமயக் கோட்பாட்டிற்கு நேர் எதிரான நமது திருக் கோயில்களுக்குள் மிக நீண்டகாலமாகவே நுழையத் தொடங்கிவிட்டனர். எல்லாம் பிழைப்பு வாய்ப்பிற்காகவே. தாங்கள் நுழைந்துகொண்டது மட்டுமல்லாமல், நமது தாய்த்தமிழை நுழைய விடாமல் தடுக்கின்றனர். இச் சூழ்ச்சி வலையில் நமது சிவாச்சாரியார்கள் அகப்பட்டுக் கொண்டு, தடுமாறுகின்றனர்.

இந்த நிலை மாறவேண்டுமேல், வேத வேதியர்கள் வைதிகர்கள் கோயில்களை விட்டு வெளியேறி விட வேண்டும். மடைப்பள்ளிகளுக்குள்கூட, எந்த வைதிகப் பார்ப்பனரும் நுழையக் கூடாது. சிவாச்சாரியார்கள் தாங்கள் சிவ வேதியர்கள் - தமிழர்கள் - தமிழ் அந்தணர்கள் - என்ற உண்மையை நன்குணர்ந்து, முற்றிலும் தமிழ் வழிபாட்டு முறைகளுக்கும் தமிழ்வழிச் சடங்கு நெறிகளுக்கும் மாறிவிட வேண்டும்.

என்றும் 'வாய்மையே வெல்லும்' என்பது உண்மை தானே? தமிழ் வெல்லும்; வெல்லும் என்பதே உறுதி.

## ஆகம உள்பொருள் யாது?

ஆகமங்கள் 'எண்ணிறந்தன' என்பர். சிவ ஆகமங்கள் 28 என்பர். வைணவம் 108, சாக்தம் (சக்தி கொற்றவை) 77 எனவும் கூறுவர். உப ஆகமங்கள் என்பன வேறு. இவை படிப்படியாய் எழுதப்பட்டன. எனினும் சிவனும் திருமாலும் அருளியவை என்பர். அதற்குக் காரணம், தமிழகத்திற்கு உரியவற்றைப் படிப்படியாக வடமொழியில் பாடிவைத்து, வடமொழி மயமாக்க முயன்றமையைத் தெய்விகப் படுத்தவேயாம். அனைத்தும் கிடைத்தில. கிடைத்தவை சிலவற்றையும் அனைவரும் அறிந்தவர் அல்லர். காலந்தோறும் ஆகமங்கள் எனப் பலர் எழுதியுள்ளனர். இவை தமிழிலிருந்து எடுக்கப்பட்டவை. இடைச்செருகல்களும் பின்னால் இணைக்கப்பட்டவையும் பல. எனவே இன்றைய நிலையில் 'ஆகமங்கள்' என்பனவற்றை யாரும் முழுமையாய் அறிந்துளர் எனக் கூறுமாறில்லை. அச் சொல்லை மட்டுமே, தமிழுக்கு எதிராகப் பயன்படுத்த முனைகின்றனர். மேலும் எல்லாச் சமயத்தவருமே தத்தம் சமயத்திற்கு வேத ஆகமங்கள் உள எனக் கூறி வந்துள்ளனர். அதாவது பொதுவாக 'ஆகமம்' என்பது கோயில்கள், வழிபாடுகள் பற்றிய நூல்கள் - கையேடுகள் - வழிகாட்டிகள் என்றாகிவிட்டது.

ஆகம உள்பொருளை அறிய பி.டி. சீனிவாச அய்யங்காரின் ஆங்கிலநூல் மிகவும் பயன்படத்தக்கது. 'தொல்பழங்காலம் முதல் கி.பி. 600 வரை, தமிழர்களின்

வரலாறு' (History of the Tamils, from the earliest Times to 600 A.D.) எனும் அந்நூல், மிகுந்த ஆராய்ச்சி முயற்சியின் விளைவாக எழுதப்பெற்றது. அவரனைய சமற்கிருத அறிஞர் யாரும் இன்று இருப்பதாகத் தெரியவில்லை. பிறர் எவரையும் விட அவர் கூறுவனவே ஏற்கத் தக்கன. கெய்த், மாக்டோனெல் போல்வார் பலருக்குத் தமிழிலக்கிய அறிவு இல்லாததால் அவர்கள் பல தவறான முடிவுகட்கு வந்தனர் என இப்பெரியவரே குறிப்பிடுகிறார். இவர் ஒரு செந்தமிழ் அந்தணர்.

பூணூல்போட்டவனெல்லாம் அந்தணனாக இயலாது. அந்தணன் என்பவன் பண்பாளன், சான்றோன், செந்தண்மை யுடையவன், அறவோன், நடுவுநிலைமை தவறாதவன். பூணூலை அறுத்தெறிந்த தமிழ் மாகவிஞன் பாரதியை அந்தணர் என்றால் அச்சொல் பெருமை பெறும். சீனிவாசர் தொடங்கும் போதே, தம் நடுவுநிலைமையை விளக்கி விடுகிறார். அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக விளங்கியவர். 1928-29 இல் அவர் செய்த ஆராய்ச்சியின் விளைவே இந்நூல்.

**The Vedic literature, by which I mean, the mantras and the Brahmanas (which together are the Vedas), and the Sutras which contain the early concepts of the Aryas with regard to the objects and the conduct of individual and social life, as well as the Ithihasas (the Ramayana and the Mahabharata) and the Puranas, besides the earli Pali, Bauddha and the Arddha Magadhi Jaina works i.e. all the available Aryan sources have been ransacked for information (Liii).**

ஆரியச் சார்புள்ள அனைத்து நூல்களையும் தாம் கற்றுத் துறை போகியதை, இவ்வாறு குறிப்பிடுகிறார். ஆரியத்துடன் பிற்பாடு தொடர்புபட்ட புத்தமதப் பாலி, சமணமத அர்த்தமாகதி மொழிகளிலுள்ள நூல்களையும் கற்று, இந்நூல் எழுதப்பட்டுள்ளதாம். மேலும் தமிழில் தொல்காப்பியம், மற்றும் சங்க இலக்கிய நூல்களைத் தாம் கற்றிருந்ததால், நடுவுநிலைமையோடு தம்மால் வரலாற்றை எழுதமுடிந்தது என்பார் இவர். இத் தொடக்கம் ஒரு வாக்குமூலம் போலவுளது. ஒரு நீதிமன்றத் தலைமை நீதிபதிகூட, இவர் கருத்துக்களை மூலமொழி அகச்சான்றுகளைப் பார்த்து ஏற்க வேண்டியிருக்குமே தவிர, மறுப்பது எளிதன்று.

இவர் தம் நூலின் எட்டாம் இயலில், ஆகமங்களின் தோற்றம் (The Rise of the Agamas) பற்றி, அலசி ஆராய்கிறார். தொடக்கமே ஆகமங்கள் வைதிகப் பிராமணர்களின் வேதங்களுக்கு முரண்பட்டவை என்பதாகவுளது. (The Agamas vs. The Vedas p.103)

''இன்றைய 'இந்து' மதமென்பது ஆகம வழிப்பட்டது. வேதங்களுக்கும் அதற்கும் சிறு தொடர்புமில்லை. வைதிக நெறி வரவரச் சுருங்கியது. சாதாரணச் சிறுசிறு யாகங்கள் தவிர மற்றவை எல்லாம் மறைந்தன. மூன்று தலைமுறைகள், அக்கினி வளர்த்து யாகம் செய்வதைக் கைவிட்ட பிராமணக் குடும்பங்கள் பிராமணத் தகுதியை இழந்துவிடுகின்றன. சமயத் தன்மையில் ஊறிப்போன இந்தியா ஆகம வழிப்பட்டுவிட்டது. முன்பு ஆகம நெறிக்கும் வேத நெறிக்கும் மிகுந்த முரண்பாடு இருந்தது. காலப் போக்கில் இவை ஒன்று கலக்க முற்பட்டன. வேத

வழியினர் வேலைவாய்ப்பு இழக்க நேர்ந்ததால், ஆகம வழிப்பட்டனர்.''

ஆயினும் ஆகமங்கள் (சைவம், சாக்தம், வைணவம்) சிவனாலும் விஷ்ணுவாலும் சொல்லப்பட்டன என்பர். வேதம் முனிவர்கள் அருளியது என்பர்.

ஆகமம் என்ற சொல் 'உருவானது' (evolved) எனப் பொருள்பட்டது. ஆகமம் என்பதற்கு நேரடிப் பொருள், 'பழமையிலிருந்து வந்தது' என்பதாகும்.

இவை சிவன், விஷ்ணு, சக்தி வழிபாடு பற்றிய நூல்கள் - தந்திரங்கள் - என்பதே உண்மையாகும். இவ் வகையில் இவை வேதத்தை எதிர்த்து அதற்கு மாறுபட உருவானவை. புத்த, சமண சமயங்களும் தமது வழிபாட்டு வழிகாட்டி நூல்களை ஆகமங்கள் என்றே கூறின. அவையும் பழமையிலிருந்து வந்தவை எனும் பொருளுடையனவே.

வேத சம்ஹிதைகள் எல்லாம், வைதிகச் சடங்குகளில் ஓதப்படும் மந்திரங்களே.

ஆகமங்கள் சிவன் விஷ்ணு ஆகிய கடவுளை வழிபடும் சடங்குகள் பற்றியன; யோகப் பயிற்சி முறை கூறுவன; மெய்யியல் பற்றி ஆய்வன.

வேதங்கள் சந்தஸ் (Candas) எனப்படும் தொடக்க கால வழக்குமொழியில் உள்ளன. ஆகமங்கள் கி.பி. ஆயிரத்திற்குப் பிற்பட்ட பாஷா (Bhasa) எனப்படும் மொழியில் உள்ளன. (இவை கிரந்தம் என்பர் மு.அருணாசலம்).

வைதிகச் சடங்குகள் அக்கினிவழிச் சடங்குகள் ஆகும். ஒவ்வொருசடங்கிற்கும் நெருப்பு பற்றவைக்கப்படும். அது கூவி எரியும்போது 'ஆகுதி'கள் அதில் போடப்படும்.

ஆகமங்களில் அக்கினிச் சடங்குகள் இல்லை. கடவுளுக்கு முன்பாகக் 'காணிக்கைப்' பொருள்களைப் படைத்து, பின்பு எடுத்துக் கொள்ளப்படும். முன்னதில் நெருப்பில் போடப்பட்டவை, தேவர்களால் எடுத்துக் கொள்ளப்படும். பின்னதில், வழிபடுபவர் எதையும் இழப்பதில்லை. கடவுளர் அதிலுள்ளவற்றை நுட்பமாய்க் கண்ணுக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்வதாகக் கருதி, பிறகு அவற்றை எடுத்துத் தாமும் உண்டு, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்து மகிழ்வர்.

> **The Vaidika rites are fire rites. For each rite a fire has to be lighted and intensified into a flame and on the flame the oblations have to be poured. The Agama rites are fire-less; the oblations have to be merely exhibited to the object of worship and then taken away. In the former the oblation is consumed by the gods, because it is thrown on fire; in the latter, the worshipper loses nothing of his offering because the god can take up only the subtle and unseen parts, so the worshipper consumes it himself and distributes it to his relations and friends. (105)**

இதனை நன்கு சிந்தித்தால் ஆகமங்கள் தென்னாட்டின; தமிழருடையன என்பது நன்கு விளங்கும். வடமொழியில் எழுதி வைத்ததால், இவை தமிழுக்கோ, தமிழர்க்கோ புறம்பாகிவிடுமா?

வைதிகநெறியில் பல தேவர்கள்; அவர்கட்குப் பல தொழில்கள். ஆகம நெறியில் ஒரே ஒரு பரம்பொருள் (சிவன் அல்லது திருமால்). அவரே அனைத்துத் தொழில்களையும் செய்வார். வைதிக நெறியில், ஒவ்வொரு சடங்குச் செயலுக்கும் ஒரு மந்திரம் சொல்லப்படும். ஆகம நெறியில், மந்திரங்களுக்குக் குறிப்பிடத்தக்க இடமில்லை. ஒரு சில மந்திரங்கள் சொல்லப்படினும் அவையும் தவறாகப் பயன்படுத்தப் படுகின்றன. ஆகம நெறியில் ஒரே பரம்பொருளுக்கு ஆயிரம் திருநாமம் சொல்லி, 'போற்றி' கூறுவதே வழிபாடாகும்.

> **But in the Agamica rites Vedic Mantras have no legitimate place. A few are used, here and there, but most inappropriately ... But the main part of the Agamika rite consists in the repetition of the numerous names of the gods, worshipped with the phrase namah (Ibow)** ***added (106)***

வேள்வி, ஹோமம் 'சுவாஹா' என முடியும். ஆகம வழிபாடு 'நமஹ' என முடியும்.

மற்றொருமுக்கியமானதமிழ்ப்பண்பாடு, ஆகமத்தில் காணப்படுகிறது. வைதிகச் சடங்குகளில் அக்கினியில் போடுவதே வழக்காறு. ஆகம வழிபாடு, கடவுளுக்கு 'உபசாரம்' செய்வது. அதாவது தூய்மைப் படுத்துவது, அலங்கரிப்பது, உணவு படைப்பது. உண்மையில் ஒரு மனிதகுல விருந்தினனுக்கோ, அரசனுக்கோ செய்யும் 'உபசாரம்' போன்றது இது.

வைதிகச் சடங்கில், வழிபடும் தேவர்களுக்குரிய அடையாளம் எதுவும் எதிரே இல்லை; கண்ணெதிரே உள்ள நெருப்பே அத்தேவர்களின் அடையாளமாகும்.

ஆகம நெறியில் வழிபடப்படும் கடவுள், கண்காணும் படியான, ஒரு படிமமாய் எதிரே அமைக்கப்பெறுகிறார். அப்படிமம் ஒரு கந்து (தறி), ஓர் ஆயுதம், அதாவது வாள் அல்லது சூலம், ஒரு மரம், ஒருகல், ஓடும் நீரோடை, ஒரு இலிங்கம், ஒரு சாலகிராமம், அல்லது எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு படம் அல்லது செங்கல்லாலோ, சுண்ணாம்பாலோ, கல்லாலோ, உலோகத்தாலோ வழிபடுவோர் எண்ணப்படியமைந்த ஒரு தெய்வச் சிலை எதிரே இருக்கும். *(106)*

தமிழரின் கோயிற்கலையியல் வரலாறு பற்றி முன்னரும் குறிக்கப்பட்டது. இவை அனைத்தும் எதைக் காட்டுகின்றன? ஏதோ பார்ப்பனர்கள்தான் இவற்றை அமைத்து, வழிகாட்டி, ஆகமம் எழுதி, மரபு வழியாகத் தமிழர்களுக்கு அருச்சனை செய்ய வடமொழி மந்திரங்களை ஓதி வந்தனர் என்பது போன்ற மாயத் தோற்றத்தை உண்டாக்குபவர்கள் இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டாமா? தமிழனுக்குரியதில் இவர்கள் நுழைந்து கொண்டார்களே தவிர, இவர்கள் ஆக்கியதோ, அளித்ததோ அல்ல இவை.

ஆகமம் பக்தி மார்க்கம். அது யோகம், ஞானம் இவற்றைப் போதிக்கும் பகுதிகள் கொண்டது. ஆகமங்களின் சாரத்தைத் தரும் அறிஞர் சீனிவாசர் ஆகமநெறியின் முப்பொருண்மையையும் வேதநெறியில் பரப்பிரம்மம் என ஒன்றை மட்டுமே கூறுவதையும் சுட்டிக்காட்டி, இத் தமிழர் நெறி வேதத்திற்கு முற்றிலும் வேறுபட்டது என்பதை விளக்குகிறார். மேலும் வேதநெறி சிலருக்கேயாம்; பக்திநெறியோ பலருக்கும் பொது. பக்திநெறி எளியது; முன்னது கடுமையானது *(107)*.

வைதிகநெறி வருணாசிரம வழிப்பட்டது; கடைசி வருணத்தார் வேதத்தைப் படிக்கக்கூடாது. பிராமணர்களே சன்னியாசிகளாக முடியும். அவ்வாறு சன்னியாசி ஆன பிராமணர் மட்டுமே மோட்சமடைய முடியும்.

ஆகமங்கள் இவற்றுக்கு நேர் எதிரானவை. இக் கொள்கைகளை நேரே மறுப்பவை. ஒரு சண்டாளன்கூட சிவன் அல்லது திருமால் படிமத்திற்குப் பூசை செய்ய முடியும்.தாழ்த்தப்பட்ட சாதியினர்எனப்பட்ட சிவனடியார்கள் சிவனை வழிபட்டதைத் தமிழ்ப் புராணங்கள்கூறுகின்றன. கண்ணப்பநாயனார்இறைவனுக்கு இறைச்சியைப் படைத்து வணங்குகிறார். வைணவத்தில், திருவரங்கத்தினுள் கால் பதிக்கக் கூடாத பாணர் குலத்தவர் ஒருவர் ஏறத்தாழ கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வணங்கத்தக்க ஆழ்வாராக விளங்கியுள்ளார். ஆகமங்கள்நான்குசாதிகளை ஏற்கவில்லை.

வேதாந்தம் சூத்திரர்களுக்கு ஒரு மூடி முத்திரை வைக்கப்பட்ட புத்தகமாகும். சூத்திரர்களை எவ்வகையிலும் புனிதப் படுத்தமுடியாதாகையால், அவர்கள் வேதத்தைப் படிக்கவோ கேட்கவோ கூடாது. (அவர்கள் செவியில் தவறிக்கூட வேத ஒலி விழக் கூடாதாம்) இதற்கு நேர் எதிராக ஆகமம் மனிதர் அனைவருக்கும் உரியதாகிறது. அதாவது எவ்வாறென்றால், ஒரு பறையர் என்பவர் கூட சிவதீக்கை பெறலாம்; பெற்று ஒரு பிராமணனுக்குத் தீக்கை அளித்து, அவனுக்குக் குருவாகலாம் *(108)*.

**The Agamas on the Contrary were open to all men; so much so that even today, a Pariah who has received Sivadiksa can give this diksa to a Brahmana and thus become the Guru of the latter (108).**

திருமுக்கூடலூரில், மணிமுத்தீசுவரர் கோவிலில், தமிழில் கடவுள் மங்கலம் தெய்தனதத் 'தீட்டு' என்று சொன்ன, குருக்கள்மாரை, அறைகூவி அழைக்கின்றோம். பின்னர் தருமபுரத்தில் கூடிய சிவாச்சாரியார்களைப் பரிவுடன் அழைக்கின்றோம். பீடம், மடம் அமைத்து, 'ஆகமம்' தமிழுக்குப் பகை, தமிழில் அருச்சித்தால் - கடவுள் மங்கலம் செய்தால் தீட்டாகும் என்று தீர்மானம் போடும் அதிபதிகள் அனைவரையும் பணிவுடன் கூவி அழைக்கின்றோம்.

அறிஞர் சீனிவாசர் ஆகமம் பற்றிக் கூறியுள்ளபடி, நீங்கள் ஒரு தாழ்த்தப்பட்டவரிடம் சிவதீக்கை பெற ஆயத்தமா? விரைவில், குன்றக்குடியில் **'தெய்வத் தமிழ் வழிபாட்டுப் பயிற்சி மையம்'** அமைய இருக்கிறது. அதில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிறரைத் தாழ்த்தி விட்டு உயரப்போனவர் அனைவருக்கும் வழிபாட்டுப் பயிற்சி தந்து, சிவதீக்கை அளிக்க உள்ளனர். அவ்வாறு சிவதீக்கை பெற்ற எமது மதிப்பிற்குரிய 'பறையர், பள்ளர், மள்ளர், சூத்திரர்' அனைவரையும் அனுப்புகிறோம். உங்களில் இன்னமும் சிவதீக்கை பெறாமல் உள்ளவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள இப்பொழுதே ஆயத்தமாகுங்கள். ஏனென்றால் இதுதான் ஆகமநெறி; வேதநெறிக்கு எதிரான ஆகமநெறி. பிறகு நீங்கள் சொல்லும் 'தீட்டு' எங்கே போகிறது பார்க்கலாம்?

ஆகமநெறிப்படி யார் வேண்டுமானாலும் துறவியாகலாம்; துறக்கமடையலாம்; வீடுபேறு பெறலாம். ஒரு இல்லறத்தான்கூட வீடுபேறடையலாம். வைதிக நெறி மறுப்பதை, ஆகம நெறி திறந்து விடுகிறது. வைதிக நெறிக்கு வடமொழி மட்டுமே உரியது. அடபாவமே!

வேதத்தைப் படிக்கக்கூடாது என்று சொல்லுங்கள், விட்டுவிடுகிறோம். கேட்டால், கேட்டவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவேன் என்கிறீர்களே. நீங்கள் உருப்படுவீர்களா?

ஆகமநெறி எல்லா மொழிக்கும் உரியது. தாய் மொழிக்கு உறவும் உரிமையும் உடையது. யாரும் தாய் மொழியால் வழிபடலாம்; கேட்கலாம்.

ஆகமம் ஆகமம் என்று அச்சுறுத்துபவர்களே! ஆகமங்களை முற்ற முடியப் படியுங்கள். அது உங்களை நல்வழிப்படுத்தும்!

தொடக்க காலத்தில் வைதிகர்களுக்கும் ஆகாமியர்களுக்கும் மிகுந்த பகைமை இருந்தது.

கடவுளின் பெயரால் உயிர்க்கொலை செய்து, இரத்தம் சிந்துவதை ஆகாமியர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். முக்கியமாக இறைச்சி தின்பதை, குறிப்பாக மாட்டிறைச்சி தின்பதை எதிர்த்தனர். *(109)*

**The Vaidikas, on the other hand, regarded the Agamikas, with supreme contempt.**

**There is a trace of this contempt even today, though the Vaidika and the Agamika paths have been blended together as one since the days of Yamunacharya, for the temple priests, both of the Saiva and Vaisnava variety, are regarded as inferior Brahmins by strict Vedantis; in fact, even fifty years ago there existed to my knowledge, followers of the Advaita Vedanta, who would not enter any temples. The Vedanta, which was the culmination of the Veda, also severely condemned the Agamika path; Badarayana denounced both the Pasupata and the Pancaratra in his Sutras (110, 111).**

இன்று சிவாச்சாரியார்கள் தம்மைத் தாழ்வாக மதித்த வேதாந்திகளுடன் சேர்ந்து கொண்டது வியப்பே. மேலும் கோயிலுக்குள் நுழையக் கூடாது எனும் வேத விதியைத்தலைமுழுகிவிட்டு, ஏகான்மவாதிகள் எனப்படும் வைதிகத்தார் இன்று திருக்கோயில்களுக்குள், கொடிமரம் தாண்டிநுழைவதும், திருக்கோயில்களைக்காக்கப் போவதாகக் கூறுவதும், இன்னும்என்னென்னமோசெய்வதும் தவறல்லவா? தவறு செய்பவன் 'தமிழை' மறுப்பது, தவற்றுக்குமேல் தவறல்லவா? ஆண்டவன் இப் பாவச் செயலுக்குத் தண்டனை தரமாட்டான் என்று கூற முடியுமா? சற்றே நிதானமாக எண்ணிப் பார்ப்பதுதான் பார்ப்பானுக்குரிய அறவழி; மற்றன எல்லாம் மறவழி - பாவச்செயல் ஆகும்.

## ஆகமங்கள் யாருடையன?

அறிஞர் சீனிவாசர் எவ்வளவோ எழுதுகிறார். அத்தனை உண்மைகளையும் இச் சிறுநூலில் எடுத்துக் காட்ட இடமில்லை. ஆகமங்கள் தஸ்யூக்கள் என ஆரியர்களால் அழைக்கப்பட்ட தமிழருடையன என அவர் சுட்டிக்காட்டியுள்ள சில பகுதிகளை மட்டும் இங்குக் காண்போம்.

ஆகம நடைமுறைகள் எங்கு தோன்றின என்பது சிறிதுகடினமானகேள்வியே. எனினும்இதற்குப் பொருந்திய விடைகாண முயல்கிறார் வரலாற்றறிஞர் சீனிவாசர்.

ஆகம நெறிமுறைகள் முழுவதும் அக்கினி வழிபாடற்றனவாக இருப்பதாலும் வேத மந்திரங்களை உடன் ஓதப்படாதனவாக இருப்பதாலும், உறுதியாக

'தஸ்யூக்களின்' சடங்குமுறைகளிலிருந்தே தோன்றி வளர்ந்திருக்க வேண்டும்.

ஆரியச்சடங்குகள் தோன்றுமுன்பே, இந்தியாவின் தெற்கு, வடக்குப் பகுதிகள் முழுவதிலும் நிச்சயமாக தஸ்யூக்களின் சடங்குமுறைகளே நிலவியிருக்க வேண்டும்.

யாகங்கள், வேள்விகள் பொதுமக்கள் நடத்தவோ, பங்குகொள்ளவோ இயலாதவை.

பொதுமக்கள் தங்களுடைய சொந்தச் சமய நடைமுறைகளைப் பெற்றிருந்திருக்க வேண்டும் என்பது உறுதி. வேத காலம் முழுவதும் இருந்த அக்கினி வழிபாட்டிற்கு அப்பாற்பட்டவை இவை. இவை தொல் பழங்கால தஸ்யூக்களின் சடங்குகளாகவே உறுதியாக இருந்திருக்க வேண்டும். அவை எந்த வகைச் சடங்குகள் என்பது பற்றியோ, பொதுமக்கள் வழிபட்ட கடவுளர்கள் யார் என்பது பற்றியோ கண்டுகொள்ள ஏதேனும் வழியுண்டா?

வடஇந்தியாவைப் போலத் தமிழ் இந்தியாவும் ஆரியர்களின் அக்கினிவழிபாடு தோன்றுவதன் முன்பே தஸ்யூக்களின் அக்கினியற்ற வழிபாடுகளைப் பின்பற்றின. பழங்காலத் தமிழர்களின் சமயம்பற்றிய, ஒருவரைபட மனைய விளக்கம் முன்பே தரப்பெற்றது (பக். 74-83).

வேதகாலத்திற்குமுன்பு பின்பற்றி வந்ததுபோலவே, வேத காலத்திலும் வடநாட்டுப் பொதுமக்கள், அக்கினி இன்றியே, தாங்கள் வழிபட்டு வந்த அதே கடவுளரைத் தொடர்ந்து வழிபட்டு வந்திருக்க வேண்டும்.

மகாபாரதப் போருக்குப் பிறகு, அக்கினி வழிபாடு குறைந்து மறையத் தொடங்கவே, பிராமணப் புரோகிதர்கள், தங்கள் தொழில் போய்விட்டதென்று உணர்ந்தனர். அவ்வாறு உணர்ந்து, நாட்டில் அதுகாலம் வரை நிலை பெற்றிருந்த, அக்கினியற்ற சடங்குகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தி, திரும்பலாயினர். உணர்வு வயப்படும் இயல்புடைய பெரும்பான்மையான மக்கள் பக்தி வழிபாட்டில் காட்டிய பேரார்வக் கவர்ச்சியை இப் பிராமணர்கள் பயன்படுத்திக் கொள்ள முயன்றனர்.

அறிவுடைச்சான்றோர்கள் தொகை மிகக் குறைவே. மக்கள் வழியில் திரும்பினால் பெரும்பான்மையானவரைக் கவரலாம். இதை உணர்ந்தனர் பிராமணர்கள். அவர்கள் பக்தி வழிபாட்டு வழிக்குத் திரும்பியதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இதற்காகப் பல புராணங்களை எழுதினர். அவர்கள் தங்கள் கருத்தைத் திணிக்கும் வகையில் மக்களின் நம்பிக்கைக்குட்பட்ட கடவுளர்கள் பற்றியே பல கதைகள் கட்டிப் புராணங்களாக எழுதி மக்களிடையே பரப்பினர். விஷ்ணுவின் பல அவதாரங்களைப் புனைந்தனர். சிவனின் பலவகைத் தோற்றங்களைப் படைத்தனர். பின்னர் படிப்படியாக, அவ் அடிப்படைகளின் மூலம் 108 வைணவ ஆகமங்களையும் 28 சைவ ஆகமங்களையும் எழுதினர். பிற்பாடு, சக்தியைப் பற்றி 77 ஆகமங்கள் உள்ளதாகப் பெருமை பேசி, பிறிதொரு சாக்த ஆகமங்களை ஆக்கினர். இதனால் மிக மெதுவாக வேதாந்திகள் ஆகமவாதிகளுடன் கலக்கலாயினர். சங்கராச்சாரியார் காலத்தில்கூட இவை ஒன்றாகவில்லை. (கி.பி. எட்டாம் நூற்றாண்டு) வேதாந்தத்தையும்

ஆகாமியத்தையும் சங்கரர் மிகக் கட்டுப்பாடாகப் பிரித்தே வைத்திருந்தார். யமுனாச்சாரியார் வைணவ வேதாந்தத்தை, வேதத்திற்கு நிகரெரன வளர்த்தார். இராமானுச்சாரியார்தான் இவற்றை முதன்முதலில் ஒன்றுபடுத்தினார்.

ஆகமங்கள் ஆரியர்கள் வருமுன்பே உருவானவை *(113, 114)*. இவை தஸ்யூக்களுடையவை - தமிழருடையவை என்பதையே இப் பேராசிரியர் காரண காரியத்தோடு நிலைபெற, உறுதிபட உணரவைக்கிறார்.

சிவனையும் திருமாலையும் வழிபடுவதை வைத்தே, ஆகமங்கள் தமிழருடையவை என உறுதிபடக் கூறலாம்.

ஆகமங்கள் இன்றுள்ளவை வடமொழியிலேயே இருந்தாலும், மக்களின் வாழ்வையும் பண்பாட்டையும் வைத்து, அவர்களின் கோயில்கள், கோயிற் சடங்குகள், வழிபாடுகள் பற்றி ஆழமாகச் சிந்தித்தால் ஒரு வினா எழுகிறது. உண்மையிலேயே இப்பண்பாடு, வழிபாடு பற்றிய தமிழ் மூலங்கள் இல்லாதிருந்திருந்தால், தமிழ் மூலங்களிலிருந்து சமற்கிருதச் சடங்குகள் எடுக்கப் பெற்றிருக்க மாட்டாவா என்று வினவத் தோன்றுகிறது என்பார் மு.அருணாசலம் *(பக்.20)*

**Temple worship finds no place in the Vedas or the Upanishads; they do not mention temples. The Vedas have their emphasis on agnikarya and sacrifices but have no place for the temple or temple worship (15).**

மு.அருணாசலனாரின்இக்கூற்றுப்படி, வேதத்தோடு தொடர்பில்லாத நமது கோயிற்கலையியலை, வேதம்,

உபநிடதம், ஆகமம் என்று பலப்பல சொல்லி அச்சுறுத்துவது ஆணவமா? அறியாமையா?

எல்லாச் சமயங்களும் தொன்றுதொட்டுத் தத்தமது சமயம் பற்றியவை ஆகமங்களே என்று மொழிகின்றன. இதைப் பார்த்தால், சித்தாந்த ஆகமமே, காலத்தால் மிகப் பழைமையானது என்று மெய்ப்பிக்கத்தூண்டுகிறது. பிற்பாடு வந்த, இன்றைய வடமொழி ஆகமங்கள், அதைப் பின்பற்றி, பெயர்சூட்டிக்கொண்டவையே ஆதல் வேண்டும் என்பதும் மு.அருணாசலனார் கருத்தாகும் (13). இது மிகப் பொருத்தமாகத் தோன்றுகிறது. தமிழரின் சித்தாந்த ஆகமங்களைவடமொழி மயமாக ஆக்கிக்கொண்டு, இன்று அச்சுறுத்துவோர் இதை ஊன்றி நோக்குதல் வேண்டும்.

வேத வழிபாட்டுடன் முற்றிலும் மாறுபட்டது கோயில் வழிபாட்டுத் தோற்றம். கோயில் கட்டும் முறைகள், சிலைகள் வைக்கும் முறை, சிலைகள் அமைப்பு முறை என்பவை பற்றி ஆகமங்கள் நிரம்பப் பேசின. சைவம், வைணவம் என்ற இரண்டிற்கும் சைவாகமங்கள், வைகாநஸம், பாஞ்சராத்ரம் என்ற ஆகமங்கள் தோன்றிக் கோயில் பூசை முறையை ஒழுங்குபடுத்தின. இவை யாவும் தமிழர் பண்பாட்டு வழிப்பட்டன என்பது அ.ச.ஞா. அவர்களது கருத்தாகும் (பக்.39).

தமிழரின் சிற்பக் கலை பற்றி ஆகமங்கள் பலபட விளக்குகின்றன. இவை வடமொழியில் எழுதி வைக்கப் பட்டதால் மட்டுமே, இவை தமிழருடையன அல்ல என்று கூற முடியுமா? சங்க காலப் பார்ப்பான் கூடச் சங்கறுத்து வளையல் முதலியன செய்தானே தவிர, சிற்பக்கலை வல்லுநனாக விளங்கினான் என எங்கேனும் உளதா?

அன்றையப் பார்ப்பனன், தமிழகக் காதல் தலைவனுக்கு உற்ற தோழனாக விளங்கினான்; காதலரிடையே ஊடல் தீர்க்கும் தூதுவனாகச் செயற்பட்டான் என்று தொல்காப்பியமும், சங்க நூல்களும் கூறுகின்றன. 'பார்ப்பான் பாணன்' எனவரும் தொல்காப்பியத் தொடர், இவனை மற்றவர்களுடன் சமமாக வைத்தே எண்ணுகிறது. தென்னாட்டுச் சிற்பங்கள் போலவோ, கோபுரங்கள் போலவோ வடநாட்டில் காண முடியுமா? தமிழர்க்கே உரிய சிற்பக்கலை, வடமொழியில் நூலளவில் 'திருடப் பட்டுள்ளது' என்று சொல்லவேண்டும்போல் தோன்றுகிறது. ஏனென்றால், இவை எல்லாம் இந்தப் பார்ப்பனர்கள் தமிழருக்குக் கற்பித்தவை போலவும் தமிழருக்கு இவை பற்றி எதுவும் தெரியாதது போலவும் ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்குவதை, ஒரு 'மோசடி' என்பதா? முறைகேடு என்பதா? இதை ஏற்றுத் தங்களை 'ஸ்தபதி' என்றுபோட்டுக்கொண்டு, மயங்கிக் கிடப்பவர்களை என்ன வென்று சொல்வது?

யாழ்ப்பாணத்து ந.சி.கந்தையா பிள்ளை 'சிற்பம், ஓவியம், வானநூல்' போல்வன பற்றிக் கூறுவன கருதத் தக்கன. இவை யாவும் தமிழருடையன. இவை வடமொழி மயமாக்கப்பட்டது, நூல்கள் அளவிலேதான்; மற்றபடி இன்றும் இவை தமிழருடைமைகளாக, இங்குமட்டுமே காணப்படுவன என்பதை மறத்தலாகாது:

''அரசரது கோயில்களையும், மானின் கண்போன்ற சாளரங்களையும், நிலா முற்றங்களையுடைய அடுக்கு மாளிகைகளையும், பிரம்மாண்டமான தேவாலயங்களையும் நிருமித்தவர்கள் தமிழ்நாட்டுச் சிற்பிகளே. மதுரைக் கோயில், மேல்நாட்டவருக்கும் திகைப்பை விளைக்கின்றது.

தமிழ்நாட்டுச் சிற்பிகள் தேவாலயங்களிலேயே தமது முழுத் திறமையையுங் காட்டியுள்ளனர். அமராவதிச் சித்திரங்களும் மகாபலிபுரமலைக்கோயிலும் தமிழ்நாட்டுச் சிற்பிகளின் திறமைக்கு உதாரணமாகும். தமிழரது சிற்பக் கலை தமிழ்நாட்டிலே தோன்றி வளர்ச்சி அடைந்தது. தமிழர் தமது சிற்பக் கலைக்கு ஆரியருக்காவது வேறு எவருக்காவது கடமைப்பட்டவர்கள் அல்லர். தமிழர் மதில்களாற் சூழப்பட்ட அழகிய நகரங்களில் வாழ்ந்தார்கள் என்று இருக்கு வேதத்திற் பல இடங்களிற் சொல்லப் படுகிறது. பாண்டவருக்கு இந்திரப் பிரஸ்தத்தில் பளிங்குமா மண்டபத்தைக் கட்டி முடித்தவன் மயன் என்னும் திராவிடச் சிற்பியே என வியாசர் கூறுகிறார். ஆலயங்களில் வைக்கப்பட்டிருக்கும் பலவகையான கடவுட்சிலைகள் எல்லாம் தமிழ்ச் சிற்பிகளின் கைவேலைகளே'' *(பக் 161)*.

தமிழர்களின் திருக்கோயில்கள், கலைக் கூடங்களாகும். அவை சார்ந்து வளர்ந்தவையே சிற்பம், இசை, நாட்டியம் மூன்றும். இவை எந்த மொழியில் எழுதி வைக்கப்பட்டிருந்தாலும் அவை தமிழர்உடைமைகளே. இவை 'தமிழை' விட்டுவிட்டவை அல்ல; தமிழிடமிருந்து பறிக்கப்பட்டவை. இவற்றை இனித் தமிழ் மீட்கும்; தமிழ் வெல்லும். ஆயிரக் கணக்கான இளைஞர்கள் இன்று, தமிழின மீட்சிக்கு எழுச்சிகொண்டுள்ளனர். தமிழையும் தமிழுணர்வையும் தமிழனின் பண்பாட்டையும் எதிர்க்க, அழிக்க நினைப்பார் இனியேனும் நடுவுநிலைக்குத் திரும்ப வேண்டுகிறோம். ஒரு பக்கவாதம் வேண்டாம். அஃது உங்களை பாதிக்கக் கூடும். 'எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு, தமிழகத்தில்

வாழ்ந்துகொண்டே செய்ந்நன்றி கொல்வார்க்கு உய்தி இல்லை'. எமது வள்ளுவத்தின் மந்திரமொழி இது.

## தமிழ் அருச்சனை, வழிபாடுபற்றி ஆகமங்கள் மறுக்கின்றனவா? தமிழ்மொழி மந்திரச்சொல் ஆகாதா?

ஆகமங்களைச் சொல்லி அச்சுறுத்துபவர்கள், 'அவை பற்றி வெளியே சொல்லக்கூடாது; வெளிப்படச் சொன்னால் புனிதம் போய்விடும்'' என்றும் சொல்கின்றனர். அறிஞர் சீனிவாசர் கருத்தை முன்பே எடுத்துக் காட்டினோம். வேதங்களை மட்டுமே பிராமணர்கள் தான் படிக்க வேண்டும்; கேட்கவேண்டும். ஆகமங்களை யாரும் படிக்கலாம். அவை மக்களுக்குப் பொதுவானவை என்பார் அவர்.

'குட்டு' வெளிப்பட்டுவிடும் என்று இவர்கள் தடுமாறுவது, வெட்கப்படத்தக்கது; நகையாடலுக்குரியது.

உங்களுக்கு மான உணர்ச்சி என்று ஒன்று இருந்தால், வெளியே வாருங்கள்; ஆகமங்களும் அவற்றின் உள்பொருள்களும் தமிழருடையன அல்ல - அதனால் எல்லாம் வடமொழிமூலமே நடைபெற வேண்டுமென்று, ஆகமங்களிலிருந்து அகச்சான்று காட்டி நிறுவுங்கள்.

ஆகமங்கள் அருச்சனை பற்றியோ, அருச்சனை மொழி பற்றியோ எதுவுமே குறிப்பிடவில்லை. ''அர்ச்சனை என்பது ஆகமம் கூறாத ஒன்று. தனிமனிதர் இறைவன் புகழ்பாடி மலர்கொண்டு அவனை அர்ச்சித்தலே அதுவாகும்'', என்பது அறிஞர் அ.ச.ஞா. கூற்று. (136).

## தமிழும் தேவமொழியே - தெய்வமொழியே
## வடமொழியை மட்டும் தேவபாசை என்பது தவறு

''வடமொழியே தேவபாசை என்றும் சமயச் சடங்குகளிலும், வழிபாட்டிலும் அம்மொழியே பயன்படு மென்றும் ஒருகாலத்தில் அனைவராலும் சொல்லப் பட்டது. மக்கள் அறிவை மூடிய மாய இருள் அகற்றப்பட்டு விட்டது. தமிழ்நாட்டில் தமிழ் தேவ பாசையாகவுளது; ஆக முடியும் என்று நாம் நெஞ்சுயர்த்திக் கூறலாம். தேவ பாசை மட்டுமன்று; தமிழ் வட மொழியைத் தனக்கு ஒரு வேலைக்காரத் தோழியாக, துணையாகக் கொண்டதென்றும் சொல்லலாம். ஏனெனில் சமற்கிருதம் தொடர்ந்து அல்வாறே இருந்து வந்துளது. நாம் சமற்கிருதத்தை, வேலைக்கமர்த்திக் கொள்வோம்; அதைப் புகழவும் செய்வோம். ஆனால் இது தாய்மொழியை அழுத்துவதற்கு இதனைப் பயன்படுத்த லாகாது; கூடாது; முடியாது என்று, தம் நெஞ்சுநிறைந்த உணர்வை அறிஞர் மு.அருணாசலனார் கொட்டுகிறார் (x). அவர் வடமொழி கற்றவர்; அதன் சார்பாகவும் எழுதுபவர். சிலர் கூறுவதுபோன்று 'குறுகிய பார்வை' உடையவர் எனக் கருத இடம் தராதவர். தமிழன் தமிழை வற்புறுத்துவது 'குறுகிய பார்வை' ஆகாது; தமிழ்நாட்டில் இருந்துகொண்டே தமிழ்மொழிக் கல்வி, இசை, வழிபாடுகளை மறுப்பவர்களே குறுகிய பார்வை யுடையவர்கள். அவர்கள் குறுகிப் போகும் காலம் அண்மையில் உளது. தம்மை ஒரு நடுநிலையாளர் எனக் காட்டிக்கொள்வதிலேயே, நாட்டமுடையவராயிருந்த மு.அருணாசலனார் எழுதுவன, அவர் ஒரு 'தமிழனாகப்' பிறந்த உணர்வின் விளைவாகும்.

**Time was when every one went about saying that Sanskrit was the deva-bhasha and only a Sanskrit approach can qualify one for worship and evolution in his religious aspirations. But the film that clouded people's understanding has been removed and we can boldly declare that in Tamilnad Tamil can be and is a deva-basha, if not the only deva-basha, and that Tamil can have also Sanskrit as a complement or a handmaid to it as Sanskrit had always been. We are prepared to employ Sanskrit and extoll it but this does not and cannot of course be on the suppression of the mother tongue (p.x).**

அறிஞர் மு.அருணாசலனார் ஆகமங்களும் அருச்சனையும் பற்றிய, ஒரு குறிப்புரையோடு, தமது 'சிவ ஆகமங்கள்' பற்றிய ஆங்கில நூலை நிறைவு செய்கின்றார்.

அதன் ஆங்கிலப் பகுதி முழுதும் கீழே தரப்படுகிறது. அதன் சாரம் வருமாறு: அருச்சனை மொழி பற்றி ஒரு குழப்பமான நிலை நிலவுகிறது. இது ஆகமங்கள் பற்றி அறியாமையால் நிகழ்கின்றது. பூசை இருவகைப்படும். ஆத்மார்த்த பூசை தனிமனிதன் தனக்காகச் செய்வது. பரார்த்த பூசை, பொதுவில் மக்களுக்காகச் செய்யப்படுவது. தெய்வப் பெயரைச் சொல்லி, மலரையோ குங்குமத்தையோ திருவடிகளில் போடுவது அருச்சனை எனப்படுகிறது. 108, 300, 1000 என வரும் இது, 'ஓம் தாயே போற்றி' என்பதுபோல், அமைவது. பூசை வேறு; அருச்சனை வேறு. 16 வகை உபசாரங்களைச் செய்வது பூசை; அருச்சனை கடவுள் வணக்கம். இவை புராண வழிப்பட்ட, இறைவன் பெயர்களைச் சொல்லிப் போற்றுகிறது. விஷ்ணுபுராண விளக்கவுரையில் விஷ்ணு சகஸ்ரநாமம் வருகிறது. கணேச புராணத்தின் உரையில் கணபதி சகஸ்ரநாமம் வருகிறது.

இதுபோலவே லலிதா சகஸ்ரநாமமும் வருகிறது. இவை புராணத் தொடர்புடையவை. ஆகமத்திற்கும் பூசைக்கும் இதற்கும் தொடர்பில்லை. இவை கடவுள் வணக்கப் பாடல்கள். ஆகமப்படி சிவன் கோயிலில், எந்த மொழியிலும் வழிபடலாம். ஆமகங்களில் எந்த இடத்திலும் சமற்கிருதத்தில்தான் சொல்லவேண்டுமென்று கூறப்பட வில்லை. மாறாகத் திராவிட பாசையில் - தமிழில் வழிபடலாம் எனும் குறிப்பு உளது. இந்தியமொழி எதன் மூலமும் கும்பிடலாம். அங்கங்குள்ள அவரவர் மொழியில் வழிபடலாம் என்பதே ஆகம விதி. இந்த வழிபாடு, பூசை பற்றிய குறிப்பு வேறு; அர்ச்சனை பற்றிய குறிப்பு வேறு. பூசைகளையே எந்தமொழியிலும் செய்யலாம் என்பது ஆகமவிதியாகவே, அருச்சனையை அவரவர் தாய்மொழியில் செய்வதில் தடையே இல்லை. பூசை பற்றிக் கூறும் ஆகமம் அர்ச்சனை பற்றிச் சுட்டிக் கூறவில்லை. புராண வழிப்பட்ட, போற்றி அருச்சனைகள் தமிழ்நாட்டில் தமிழில் மட்டுமே செய்யப்பட வேண்டு மென்பதே, ஆகமம் மூலம் நாம் உய்த்துணரக்கூடிய செய்தி. இதை அறியாதார், தமிழில் செய்தால் 'தீட்டு' என்று புலம்பி அழுவதையும், கதறித்தீர்ப்பதையும், கர்ச்சனை புரிவதையும் இனியேனும் விட்டுவிட வேண்டுகிறோம்.

ஆங்கிலத்தின் முக்கிய பகுதி நூலில் உள்ளவாறே கீழே தரப்படுகிறது :

**A note on Agama and archanas**

**Much has been written in newspapers and spoken on platforms in 1982 on this subject but unfortunately all that has been done without an actual reference to what is prescribed in the**

Agamas and without an actual understanding of what an Archana is. As there is a lot of confusion in popular understanding in the matter, we shall try to explain the subject here briefly.

Puja as laid down in the agamas is of two categories- atmartha puja and parartha puja.

Parartha puja according to the agamas is the puja in the temple performed (to the Siva linga installed there) by the competent person at specified hours in the day, with a larger number of accessories, for the benefit of the community.

Now in popular lore today in Tamilnadu, archana has come to mean the dropping of a flower or of kumkum (for a Sakti deity) at the feet of the deity to the accompaniment of the utterance of a name of the deity. The names are in several groups such as 108 (ashtottara) 300 (trisati) and 1000 (sahasranama). The utterance of each name is preceded by the pranava OM and is succeeded by the term nama, which means 'I salute the deity (having this name)'. This utterance is always done after the temple puja is completed and after the priest had offered the mantra pushpa at the feet of the deity. This kind of utterance of the name (in the form of eg. OM Sri Matre namah (I salute the Mother Sri Matru i.e., Sakti as Lalita) is no where mentioned or prescribed in any agama. This form of worship is born out of the desire of the worshipper to please the deity by his homage to the deity in its various names. The priest is agreeable to this type of worship and this is done in the name of archana; but this is not archana at all (because archana is puja beginning from Avahana and ending with Visarjana and having in the process the 16 upacharas). These so-called archanas are all puranic in character and not agamic. Some of them found in puranas have become prominent because of the importance of the commentaries written on them by eminent authorities. Chief among these prayers or sahasra namas (1000 names) are there:

1. Vishnu sahasranama found in the Vishnu purana, commentary by Sankara.

2. Ganapati sahasranama found in the Ganesa purana, commentary by Bhaskararaya; and

3. Lalita sahasranama, on Sakti as Lalita the destroyer of Bandasura legend and sahasranama found in the Brahmanda purana, commentary by the same Bhaskararaya.

Hence we call these puranic and we call them not agamic and not puja. They are mere prayers. And prayers to the Lord Siva in the temple may be said or offered in any language according to the Agamas. The agamas no where say that prayer (which in fact the sahasranamas are) can be said only in the Sanskrit language - vide Kamikagama, Purva bhaga, chapter 4, Archana vidhi patala, slokas 438-9;

> Urdhvam dravida bhashangam ganam nrutta yutam tu va
> Samskritanapabhramsam nanasvara samanvittam
> yadashtadasa bhashoktam ganam va parikalpayet.

"Then let the prayers of the Dravida (Tamil) bhasha be sung, along with dance recital; and let there be singing in Sanskrit, with all svaras and without wrong pronunciation; and then let the prayers in all the 18 languages also be offered".

This does not require any explanation. Tamil prayers (i.e., name-offerings) must be offered and if in Sanskrit, we should be careful about svaras; wrong pronunciation of the words should be guarded against. Not only these, but prayers in all the Indian languages may be offered. This settles the question. The agama lays down that prayers should be offered in the local languages. If we know that the sahasranama archana and the like are not puja but are only prayers, there can be no objection to reciting them in the Siva temples etc. in the deities presence in the local language. Now we believe two points have been made

**clear in the respect of Sahasranama archana and the like in Tamil nadu:**

1. **This sahasranama etc. archanas are not mentioned in the agamas at all and they are all only a sort of prayer.**
2. **They can be done, according to the agamas, in the mother tongue and in the other local languages.**

பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள் புதிய முறையில் இதை அணுகுகிறார். வேத வேதியர், சிவவேதியர் என இரண்டாக வேதியர்குலம் பிரிந்ததை, மிக விரிவாகவும் தெளிவாகவும் அவர் தமது 'பெரியபுராணம் - ஓர் ஆய்வு' எனும் நூலில் விளக்கியுள்ளார்.

அத்துவைதம் என்று உருவ வழிபாட்டை மறுத்தவர்களுக்கு முன்பிருந்தே, பிழைப்பு வாய்ப்புக் கருதி, வேதியர் பலர் திருக்கோயில் வழிபாட்டிற்குள் நுழைந்திருந்தனர். ஆனால் அவர்கள் காலத்தும் அதற்கு முன்பும், 'குறிப்பிட்ட ஓர் இனத்தார்தான் தெய்வப் படிமங்களைத் தொட்டு வழிபட வேண்டுமென்ற கட்டுப்பாடு இருந்ததாகத் தெரியவில்லை' என்பார் அ.ச.ஞா. அவர் மேலும் விளக்குவன பல.

செந்தமிழர் தெய்வமறை நாவர்
செழுநற்கலை தெரிந்தவரோடு
அந்தமில் குணத்தவர்கள்
அர்ச்சனைகள் சொல்ல
அமர்கின்ற அரனூர்...

என்பது திருஞானசம்பந்தர் பாடல். ''செந்தமிழர், தெய்வ மறை நாவர், செழுங்கலை தெரிந்தவர்கள், அந்தமில் குணத்தவர்கள் என்ற இந்த நான்கு தொகுப்பினுள்

அனைவரையும் அடக்கிவிடமுடியும். அப்படியானால், இவர்கள் யாவரும் அர்ச்சனைகள் செய்கிறார்கள்என்றால், தாமே நேரில்நின்று சிவாச்சாரியின் உதவி இல்லாமல் அர்ச்சனை புரிகிறார்கள் என்றுதானே பொருள்கொள்ள வேண்டியுளது. நான்கு வகையானவர்களைப் பிள்ளையார் குறிப்பிட்டிருப்பினும் இவர்கள் அனைவரும் இந் நாட்டினராகிய தமிழர்களே யாவர் என்றுதான் கொள்ள வேண்டும். செந்தமிழர் என்பார் தமிழ் மட்டும் அறிந்தவர்கள். தெய்வமறை நாவர் என்பார் தமிழராகப் பிறந்தாலும்வேதியராகையால்தெய்வமறை பயின்றவர்கள். செழுங்கலை தெரிந்தவர்கள் என்பார்தமிழ்ப் புலமையோ, வேதப்பயிற்சியோ இல்லாமல் நல்ல கலை வல்லுநர்களாவர். அந்தமில் குணத்தவர் என்பார் இத் தொகுப்பு எதனுள்ளும் சேராமல் நல்லொழுக்கம் பண்பாடு என்பவற்றை உடைய துறவிகளாகலாம். இந்த நான்கு கூட்டத்தாரும் அர்ச்சனை செய்கிறார்கள் என்று கூறுவதால் சிவவேதியர் தாம் இப்பணியைச் செய்ய வேண்டும்என்ற வரம்பு ஞானசம்பந்தர் காலத்து இல்லையோ என ஐயுற வேண்டியுளது'' *(135)*.

பல்லவர்கள் காலத்தில், வைதிக வழியில் பற்றுக் கொண்ட அவர்கள், ''இத்தமிழர்களின் வழிபாட்டுமுறை, பக்திநெறி நேரே சென்று அபிடேகம், அர்ச்சனை செய்தல், தாய்மொழியிலேயேவழிபாடுசெய்தல் என்பவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருத வேண்டியுளது''. இங்கிருந்த வேதியர்கள் தமிழிலும் ஐந்தெழுத்து மந்திரத்திலும் நம்பிக்கையுடையவர்களாதலால், தமிழில் வழிபடலாம் என்பதை நம்பி ஏற்றிருப்பர். ஆயினும் பல்லவர்கள் புதிதாக 'இறக்குமதி' செய்த - புதிய பிராமணர்களாலேயே,

வடமொழியில் மட்டுமே அருச்சனை, வழிபாடு என்ற வழக்கம் தோன்றியிருக்க வேண்டும்; அச்செல்வாக்கால் இங்கிருந்தசிவவேதியர் - சிவாச்சாரியார்களும் வடமொழிக்கு மாறியிருக்க வேண்டும் என்ற அ.ச.ஞா.வின் யூகம் பொருத்தமானதே *(138)*.

## தமிழால் வழிபடுதலை எதிர்த்த புதிய பார்ப்பனர்கள்

''பல்லவர்க்கு முன்னர்க்கூட வேதியர் என்ற காரணத்தாலும் வேதம் அறிந்தவர்கள் என்ற காரணத்தாலும் பஞ்சாட்சரத்தை ஏற்றுக்கொள்ளாத, வைதிக நெறிப்பட்ட வேதியர்கள் தொழில் முறையில் கோயில்பூசைசெய்யும்தொழிலை மேற்கொண்டிருந்தனர். தமிழ்நாட்டில்திருச்செந்தூர்முதலிய கோயில்களில் இன்றும் பஞ்சாட்சரத்தின் தலைமைத் தன்மையை ஏற்காத ஸ்மார்த்த பிராமணர்கள் பூசகர்களாக இருப்பதைக் காண்கிறோம். இதுகண்டு பொறாத திருமூலர்

*பேர்கொண்டபார்ப்பான்பிரான்தன்னைஅர்ச்சித்தால்*
*போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லாவியாதியாம்*
*பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமும் ஆம் என்றே*
*சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே*

என்று எச்சரிக்கை செய்கிறார்''. அ.ச.ஞா. கூறியபடி தில்லைத் தீட்சிதர்களும் தமிழைப் புறக்கணிப்பவர்களே. கேரளத்தில் இத்தகையவர்கள் மிகப்பலர் உளர். இவர்கள் அனைவரும் மனிதத் தீண்டாமையோடு, மொழித் தீண்டாமையை வளர்க்கும் தன்மையராவர். சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டதை முன்னர்ச் சுட்டிக்

காட்டினோமல்லவா? அத்தகைய நல்லபாம்புகளின் கடியால் விளையும் நஞ்சு இந்த நாட்டைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. பாவேந்தர்பாரதிதாசன், ''நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு, நம் உரிமைதனைக் கடித்தது அப்பாம்பு'' எனப் பாடியிருப்பது, விவேகானந்தரின் கூற்றுடன் ஒத்திருப்பது காணலாம்.

பிராமணரின் பெருமையை விளக்குவதற்காகவே புராணங்கள் எழுதப்பட்டன என்பார் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (214). அது மட்டுமன்று; தலங்களுக்கு 'விசேடம்' பலகூறி, தீர்த்தங்களில் முழுகினால் பாசம் நீங்குமென விளக்கி, தங்கள் மூலம் எந்தப் பாவத்திற்கும் பரிகாரம் தேடிக்கொண்டு விடலாம் - பொன்னும் பொருளும் செலவழித்தால் செய்த பாவ மெல்லாம் போய்விடும் என்று ஊக்கப்படுத்தினர். சாதகம் கணிக்கும் அல்லது இராசிபலன் பார்க்கும் பழக்கத்தை வளர்த்து, எந்தக் கிரகதோஷத்திற்கும் தங்களிடம் சடங்குகள், ஹோமங்கள், பரிகாரங்கள் உள்ளன என்று கூறிப் பொதுமக்களைக் கவர இப் புராணங்களும் விளக்கவுரைகளும் மிகவும் பயன்பட்டன. வடமொழி மந்திரங்களே புண்ணியம் தருமாம்; முக்கியமாகப் பாவம் நீங்க உதவுமாம். எவ்விதப் பாவம் செய்பவனும் ஒரு புரோகிதனை அணுகினால், வடமொழி மந்திரச் சடங்குகள் மூலம் அதனின்றும் தப்பித்து விடலாமாம். இந்த மூடநம்பிக்கையே, இன்று தமிழ்மூலம் வழிபடவும் வாழ்வியற் சடங்குகளைச் செய்யவும் தடையாகவுளது.

''பல யாகங்களை இயற்றித்தான் தேவப் பதவி அடையலாம். அசுவமேத யாகம் செய்தவனே இந்திரப்

பதவி அடையலாம் என்று கூறுபவர்கள் எதிரே எனது பத்துப் பாட்டையும் பாடுபவர், 'வானில் அரசாள்வர் ஆணை நமதே'; 'இமையோர் அந்த உலகெய்தி அரசாளும் அதுவே சரதம், ஆணை நமதே' என்று கூறும் துணிவுடைய புரட்சியாளர் அவர்'',

என்று திருஞான சம்பந்தரைப் பற்றி, அ.ச.ஞானசம்பந்தர் கூறுகிறார் *(308, 309)*. இவ்வுலகில் எல்லாச் செல்வமும் நன்மையும் அடையத் தமது தமிழ் மந்திரப் பதிகங்களே உதவுமென அவர் சுட்டிக்கூறியுள்ள அனைத்தையும் தொகுத்து, மக்களிடையேதமிழின்மீது நம்பிக்கை உண்டாக்க வேண்டும்.

**யார் இந்த சிவாச்சாரியார்கள்?**

சிவாச்சாரியார்களும் பட்டாச்சாரியார்களும் தூய தமிழர்களே. இவர்கள் தவறுதலாக இன்று தங்களையும் பார்ப்பனர்கள் (ஆரியர்கள்) என்று எண்ணிக்கொண்டு, தடுமாறுகின்றனர். மறைமலையடிகள் முதல் திரு.வி.க. வரைஇவர்கள்தமிழ் அந்தணர்களே என்று நிறுவியுள்ளனர்.

வடநாட்டிலேயேஆரியர் தமிழ்மயமாயினரென்றும் அவர்கள் தென்னாடு போந்து, தமிழறிஞரிடம் கற்றுத் தமிழராயினர் என்றும் கூறுவர் ந.சி.கந்தையாபிள்ளை *(199)*. ''தென்னிந்தியாவிற் காணப்படும். பிராமணரிற் பெரும்பாலோர்தமிழர் என்பதில் சந்தேகமில்லை'' *(200)*.

சிவாச்சாரியர், சிவவேதியர், குருக்கள்மார், ஆதிசைவர், பட்டர்கள், படடாச்சாரியார்கள் யாவரும் பிராமணரே அல்லர். வடநாட்டவர்க்கும் கற்பித்த இவர்கள்,

**The Sivacharyas should be trained to be not only agamic scholars but profound scholars in the Tamil religious books and philosophy, the Saiva Tirumurai and Siddhantha Sastras, and helped to occupy the exalted place that is really an acharya's. The Sivacharya, imitating the smartha brahmin imagines that he has no duty to Tamil. This is bad and even suicidal. He must be trained in the Tamil Devaram and other Tirumurai songs, and made to recite them in the divine presence during worship, as the Nayanmar did in the past, attracting and satisfying the congregation (67).**

தமிழகத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட, இவ்வாறு ஒரு வழிகாட்டிய, அறிஞர் மு.அருணாசலனார் கருத்தை நம் சிவாச்சாரியர்களும் பட்டாச்சாரியர்களும் ஏற்க வேண்டுமென, அன்புடன் வேண்டுகிறோம்.

தமிழ்,தமிழினமறுமலர்ச்சிக்கு, இறைவழிபாட்டில் ஏற்படும் திருப்பமே அடிப்படை அமைக்கும். கி.பி.ஏழாம் நூற்றாண்டில், பக்தி இயக்கமே தமிழைக் காத்து, மீட்டுத் தந்தது. இன்றும் அந்த பக்தி வழியில் தமிழின் மீட்சிக்கும் தமிழின மீட்சிக்கும் பாடுபடுவதே சிறந்த அற வழியாகும். இதனை ஒவ்வொரு தமிழரும் மனங் கொள்வர் என எதிர்பார்க்கிறோம்.

## வேதத்தை, வேள்வியை, வடமொழியைப் பாராட்டிப் புகழும் திருமுறைகள் எவ்வாறு ஆகமத்திற்கு முரணாகும்?

ஆகமங்களும் வேதமும் ஒன்றுக்கொன்று முரண் பட்டவை; ஆகமவழி வேறு வைதிக வழி வேறு; ஆகமங்கள்வடமொழியிலிருந்தாலும்அதன் உள்பொருள்கள் தமிழருடையன - இவ்வாறு பேரறிஞர் பலரை மேற்கோள்

காட்டி இதுகாறும் விளக்கப்பட்டது. அங்ஙனமாயின், தமக்கு முரண்பட்ட வேதத்தையும் வேள்வியையும் வட மொழியையும், இத்திருமுறைகள் திரும்பத் திரும்பப் போற்றிப் புகழ்வானேன்? இவை குழப்பமாக உள்ளனவே.

ஆகவே நாம் வடமொழியை ஏற்றுத்தான் ஆக வேண்டும். வேதமும் வேள்வியும் திருமுறையாளர்க்கு உடன்பாடே. அதுபோல ஆகமநெறியும் வடமொழி நெறியே. நாம் ஆகம விதிப்படி அமைந்த கோயில்களில், ஆகமப்படி வடமொழி மூலமே அனைத்துச் சடங்கையும் செய்யவேண்டும். இவ்வாறு வலியுறுத்த, இம் முரண்பாடு இடம் தருகிறதே?

இதற்கு என்ன விடை?

சங்க காலத்திலேயே வேதமும் வேள்வியும் பாற்றப்பட்டன. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனும் பெயர்களே இதை உணர்த்தும். தொல் காப்பியத்திற்குத் தலைமை ஏற்ற அதங்கோட்டா சான் 'நான்மறை முற்றியவன்' எனப் பாயிரம் கூறுகிறது. திரிபுரம் தீமடுத்த, மணிமிடற்று அண்ணல் ஆறறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்ததாகக் கலித்தொகை பாடுகிறது. காரைக்காலம்மையார், சிவபெருமானை

வேதியனை வேதப் பொருளானை வேதத்திற்கு
ஆதியனை

என்று பாராட்டுகிறார். திருமாலும் 'இருக்கு இலங்கு திருமொழிவாய்' உடையவன் என்று திருமங்கை மன்னனால் பாடப்பெறுகிறார்.

'நல்லுயர் நான்மறை நாவன்
நற்றமிழ் ஞான சம்பந்தன்'

'தழங்குஎரி மூன்று ஓம்புதொழில்
தமிழ்ஞான சம்பந்தன்'

இத்தொடர்களே முரண்பட்டவை போலத் தோன்றுகின்றன. மறைவல்லவன்; அதேசமயம் நற்றமிழ் ஞானசம்பந்தன் - எவ்வாறு பொருந்தும்?

திருஞானசம்பந்தர் 'வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறைவிளங்க'த் தோன்றியதாகப் பெரிய புராணம் கூறுகிறது. மேலும், 'சேய பொருள்திருமறையும் தீந்தமிழும் சிறக்கவரும் நாயகனை'த் தாலாட்டியதாகவும் வருகிறது.

இவை போல்வன தமிழர்கள் முற்கூறிய வடமொழி சார்ந்தஅனைத்தையும்ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பதையே, திரும்பத் திரும்ப நவில்கின்றன.

## முற்கால வேதத்திலேயே சிவன் நுழைந்த வரலாறு

ஆரியர்களுக்கு அக்கினி வழிபாடே உண்டு. அவர்கள் உருவ வழிபாடற்றவர்கள். தொடக்க கால வேதங்களில் 'உருத்திரன்' மட்டுமே பேசப்படுகின்றான். 'வேள்விகளை விரிவாகக் கூறும் வேதங்கள் சிவபிரான் என்ற ஒருவனைக் கனவிலும் கருதவில்லை'

'வேதத்தில் காணப்பெறும் ருத்ரனே பிறகு ருத்ர சிவனாக ஆயினான் என்று வேத ஆய்வாளர் கூறுவர்' *(அ.ச.ஞா.பக் 15)*

கருதாத வேத வழக்கொடுபட்ட சமயம் இவ்விரண்டிலும் ஓரளவு மாறுதல்களைச்செய்துதன்னுள்பெய்துகொண்டது'.

இவ்வாறு வேதத்தை மீறிச் சிவ வழிபாடு, பிற்கால வேதங்களில் இடம்பெற்றதால், அக்காலத்தில் வட நாட்டிலேயே, சிவ வேதியர் என்பார் தனியே பிரிந்தனர். அறிஞர் சீனிவாசர் குறிப்பிடுவதுபோல் தென்னாட்டிற்குத் துரத்தப்பட்டவர்களும், தமிழக வேந்தர்களால் அழைக்கப்பட்டு வந்தவர்களும் இச் சிவ வேதியர் அல்லது திருமால் வேதியரே ஆவர்.

இங்கு அவர்கள் மீண்டும் கலப்புற்றுத் தமிழ் வேதியரேயாயினர். இங்கிருந்த அறிவுடை வல்லுநர் பலரும் தாமும் அந்தணரே எனப் பெருமை தேடினர்.

அறிஞர் சீனிவாசர், 'பல இராட்சதர்கள், மிகப் பெரிய பிராமணர்களானதையும், அவர்கள் வேதங்கற்று அதில் வல்லுநர்களானதையும் சடங்குகளைச் செய்யும் புரோகிதர்களானதையும் தம் நூலில் சுட்டியிருப்பதை முன்னரும் குறித்துள்ளோம்.

**Moreover many Raksasas became great Brahmanas, expert students of the Veda and performers of austerities (p.51)**

தமிழக அறிவன்மார், கணியன்மார், ஆசான்மார், அந்தணர் (துறவியர்) யாவரும் பிராமணர்களாயினர் என்றே கருதவேண்டியுளது. இன்று அவர்கள் எங்கே உளர் எனத் தேடுதல் அரிது.

புறம் 166ஆம் பாடல் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியது. அது 'முது முதல்வனாம்' சிவனை எண்ணிச்

செய்த வேள்வியைக் குறிப்பிடுகிறது. இவற்றால் தமிழ் அந்தணர்களாம் இவர்கள், வடமொழியில் செய்தாலும் தங்கள் கருத்திற்கிசைந்த, தமிழரின் கடவுளரை முன்னிறுத்துகிற வேதங்களையே போற்றிப் பாடினர் என அறிகிறோம். இவ்வகையில், இத்தமிழ் நெறிக்கு உட்பட்ட வேத வகைகள், ஆகமங்கட்கு இணைந்து போய், தமிழர்களால் போற்றப்படலாயின. இந்த நிலை பக்தி இயக்க காலம் வரை நீடித்து, பெரிய புராணத்தும் போற்றப்பட்டமை காண்கிறோம்.

### கொள்கை இல்லாக் கூட்டணியும் ஒரு காரணம்

சமணரும் பௌத்தரும் வைதிகத்தையும் வேள்வியையும் கடுமையாக எதிர்த்தனர். அவர்கள் இருவரையும் எதிர்க்க, வைதிகர்களுக்கு, சிவன் திருமால் வழிப்பட்ட தமிழர் சமயங்களின் துணை தேவைப்பட்டது. தமிழர்களும் தங்களுக்குப் புறம்பான மொழி, பண்பாட்டுடன் வந்த சமண பௌத்த மதங்களை விரட்ட, நான்கு வேதங்களையும் ஏற்பதுபோல் காட்ட வேண்டியிருந்தது. நற்கொள்கை பலவுடைய சமண பௌத்த சமயங்கள் 'மொழி' வேறுபாட்டால் மட்டுமே தமிழரால் ஏற்கப்படாவாயின. கடும் நோன்புகளும் ஒரு காரணம். பிற்பாடு அச்சமயங்கள் தமிழை ஏற்றாலும் காலூன்ற மாட்டாது போயின. வைதிகம் தொடக்கத்தில் தமிழை மறுக்கவில்லை. அதனால் தமிழ் நூல்களில் எல்லாம் வடமொழியும் வேதமும் வாயளவில்தான் போற்றப்பட்டன. அவ்வேத வழக்கையோ, வருணா சிரமத்தையோ, தமக்குத் தொடர்பற்ற சடங்குகளையோ தமிழ்நூல்கள் ஏற்கவில்லை. வேதங்களை வாழ்த்திப்

பாராட்டிப் பாடிக்கொண்டே, தமது சமய உண்மைகள், சடங்குகள், வழக்கங்களையே நிலைநாட்டினர். அறிஞர் அ.ச.ஞா. இதைத்தான் ‘வேத வழக்கை மறைமுகமாக’ எதிர்த்தனர் என்பார். திருஞான சம்பந்தர், வேதத்தைப் பாராட்டிக்கொண்டே, அதைக் காலூன்றவிடாமல் ‘மடைமாற்றம்’ செய்தார் என்பார்.

வேதவேதியர்க்குஎதிராகச்சிவவேதியரை ஊக்குவிக்க வேண்டி இருந்தது. இங்கிருந்த தமிழ் வேதியர்களும் வேதம் அறிந்தவர்களே, வேள்வி செய்யத் தெரிந்தவர்களே என்று, பறைசாற்ற வேண்டி இருந்தது. இன்று தமிழக வேதியர்கள் பெரும்பாலோர் தமிழ்ச் சிவ வேதியரே; மாலியம் சார்ந்த வேதியரே. இன்றுள்ள வடநாட்டுப் பிராமணர்களுக்கும் இவர்களுக்கும் எவ்விதத் தொடர்பு மில்லை. அதனாலும் வேத வேதியரை வருணாசிரம வேதியரை முழு மூச்சாக எதிர்க்க வேண்டியும் இருந்தது.

வாய்ப்புக் கிடைக்கும் இடமெல்லாம் நமது நாயன்மார்கள்சிவனை வணங்கும் திருவைந்தெழுத்தைப் புகழ்ந்தது, சிவனை ஏற்காத வைதிகரைச்சாடவே என்பார் அ.ச.ஞா.சம்பந்தர் வாக்கில் தமிழைப் புகழாத பதிகமே இல்லை என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

தக்கன் வேள்வி என்னவாயிற்று? சிவபிரானை ஏற்காது, இந்திரன் முதலிய தேவர்களை அழைத்துச் செய்ததால், வீரபத்திரர் மூலம் அவ்வேள்வி அழிக்கப் பட்டது. தக்கன் வேள்விக் கதை, வேதவேதியர்க்கும் சிவ வேதியர்க்கும் நடந்த போராட்டத்தையும் அதில் சிவபெருமான் கட்சியினர் வென்றதையும் ‘படிமமாக’

குறியீடாக உணர்த்துகிறது. நீண்டகாலப் போராட்டம் கதை (Legend)யான வரலாறு அது.

வேள்வி ஆசைகொண்ட தம் தந்தையாரிடம், சம்பந்தர் 'ஓது மறையோர் பிறிது உரைத்திடினும்' அதை ஏற்காது சிவ வேள்வியையே செய்ய வேண்டுவதையும் உய்த்துணர்க.

'வேதத்தைப் பற்றிக் கூறிக்கொண்டே, அந்த வேதம் உடன்படாத விக்கிரக வழிபாடு, அபிடேகம், அர்ச்சனை, தமிழால் வழிபடுதல் என்பவற்றைப் பிள்ளையார் புகுத்தினார். ஐந்தெழுத்தின் தனிச்சிறப்பை மீண்டும் மீண்டும் எடுத்தோதினார். தமிழின் பெருமையைத் திரும்பத் திரும்பப் பாடி நிலைபெறச் செய்தார்'. சுத்த வைதிகர்கள், ஏகான்ம வாதிகள், பரப்பிரம்ம அத்துவைதிகள் 'சிவாயநம' என உச்சரிப்பதே இல்லையே? 'தென்னாடுடைய சிவனே போற்றி' எனப் பாடுதற்கு முன்வருவார்களா?

இதனை மிக நுட்பமாகச் சைவத்திருமுறைகள் சுருதிகளை வாயளவில் போற்றின என்பார் அறிஞர் மு.அருணாசலம் (... although the saiva books may pay lip service to the smiritis p.viii)

பெரியபுராணத்தில் வரும் நாயன்மார் வரலாறுகள் - புனைவுகள் - சடங்குகள் அனைத்தும் வேத வழக்கிற்கு, முற்றிலும் எதிரானவை. வருணாசிரமத்தை ஏற்காதவை. வடநூல் மரபு அனைத்திற்கும் நேர் எதிரானவை. 'பக்தி மார்க்கம்' ஒன்றையே தூக்கி நிறுத்துபவை. சேக்கிழார் கண்ணப்பநாயனாரையும் சிவகோசரியாரையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ள விதம், வைதிகர்களுக்கு வெறுப்பையும் விரோதத்தையும் உண்டாக்கக் கூடியது. இருந்தும் பல

இடங்களில் அவர் வேதங்களைப் பாராட்டுவார் போலப் பாடவே செய்கிறார். 'தூமறை பாடும் வாயானாகிய சிவனே, தன்னை சொற்றமிழால் பாடு என்றான்' என்பதில் உள்ள, நகையாடல் புகழ்ச்சிக் குறிப்பு (Irony) மிகமிக நுட்பமானது.

சேக்கிழார் கூறும் மனுநீதிச் சோழன் கதை, வடமொழி மனுதரும சாத்திரத்திற்கு எதிராக இங்கு நிலவிய கதையாகும். 'மனு' எனும் பெயரை வைத்தே, ஒரு குலத்துக்கு ஒருநீதி சொல்லும் வடமொழி மனுநீதியை மறுத்த கதை அது. தேர்க்காலில் தானாக ஓடிவந்து, ஆன் கன்று அகப்பட்டு இறந்தது. அப்போது, சோழன் மகன், ''வந்த இப்பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை, அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவதறமே யாகும்'' என்று, எண்ணி, மறையவர் முன் செல்கின்றான்.

ஆராய்ச்சிமணி ஓசை கேட்டு, நடந்ததை அறிந்து வருந்திய மன்னனிடம், மந்திரிகள் ''இதற்காக வருந்துவது தீர்வாகாது; முன்பு கோ வதை செய்தார்க்கு மறை அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்'' என்று கூறுகின்றனர். மன்னன் அவர்கள் பேச்சுக்கு இசைய வில்லை. 'நீங்கள் எல்லாரும் சொல்லிய இச்சழக்கிற்கு, நான் இசைந்தால் தருமந்தான் சலியாதோ?' என்று மறுமொழிந்து, தன் மைந்தனைத் தேர்க் காலில் ஊர்ந்து, ஆன் பட்ட துயரைத் தான் படுகின்றான். இது சைவ சித்தாந்த விதிப்படி, வினைப்பயனைச்செய்தவன் நுகர்ந்தே தீரவேண்டும் என வலியுறுத்தவந்தது. அந்தணர்கள் ஆன் கன்றுபோல் பொன்னாற் செய்து, அதை ஓர் அந்தணனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டால், இப்பாவம் தீருமென, கருத்துக் கூறியிருக்கக்கூடும். ஏதோ ஒரு பரிகாரம்

போதுமென்பது வடமொழி வழக்கு. இன்றைய 'இராசிபலன்' அனைத்தும் பாவம் செய்தவனுக்குப் பரிகாரம் பல சொல்கிறது. அதனால் புதிதாகப் பாவம் செய்ய மறைமுகமாக வழி காட்டுவது போலவும் ஆகிவிடுகிறது. இது வடமொழிக்கு மதிப்பையும் பிராமணர்களுக்கு வருமானத்தையும் தேடித் தருகிறது. சைவ சித்தாந்த நெறி இதுவன்று.

வடமொழியையும் நான்மறைகளையும் போற்றுகிற, வேதநெறி தழைத்தோங்கச் சம்பந்தர் பிறந்தார் எனப் பாடுகிற சேக்கிழார், 'அந்தணர்கள் கூறிய விதிமுறையை' மறுத்துத் 'தருமந்தான் சலியாதோ?' என்று கூறியது ஏன்? அந்தணர்கள் சொன்னபடி செய்ய வேண்டியதுதானே?

சிவநெறி மெய்யியல் தவறாத அத்தமிழ் மனுநீதிச் சோழன் சைவனா? அல்லது இவர்கள் சைவர்களா? ஒரு குழந்தையைக் கொன்றவன், கோயிலொன்று கட்டிக் குடமுழுக்குச் செய்தால், அக்கொலைப் பாவம் தீருமென்பது அவர்கள் சொல்லும் பரிகாரம். இரண்டு வினைகளின் பயனையும் தனித்தனியே அனுபவித்தே தீர வேண்டும்; செய்த தீவினைக்கு வருந்தி அழுது திருந்தி நல்வினைவழி நடந்துதான் அப்பழியினின்றும் விடுபட முடியும்; பரிகாரங்களால் முடியாது என்பன சிவனியம். அறிஞர் பொ.சங்கரப் பிள்ளை இவ்வாறு, சித்தாந்த மெய்யியலை நன்கு விளக்குவார். 'வினைப் பகை வீயாது பின்சென்று அடும்', 'வீயாது அடி உறைந்தற்று' (207, 208) என்பன வள்ளுவம்.

திருமுறைகள் சிவத்தை ஏற்ற மறைகளை மட்டுமே போற்றின. சிவ வேதியரின் சிவ வேள்விகளைப் பாடின. ஆயினும் வேத வேதியரையும், சிவநெறிக்குப் புறம்பான

வேதவழக்காறுகளையும், நெற்றி அடியாய் அடித்துத் தூள்தூளாக்கின. 'ஆழ்ந்து கிடக்கும் கவியுளம் காண்கிலாத' இவர்கள் மேலோட்டமாக, உள்ளவற்றை வைத்துக் கொண்டு முடிவுகள் செய்வது மூடத்தனம் அல்லவா?

சேக்கிழார் திருஞான சம்பந்தரை, ஒரு வேதியர் குலத்தில் பிறந்த, வேதம் அறிந்த, வேள்விகள் பற்றித் தெரிந்த ஓர் அந்தணர் என்பதை மறைக்கவில்லை. ஆனால் அவர் சிவ வேதியர்; ஐந்தெழுத்தை ஓதுபவர், தமிழின்பால் மட்டற்ற பற்றுக்கொண்ட தமிழந்தணர் என்பதை மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறார்.

'மிகுசைவத் துறைவிளங்க' வந்தவர், வேதநெறி அறிந்தவராய் இருப்பது ஒரு சிறப்பன்றோ? எந்த வேத நெறி? சிவவேதநெறி அல்லவா அது? வேள்விக்குப் பொன்கேட்டு வந்த தம் தந்தையார்க்கு, அவர் சொன்ன 'அறவுரையைப்' படித்தால் உண்மை விளங்குமே? 'வேள்வி புரிசடங்கு, விளையாட்டுப் பண்ணைதொறும்' நடத்தும் ஊரில் பிறந்தவர் அவர். அதனால் என்ன?

'சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க' என்பதிலே தான் சூட்சுமம் உளது. சமண, பௌத்த மதங்களை அகற்றத் துணைவந்ததால் வந்த வார்த்தை அது. அந்தணர் ஆகுதி பெருக - என்ற சேக்கிழார், அடுத்த அடியில் 'வண்தமிழ் செய் தவம் நிரம்ப' என்பது ஏன்? 'திருமறையும் தீந்தமிழும் சிறக்கவரும் நாயகன்' - என்றார். ஏன்? தங்கள் சிவநெறிக்கு, வேதத்தை இழுத்து மடைமாற்றம் செய்துவிட்டதால், அதனைச் சிறக்கச் செய்தவராகிறார். அந்தணர் வாழும் விசயமங்கையில், செந்தமிழ் மாலை பாடிச் சிறப்பித்து ஏத்தினாராம். தமிழில் அருச்சித்த

வரலாறு அல்லவா இது? 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய' வாழ்வல்லவா அது?

'திசையனைத்தின்பெருமையெலாம் தென்திசையே வென்று ஏற'

என்பதன், உள்ளுறை பொருள்யாது? வடமொழிக்கு அடிமைப்பட்டால், தென்திசை எப்படி வெல்லும்?

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்றார் மாணிக்கவாசகர். அத் தென்னாட்டுச் சிவனை ஏற்றுக்கொண்டு, பணிந்து இணங்கிவந்த மறையும், மறையவருமே சம்பந்தராலும், ஏனைய திருமுறை ஆசிரியர்களாலும்பாராட்டப்பெற்றனர். கொலைவேள்வியை, சிவவேள்வியாக மாற்றியதை, ஒரு 'மடைமாற்றம்' எனும் அறிஞர் அ.ச.ஞா. திருஞான சம்பந்தரை ஒரு தமிழ்ப் புரட்சி வீரராகக் காட்டுகிறார்.

'அசைவுஇல்செழுந்தமிழ்வழக்கே, அயல்வழக்கின் துறைவெல்ல' - திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்பதில் எல்லாமே அடங்கிவிட்டது. இந்த அயல் வழக்கில், தமிழுக்கு மாறான வைதிக வழக்கும் அடங்கும்.

இன்றைய எழுச்சி, இனிவரும் நாட்களில் 'அயல் வழக்கின் துறையை, அசைவுஇல் செழுந் தமிழ் வழக்கு வெல்ல' வழிசெய்யும் என்பது உறுதி.

ஆகமங்கள் தமிழருடையன; அவை தமிழைத் தடை செய்பவை அல்ல. இடைக் காலத்தே சமற்கிருத வல்லாண்மையால் தமிழ் நூல்கள் பல அழிந்தன.

நம் திருக்கோயில்களில், புதிய வழிபாட்டுநெறி முறைகளைப் புகுத்த வேண்டும். தமிழில் மட்டுமே வழிபாடு, கூட்டுவழிபாடு, மனஓர்மைப்பயிற்சி (யோகம்), திருநெறிய தமிழ் விளக்கக் கூட்டங்கள் எனப் பலப்பல புகுத்தப்படவேண்டும். தமிழ்வழிச் சடங்குகள் பழக்கத்தில் வரவேண்டும்.

இருளிலிருக்கும் நம் மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

குன்றக்குடியில் தொடங்கும் **'தெய்வத் தமிழ் வழிபாட்டுப் பயிற்சிமையம்'** மூலமாக, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு, உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பயிற்சி தந்து பூசகர்களாக்க வேண்டும்.

இவை அனைத்துக்கும் இச்சிறுநூல் ஒரு முன்னுரை மட்டுமே எழுதியுளது. இத்துறையில் விளங்கிய அறிவுடையார் பலரும் முனைந்து, பலப்பல நூல்களை எழுத இந்நூல் தூண்டுமானால் மட்டுமே, இதனாற் பயனுண்டு. தமிழ் வழிபாடு நடைமுறையில் வர, மக்களியக்கம் மலர இந்நூல் வழிவகுக்குமாக!

## துணை நூல்கள்

1. பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், பெரிய புராணம் ஓர் ஆய்வு, *1999*. கங்கை புத்தக நிலையம், *13* தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - *600 017*.

2. யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை, தமிழர் சரித்திரம், *1939* (பழைய பதிப்பு: ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், மதராஸ்).

3. **P.T. Srinivasa Iyengar, History of the Tamils from the earliest times to 600 A.D., Asian Educational Services, New Delhi, Madras** *(மறுபதிப்பு 1995)* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

4. **M. Arunachalam, The Saivagamas, 1983. Gandhi Vidyalayam, Tiruchitrambalam, Mayuram, Taluk 609 204.**

5. **S.K. Pandian, The Hidden Heritage, 1987. Sterling Publishers Private Ltd. New Delhi.**



மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு முடிய அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பாடமொழியும் பயிற்றுமொழியும் ஆகச் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

மருத்துவம், பொறியியல், அறிவியல் உட்பட உயர்கல்வி அனைத்தும் தமிழிலும் தரவேண்டும். தமிழ்வழி உயர்கல்விக்குத் தனிப்பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும்.

தமிழே முழுமையான ஆட்சிமொழியாக வேண்டும். தமிழ் கற்றவர்க்கும் தமிழ் வழி கற்றவர்க்கும் தமிழகத்தில் வேலை வாய்ப்பும் ஊதிய உயர்வும் பதவியுயர்வும் தரவேண்டும்.

தமிழர் கட்டிய திருக்கோயில்களிலும் தமிழர் சடங்குகளிலும் இசையரங்குகளிலும் தமிழே பயன்பாட்டு மொழியாக வேண்டும்.

நடுவணரசு தமிழைச் செவ்வியல் மொழி என அறிவித்து, அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். தேசிய மொழிகளில் ஒன்றாகிய தொன்மைமிக்க தமிழைப் பாராளுமன்ற நடைமுறை மொழியாக ஏற்கவேண்டும். திருக்குறள் இந்தியத் தேசியநூலாக அறிவிக்கப்பட வேண்டும். தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தழைக்க வேண்டும். உலகத் தமிழினம் ஒன்றுபட வேண்டும்.

**தமிழண்ணல்**

*தமிழ்அடிசூடி*